# தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை

## பெருந்தொழில்

### கொள்கை விளக்கக் குறிப்பு

### 2023 - 2024

### மானியக் கோரிக்கை எண். 27

## தங்கம் தென்னரசு

### தொழில் துறை அமைச்சர்

©
தமிழ்நாடு அரசு
2023

# தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை

## பெருந்தொழில்

## கொள்கை விளக்கக் குறிப்பு

## 2023–2024

## பொருளடக்கம்


| வ. எண் | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| | முன்னுரை | 1–22 |
| 1. | வழிகாட்டி நிறுவனம் | 23–86 |
| 2. | தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் | 87–140 |
| 3. | தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் | 141–204 |
| 4. | தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் | 205–222 |
| 5. | தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் | 223–236 |
| 6. | தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம் | 237–250 |
| 7. | தமிழ்நாடு உப்பு நிறுவனம் | 251–262 |
| | முடிவுரை | 263–265 |

# தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை

## பெருந்தொழில்

## கொள்கை விளக்கக் குறிப்பு 2023-2024

## முன்னுரை

**"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்."**

பிறப்பினால் அனைவரும் சமம். செய்யும் தொழிலில் காட்டுகிற திறமையில் மட்டுமே வேறுபாடு காண முடியும் என்றார் **வள்ளுவப் பெருந்தகை**.

2022-23ஆம் நிதியாண்டில், தொழில் துறை, தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை என பெயர் மாற்றம் செய்யப்பட்டது. மாநிலத்தில் முதலீடு மேற்கொள்வோர் மற்றும் தொழில் முனைவோர்க்கான உகந்த சூழ்நிலையை உருவாக்குதல், உற்பத்தி மற்றும் தொழில் நிறுவனங்கள், வர்த்தகம் மற்றும் வணிகம் ஆகியவற்றில் முதலீடு மேற்கொள்வோர்க்கு ஆதரவுச் சேவைகளை அளித்தல் போன்றவற்றில், இத்துறை

மேற்கொண்டு வரும் மேலான பணிகளை இப்பெயர் முழுவதுமாக பிரதிபலிப்பதாக உள்ளது.

மொத்த உள்நாட்டு உற்பத்தியில் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சிக்கு அரணாக விளங்கும் தமிழ்நாடு, அகில இந்திய அளவில் இரண்டாவது பெரிய பொருளாதாரமாகவும் விளங்குகிறது. இதன்மூலம், இந்தியாவின் பொருளாதார வளர்ச்சிக்கு ஒரு மிகப் பெரிய பங்களிப்பினை தமிழ்நாடு அளித்து வருகிறது. 13.74% வளர்ச்சியுடன் (நடப்பு விலைகளில்), தமிழ்நாடு 2022–23ல் 23.49 இலட்சம் கோடி ரூபாய் உற்பத்திக்கு வழிவகுத்து உள்ளது. 2015–19 நிதியாண்டுகளில் அடைந்த அதே வளர்ச்சி விகிதத்தை எட்டியுள்ளதுடன், 2021–22 நிதியாண்டில், 7.99 வளர்ச்சி அடைந்துள்ளதன் மூலம், கோவிட் தொற்றினால் ஏற்பட்ட சரிவை, தமிழ்நாடு தவிர்த்துள்ளது தெளிவாகிறது.

38,837 தொழிற்சாலைகள் கொண்டு, தமிழ்நாடு இந்திய அளவில் முதலிடம் வகிக்கிறது. இதன் மூலம், இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 11.04% மொத்த மதிப்புக் கூட்டலை தமிழ்நாடு வழங்கியுள்ளது. உலகத்தரம் வாய்ந்த துறைமுக உட்கட்டமைப்பின் காரணமாக, அகில இந்திய அளவில், தமிழ்நாடு மூன்றாவது பெரிய ஏற்றுமதியாளராகத் திகழ்கிறது.

ஏப்ரல் 2022 – ஜனவரி 2023 காலகட்டத்தில், இந்தியாவின் மொத்த ஏற்றுமதியில், தமிழ்நாட்டின் பங்களிப்பு மட்டும் 8.96% ஆகும். கடந்த ஆண்டை விடவும், இது 7.57% வளர்ச்சி என்பது குறிப்பிடத்தக்க ஒன்று.

2030ம் ஆண்டிற்குள், தமிழ்நாட்டினை ஒரு ட்ரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதாரமாக மாற்றிட வேண்டும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், ஒரு தொலைநோக்குப் பார்வையுடனான இலக்கினை நிர்ணயித்துள்ளார்கள். தெற்காசியாவிலேயே முதலீட்டாளர்களுக்கு மிகவும் உகந்த முதலீட்டு இடமாக தமிழ்நாட்டை நிலை நிறுத்த வேண்டும் என்ற நோக்கம் ஏற்கனவே தொழில் துறையில் மிக வலுவான நிலையில் உள்ள நமது மாநிலத்தை மேலும் வலுப்படுத்துவது ஆகிய காரணங்களினால், இந்த இலக்கிற்கு அணுகுப்பாதை அமைக்கப்பட்டுள்ளது. பொருளாதாரத்தில் கிட்டத்தட்ட நான்கில் ஒரு பங்களிக்கும் உற்பத்தித் துறை, 2030–31ஆம் ஆண்டிற்குள் US $ 250 பில்லியன் அளவிற்கு ஏற்பட உள்ள பொருளாதார வளர்ச்சி நடவடிக்கைகளை, முன்னின்று இயக்கி வருகின்றது.

அனைத்துத் துறைகளுடனும் இணைந்து பணியாற்றி, ஒருங்கிணைந்த முயற்சிகள்

மேற்கொண்டதன் பயனாக, முந்தைய ஆண்டு 14ஆம் இடத்தில் இருந்த தமிழ்நாடு, 2022ஆம் ஆண்டில் ஒரு மாபெரும் முன்னேற்றம் கண்டு, 3ஆம் இடத்திற்கு முன்னேறியுள்ளது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் துவக்கி வைத்த "நான் முதல்வன்" திட்டமானது, தொழில் துறையில் ஏற்பட உள்ள எதிர்கால மாற்றங்களுக்கு ஏற்ப பணியாளர்களை உருவாக்குவதற்கான ஒரு பாதையை அமைத்துக் கொடுத்துள்ளது. இத்திட்டத்தில் ஏறக்குறைய 120க்கும் மேற்பட்ட தொழிலகங்கள் இணைந்துள்ளன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் நிர்ணயிக்கப்பட்ட இலக்கு, அதாவது உற்பத்தித் துறையில் சுமார் ரூபாய் 23 இலட்சம் கோடி முதலீட்டை ஈர்த்திடவும், 46 இலட்சம் பேருக்கு வேலை வாய்ப்புகளை உருவாக்கவும், இவ்வாறான நடவடிக்கைகள் எல்லாம், தொழில்களை ஈர்த்திட தேவைப்படும் கட்டமைப்புகளை அளித்து உதவுகிறது.

பொருளாதாரத்தின் செயல்பாடு, குறிப்பாக கூற வேண்டுமானால், 2022–23ஆம் ஆண்டில், உற்பத்தித்துறையின் செயல்பாடு, 2030ஆம் ஆண்டிற்குள் இந்த 1 டிரில்லியன் அமெரிக்க டாலர் இலக்கினை நாம் அடைந்திடுவோம் என்ற நம்பிக்கையை ஏற்படுத்துகிறது. அது மட்டுமல்ல,

வரவிருக்கும் ஆண்டுகளில், இத்தகைய விரைவான வளர்ச்சியை உந்துவதற்கு, வணிக சீர்திருத்தங்களை தொடர்ச்சியாக மேற்கொள்ளுதல், அதிக அளவில் ஆயத்த நிலை / தயார் நிலை தொழிற்சாலைகளை அமைத்தல், புத்தாக்கம் மற்றும் முதலீடுகள் போன்ற நடவடிக்கைகளால், உள்ளீடுகளை நியாயமான விலைகளில் வழங்குதல் மற்றும் தொழிலாளர்களை எதிர்காலத் தேவைக்கு ஏற்ப தயார் செய்தல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியது அவசியமாகிறது.

## 1. கண்ணோட்டம்

தொழில் துறையின் ஆண்டு கணக்கெடுப்பில் (ASI) வெளியிடப்பட்ட அறிக்கையின்படி, தமிழ்நாடு தொடர்ந்து அதிக தொழில்மயமான மாநிலமாக முன்னணி இடத்தைத் தக்க வைத்துக் கொண்டுள்ளது. 2019–20ஆம் ஆண்டிற்கான ASI–ன் சமீபத்திய அறிக்கையின்படி தொழிற்சாலைகளின் எண்ணிக்கையில் (38,837) மற்றும் அங்கு பணிபுரியும் தொழிலாளர்களின் எண்ணிக்கையில் (26.63 இலட்சம் தொழிலாளர்கள்), தமிழ்நாடு முதலாவது இடத்தைப் பிடித்துள்ளது. மொத்த உற்பத்தி (ரூ.9.27 இலட்சம் கோடி), நிகர மதிப்பு கூட்டல் (ரூ.1.32 இலட்சம் கோடி) மற்றும் முதலீட்டு மூலதனம் (ரூ.4.3 இலட்சம் கோடி)

போன்ற அளவீடுகளில் மாநிலம் மூன்றாவது இடத்தில் உள்ளது. நிகர மதிப்பு மற்றும் அதிக அளவில் வேலை வாய்ப்பு ஆகிய காரணிகளுக்கு 14.3% பங்களிப்பு அளிப்பதன் மூலம், திறன் மிகுந்த பொருளாதாரம் உள்ள மாநிலமாக தமிழ்நாடு தொடர்ச்சியாக விளங்கி வருகிறது.

அட்டவணை 1 : ASI 2019-2020 இன்படி – முதல் 5 மாநிலங்கள்

(மதிப்பு புள்ளிவிவரங்கள் ரூ. இலட்சம் கோடியில் மற்றும் இதர புள்ளிவிவரங்கள் எண்ணிக்கையில்)

(நிகர மதிப்பு கூட்டப்பட்ட இறங்கு வரிசையில் வரிசைப்படுத்தப்பட்டுள்ளது)

| மாநிலங்கள் | தொழிற் சாலைகள் | நிரந்தர மூல தனம் | முதலீடு செய்யப் பட்ட மூலதனம் | ஈடுபட்ட மொத்த நபர்கள் | தொழிலாளர்களுக்கு வழங்கப் பட்ட ஊதியம் | மொத்த உற் பத்தி | நிகர மதிப்பு உற் பத்தி | மொத்த உற்பத்திக் கான நிகர மதிப்பு சதவிகிதம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| தமிழ் நாட்டின் தரவரிசை | 1 | 4 | 3 | 1 | 1 | 3 | 3 | |
| தமிழ்நாடு | 38,837 | 3.07 | 4.50 | 26,63,069 | 0.35 | 9.27 | 1.32 | 14.3% |
| குஜராத் | 28,479 | 7.49 | 9.62 | 20,68,743 | 0.28 | 16.30 | 1.90 | 11.7% |
| மகாராஷ்டிரா | 25,610 | 4.23 | 6.23 | 20,38,255 | 0.32 | 12.40 | 1.78 | 14.4% |
| கர்நாடகா | 14,169 | 2.25 | 3.11 | 10,81,116 | 0.18 | 5.57 | 0.88 | 15.8% |
| உத்தரப்பிரதேசம் | 16,184 | 1.53 | 2.48 | 11,30,778 | 0.13 | 5.63 | 0.72 | 12.9% |

தமிழ்நாடு பல்வகைப்படுத்தப்பட்ட பொருளாதாரமாக விளங்குவதோடு மட்டுமின்றி, மோட்டார் வாகனம் மற்றும் மோட்டார் வாகன உதிரிபாகங்கள், உணவுப் பொருட்கள், ஜவுளி, ஆயத்த ஆடை, தோல் பொருட்கள், இயந்திரங்கள் மற்றும் பொறியியல் சாதனங்கள், மின்னணுவியல், உலோகப் பொருட்கள், இரசாயனங்கள் மற்றும் இரப்பர் பொருட்கள் போன்ற முக்கிய உற்பத்தித் துறைகளில் தமிழ்நாடு முன்னணி மாநிலமாகத் திகழ்கிறது. இத்துறைகள் மட்டும், தமிழ்நாட்டின் மொத்த உற்பத்தியில் கிட்டத்தட்ட 80% பங்களிப்பு வழங்குகிறது.

அட்டவணை 2 : ASI 2019–2020 இல் தமிழ்நாட்டின் முன்னணித் துறைகள்

(மதிப்பு புள்ளிவிவரங்கள் ரூ. கோடியில் மற்றும் இதர புள்ளிவிவரங்கள்எண்ணிக்கையில்)

| துறை | தமிழ்நாடு தரவரிசை | உற்பத்தி | தமிழ் நாட்டின் தரவரிசை முதலீட்டு மூலதனம் | முதலீட்டு மூலதனம் | இந்தியாவில் மூலதனத்தில் தமிழ்நாட்டின் பங்கீட்டு சதவிகிதம் |
|---|---|---|---|---|---|
| மோட்டார் வாகனம் மற்றும் மோட்டார் வாகன உதிரிபாகங்கள் | 1st | 2,24,241.68 | 1st | 93,646 | 24.58 |
| ஆயத்த ஆடைகள் | 1st | 53,148.76 | 2nd | 20,876 | 31.66 |

| துறை | தமிழ்நாடு தரவரிசை | உற்பத்தி | தமிழ் நாட்டின் தரவரிசை முதலீட்டு மூலதனம் | முதலீட்டு மூலதனம் | இந்தியாவில் மூலதனத்தில் தமிழ்நாட்டின் பங்கீட்டு சதவிகிதம் |
|---|---|---|---|---|---|
| தோல் மற்றும் தொடர் புடைய பொருட்கள் | 1st | 16,607.39 | 2nd | 6,389 | 23.63 |
| ஜவுளி | 2nd | 85,823.55 | 2nd | 44,045 | 18.84 |
| இயந்திரங் கள் | 2nd | 68,815.43 | 2nd | 36,000 | 18.82 |
| கணினி, மின்னணுவி யல் மற்றும் ஒளியியல் தயாரிப்புகள் | 2nd | 39,182.17 | 2nd | 10,286 | 17.2 |
| கட்டுருவாக் கப்பட்ட உலோக பொருட்கள் | 3rd | 25,790.06 | 2nd | 15,083 | 13.41 |
| இரப்பர் மற்றும் பிளாஸ்டிக் | 3rd | 35,718.54 | 3rd | 18,468 | 11.83 |
| இரசாயனங் கள் | 4th | 40,912.96 | 5th | 18,885 | 4.44 |
| பதிவு செய்யப்பட்ட ஊடகங்க ளை அச்சிடுதல் மற்றும் மறுவடிவ மைத்தல் | 3rd | 4,903.46 | 3rd | 2,316 | 11.65 |
| காகிதம் மற்றும் காகித தயாரிப்புகள் | 4th | 10,452.85 | 4th | 8,291 | 9.82 |

மாநிலத்தின் மொத்த மதிப்பு கூட்டல், உற்பத்தி துறையின் பங்களிப்பு 30% ஆக இருந்திட வேண்டும்

என்ற நிலையில், 2021–22ஆம் நிதியாண்டில், 24.47% ஆக இருக்கும் உற்பத்தித் துறையின் பங்கு, இவ்விலக்கை நோக்கி தமிழ்நாடு சீராக சென்று கொண்டிருக்கிறது என்பதை உறுதி செய்கிது. முந்தைய ஆண்டை விட ரூ.2.93 இலட்சம் கோடி ஈட்டியுள்ளதன் மூலம், 2021–22ல் 10.45% வளர்ச்சியினை உற்பத்தித் துறை பதிவு செய்துள்ளது.

**மேலும் ஏப்ரல் – அக்டோபர் 2022 காலகட்டத்தில் தமிழ்நாட்டின் தொழில் உற்பத்திக் குறியீடு (IIP) 152.4 ஆக உள்ளது. சென்ற ஆண்டில் இதே காலகட்டத்தில் இருந்த அளவீடுகளை விட இது 17.7% அதிகம் ஆகும். இதில் குறிப்பிடத்தக்க அம்சம் என்னவெனில், அகில இந்திய அளவில், இக்குறியீடு 134.3 மட்டுமே. அகில இந்திய தொழில் உற்பத்திக் குறியீட்டோடு ஒப்பிடுகையில், தமிழ்நாட்டின் வளர்ச்சி 5.3% ஆக உள்ளது.**

இறுதியாக, பணியமர்த்தப்பட்ட தொழிலாளர்களின் எண்ணிக்கை (22,09,217) மற்றும் வழங்கப்படும் ஊதிய அளவு (34,962 கோடி ரூபாய்) ஆகிய குறியீடுகளில், தமிழ்நாடு முதலிடம் பிடித்துள்ளது. இது, சிறப்பான வாழ்க்கைத் தரம் மற்றும் சீரான வளர்ச்சியை உறுதிப்படுத்துதல் ஆகியவற்றில், தமிழ்நாடு மிகவும் சிறந்து விளங்குவதை உறுதிப்படுத்துகிறது. மேலும்,

இந்தியாவிலேயே தொழிற்சாலையில் பணிபுரியும் அதிக பெண் தொழிலாளர்களைக் கொண்ட மாநிலமாகவும் தமிழ்நாடு விளங்குகிறது. அகில இந்திய அளவில் தொழிற்சாலைகளில் பணிபுரியும் பெண் தொழிலாளர்களில், 43% சதவிகித பங்களிப்பை தமிழ்நாடு வழங்குகின்றது.

## 2. முதலீடுகள்

130க்கும் மேற்பட்ட ஃபார்ச்சூன் 500 நிறுவனங்கள் தமிழ்நாட்டில் அமைந்துள்ளன. உலக அளவில் உபயோகப்படுத்தப்படும் பல பொருட்கள் தமிழ்நாட்டில் உற்பத்தி செய்யப்படுகின்றன. எம்.டபிள்யூ ஹூண்டாய், டெய்ம்லர், டிவிஎஸ், ரேனால்ட் – நிஸ்ஸான், சிட்ரோன், டெல், HP, சாம்சங், மிச்செலின், எம்.ஆர்.எஃப், டான்ஃபாஸ், வெஸ்டாஸ், ஹிட்டாச்சி, L&T போன்ற உலகப் புகழ்பெற்ற நிறுவனங்கள் தங்கள் உற்பத்தி மையங்களை தமிழ்நாட்டில் நிறுவியுள்ளன. அது மட்டுமின்றி, ஆப்பிள் நிறுவனத்தின் ஒப்பந்த உற்பத்தியாளர்களான ஃபாக்ஸ்கான், பெகட்ரான் மற்றும் டாடா எலக்ட்ரானிக்ஸ் ஆகிய நிறுவனங்கள் கூட, தமிழ்நாட்டில் தனது உற்பத்தி திட்டங்களை நிறுவியுள்ளன.

"இந்தியாவின் மின் வாகன தலைநகரம்" என்ற பெருமை மிகு அடைமொழியையும் தமிழ்நாடு பெற்றுள்ளது. ஓலா எலெக்ட்ரிக், ஏத்தர் எனர்ஜி, சிம்பிள் எனர்ஜி, ஸ்விட்ச் மொபிலிட்டி போன்ற மிகப் பெரும் மின் வாகன உற்பத்தி நிறுவனங்கள், தமிழ்நாட்டில் தனது உற்பத்தி மையங்களை நிறுவியுள்ளன. இத்துறையில் நமது நிலையை மேலும் வலுப்படுத்திக் கொள்ளவும், நமது உற்பத்தித் திறனை மேலும் அதிகரித்திடுவதற்கும் ஏதுவாக, சமீபத்தில், பிப்ரவரி 2023 மாதத்தில் "தமிழ்நாடு மின் வாகனக் கொள்கை 2023" வெளியிடப்பட்டுள்ளது. இதன் மூலம், முதலீடுகளை பெருமளவில் ஈர்த்து, இத்துறையில் நமது முன்னணி நிலையை மேலும் வலுப்படுத்த தமிழ்நாடு விழைகிறது.

மே 2021 முதல், ரூபாய் 2,70,020 கோடி முதலீடு மற்றும் 3,89,651 நபர்களுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்கும் வகையில், 221 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப் பட்டுள்ளன.

அன்னிய நேரடி முதலீடுகளைப் பொறுத்தமட்டில், 2022-23ஆம் நிதியாண்டின் முதல் அரையாண்டில் 265 திட்டங்கள் மூலமாக, 1.06 இலட்சம் கோடி முதலீடுகளை தமிழ்நாடு ஈர்த்துள்ளது என்று "ப்ராஜெக்ட்ஸ் சர்வே" நிறுவனம்

தெரிவிக்கின்றது. ஏப்ரல் 2021 முதல், 34,668 கோடி ரூபாய் (அதாவது 4567 மில்லியன் $) அளவிற்கான அன்னிய நேரடி முதலீடுகளை, தமிழ்நாடு ஈர்த்துள்ளது.

## 3. உள்கட்டமைப்பு

வருங்கால முதலீடுகளுக்கு தொழில்சாலைகளுக்கு தேவையான நிலம் தொடர்ந்து கிடைப்பதை உறுதி செய்வதற்காகவும், வரவிருக்கும் மற்றும் முன்மொழியப்பட்ட தொழில்துறை பூங்காக்களுக்காக SIPCOT நிறுவனம் 45000 ஏக்கர் நில வங்கியை உருவாக்கி வருகிறது. தொழில்துறையில் பின்தங்கிய மாவட்டங்களை மையமாகக் கொண்டு நில வங்கிகள் உருவாக்கப்படுகின்றன. வரும் காலங்களுக்கு ஏற்றவாறு தொழில் பூங்காக்களை நிறுவுவதற்கு தேவையான சிறப்பு முயற்சிகளை சிப்காட் நிறுவனம், மேற்கொண்டு வருகிறது இவ்வகையில் 2022–23ல் கணிசமான முன்னேற்றத்தையும் கண்டுள்ளது:–

- **மெகா ஜவுளி பூங்கா / ஒருங்கிணைந்த ஆயத்த ஆடை பூங்கா** – விருதுநகர் இ.குமாரலிங்கபுரத்தில் பிரதம மந்திரி MITRA பூங்கா அமைப்பதற்கான இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

- **தூத்துக்குடியில் சர்வதேச அறைகலன் பூங்கா** – பெருந்திட்டப் பணிகளுக்கான ஆலோசகர் நியமிக்கப்பட்டுள்ளார். மேலும், 2 நிறுவனங்களுக்கு நில ஒதுக்கீடு ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.
- **ஓரகடத்தில் மருத்துவ சாதனங்கள் பூங்கா** – EMI / EMC கட்டடம் கட்டுதல் மற்றும் உட்புற சாலைகள் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது, அணுகுச் சாலை அகலப்படுத்தும் பணி கிட்டத்தட்ட முடிவடையும் தருவாயில் உள்ளது. மேலும், 15 நிறுவனங்களுக்கு நில ஒதுக்கீடு ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன. இந்நிறுவனங்கள் விரைவில் கட்டுமானப் பணிகளைத் தொடங்க உள்ளன.
- **மணப்பாறை, திண்டிவனம் மற்றும் தேனி ஆகிய இடங்களில் மெகா உணவுப் பூங்காக்கள்** – மணப்பாறை உணவுப் பூங்காவைப் பொறுத்த மட்டில், உள்கட்டமைப்பு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன, மற்ற இரண்டு உணவுப் பூங்காக்களுக்கான பணிகள் விரைவில் தொடங்கப்பட உள்ளது.

- **மின் வாகனப் பூங்கா மற்றும் வருங்கால நகர்திறன் பூங்கா** – மாநல்லூரில் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கான பணி ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன. சூளகிரியில் வருங்கால நகர்திறன் பூங்கா அமைப்பதற்கான கருத்தியலான பெருந்திட்டம் முடிவடைந்துள்ளது.

- **மின்னணுவியல் உற்பத்தித் தொகுப்பு** – மாநல்லூர் மற்றும் பிள்ளைப்பாக்கத்தில் உள்ள மின்னணு உற்பத்தித் தொகுப்புகள் அமைப்பதற்காக MEITYன் EMC 2.0 திட்டத்தின் கீழ் விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

- **மிகப்பெரும் காலணி மற்றும் துணைப் பொருட்கள் தொகுப்பு** – ஒன்றிய அரசின் தொழில் வளர்ச்சி மற்றும் உள்நாட்டு வர்த்தக வளர்ச்சி துறையின் கீழ் இந்திய காலணிகள் மற்றும் தோல் மேம்பாட்டு திட்டத்திற்கான விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

## 4. தேசிய அங்கீகாரம்

தேசிய மற்றும் சர்வதேச அளவில் மேற்கொள்ளப்படும் தரவரிசைகளில், தமிழ்நாடு எப்பொழுதுமே சிறந்த மற்றும் முன்னணி மாநிலமாக செயல்பட்டு வருகிறது.

- "இந்தியா டுடே" நாளிதழ் வெளியிட்ட 2022ஆம் ஆண்டிற்கான மாநிலங்களுக்கான தரவரிசையில், சிறப்பாக செயல்படும் மாநிலமாக தமிழ்நாடு தேர்வு செய்யப்பட்டுள்ளது.
- இந்திய புத்தாக்கக் குறியீட்டின்படி, மனித மூலதன உருவாக்கம், அறிவுசார் ஊடுபரவல் (Knowledge diffusion) மற்றும் அறிவுசார் வெளியீடு (Knowledge output) போன்ற குறியீடுகளில், தமிழ்நாடு சிறந்த செயல்திறன் கொண்ட மாநிலமாக விளங்குகிறது.
- ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு முதலீடுகளுக்கான மையம் என்று குறிப்பிடப்படும் வகையில், தமிழ்நாடு இத்துறையில் அதிவேக வளர்ச்சியினை அடைந்து வருகின்றது. மாநிலங்களின்

தரவரிசையில், தமிழ்நாடு மூன்றாம் இடத்தைப் பிடித்துள்ளது.

- மின்னணுவியல் ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு துறையின் முதலீடுகளுக்கான, முதலீட்டிற்கு உகந்த இடமாக திகழ்வதன் மூலம், சென்னை முதலீட்டாளர்களின் கவனத்தை ஈர்த்து வருகின்றது.
- அறிவுசார் பகுப்பாய்வுக் குழு நிறுவனமான Care Ratings நிறுவனத்தின் ஒரு அங்கமான "கேர்எட்ஜ் (Care Edge) நிறுவனம்", செயல்திறன் கொண்ட மாநிலங்களின் (பெரிய மாநிலங்களில்) தரவரிசையில், 2023ஆம் ஆண்டில், 3வது சிறப்பாக செயல்படும் மாநிலம் என்று தமிழ்நாட்டை வகைப்படுத்தி உள்ளது.
- 2021–22 நிதியாண்டில் 1.72 இலட்சம் கோடி ரூபாய் முதலீடுகளை ஈர்த்து, அகில இந்திய அளவில் தமிழ்நாடு மூன்றாம் இடத்தைப் பிடித்திருப்பதாக, மும்பையைச் சேர்ந்த ப்ராஜெக்ட்ஸ் டுடே நிறுவனம் தெரிவித்துள்ளது.

- பொது விவகார மையம் (Public Affairs Centre) வெளியிட்ட, பொது விவகாரங்கள் குறியீடு (Public Affairs Index) 2021ன்படி, ஒட்டு மொத்த செயல்திறன் மற்றும் நிலைத்தன்மையின் அடிப்படையில் தமிழ்நாடு இரண்டாம் இடம் பிடித்துள்ளது.

- பன்முகத்தன்மை, சமத்துவம் மற்றும் உள்ளடக்கம் ஆகியவைகளுக்கான தீர்வுகள் வழங்கும் ஒரு நிறுவனமான "அவதார்" என்ற தனியார் நிறுவனம், ஆய்வு மேற்கொண்டு, 10 இலட்சத்திற்கும் அதிகமான மக்கள்தொகை கொண்ட நகரங்களில், பெண்கள் பணிபுரிவதற்கு உகந்த நகரங்களுக்கான தரவரிசையில், முதல் இடத்தை சென்னையும், 9வது இடத்தை கோயம்புத்தூரும், 10வது இடத்தை மதுரையும் பிடித்துள்ளதாகவும், 10 இலட்சத்திற்கும் குறைவான மக்கள் தொகை கொண்ட நகரங்களில், பெண்கள் பணிபுரிவதற்கு உகந்த நகரங்களுக்கான தரவரிசையில், திருச்சிராப்பள்ளி, வேலூர், ஈரோடு, சேலம் மற்றும் திருப்பூர் ஆகிய

நகரங்கள் முதல் 5 இடங்களைப் பிடித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

- நிதி ஆயோக்கின் SDG இந்தியா குறியீடு – 2021ல், தமிழ்நாடு இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ளது. இலக்கு 9 தொழில், கண்டுபிடிப்பு மற்றும் உள்கட்டமைப்பு ஆகியவற்றிலும், 2வது இடத்தைப் பெற்றுள்ளது.

## 5. நீடித்த மற்றும் நிலையான வளர்ச்சி இலக்குகள் (SDG)

நிலையான வளர்ச்சி இலக்குகள் (Sustainable Development Goal) என்பது ஐக்கிய நாடுகளின் புதிய முன்னெடுப்பாகும். அனைவராலும் ஏற்றுக் கொள்ளக்கூடிய இந்த நிலையான வளர்ச்சியின் மூன்று கூறுகளாக இருப்பவை சுற்றுச்சூழல், சமூகம் மற்றும் பொருளாதாரம். இதனை சரியான முறையில் செயல்படுத்தி 2030க்குள், 17 இலக்குகள் மற்றும் 169 குறிக்கோள்களை அடைய முற்படவேண்டும். பொருளாதார வளர்ச்சி, நிலையான தொழில்மயமாக்கல், மாநிலத்தில் வேலை வாய்ப்பினை உருவாக்குதல் ஆகியவற்றின் மூலம் நிலையான வளர்ச்சியை

ஏற்படுத்துவதில் தொழில் துறையின் பெரும் பங்களிப்பு பரவலாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

தொழில்கள், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறையின் நோக்கங்களுக்கும், இலக்குகள் 8 மற்றும் 9 ஆகியவற்றுக்கும் இடையே ஒரு கருத்தியலான நேரடித் தொடர்பு உள்ளது. பெரும்பாலான மற்ற இலக்குகளுக்கு மறைமுகமான தொடர்பு உள்ளது. பன்னிரண்டு குறிக்கோள்களைக் கொண்ட இலக்கு 8, நிலையான பொருளாதார வளர்ச்சி, உற்பத்தித்திறனை அதிகப்படுத்துதல், தொழில்நுட்ப ஆராய்ச்சி, வேலைவாய்ப்பினை உருவாக்குவதல் தொழில்முனைவோரை அங்கீகரித்தல் ஆகியவற்றை நோக்கமாக கொண்டது. எட்டு குறிக்கோள்களைக் கொண்ட இலக்கு 9, தொழில், புத்தாக்கம் மற்றும் உள்கட்டமைப்பு ஆகியவற்றுடன் தொடர்புடையது. இந்த இலக்கு நிலையான மற்றும் உள்ளடக்கிய வளர்ச்சியை அடைய முதலீடு, தொழில்நுட்ப கண்டுபிடிப்பு மற்றும் தகவல் தொடர்பு அமைப்புகளை ஊக்குவிக்கும் நோக்கம் கொண்டது.

தொழில்கள், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறையானது, பல்வேறு வளர்ச்சி சார்ந்த கொள்கைகளை வகுத்துள்ளது, மேலும், தற்போதுள்ள கொள்கைகளை மேம்படுத்துவதுடன், உற்பத்தி மற்றும்

சேவைகள் போன்ற வரவிருக்கும் துறைகளிலும் கவனம் செலுத்துகிறது. நிலையான வளர்ச்சி இலக்குகளின் (SDG) குறியீடுகளிலும் மற்றும் பிற குறியீடுகளிலும் மாநிலம் முன்னணியில் உள்ளது. வரும் ஆண்டுகளில், நடைமுறையிலிருக்கும் திட்டங்கள், செயல்முறை உத்திகள் ஆகியன நிலையான வளர்ச்சி இலக்குகளை 2030ல் அடைய உத்வேகம் தருவதாக இருக்கும். மாநிலத்தின் அடித்தட்டு மக்களை சென்றடையும் வகையில் பொருளாதார வளர்ச்சி சார்ந்த உத்திகள் மற்றும் செயல்படுத்தப்படும் திட்டங்கள், யாரையும் பின்தங்க விட்டுவிடாது (LNOB), அனைவருக்குமான வளர்ச்சியினை இலக்காக கொண்டு அமையும்.




47வது இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சி 2023-ல் சிறந்த புதுமை கருத்துக்கான விருதை, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை பெற்றுள்ளது

BLank

## 1. வழிகாட்டி நிறுவனம்

வழிகாட்டி நிறுவனம் (முன்பு தமிழ்நாடு தொழில் வழிகாட்டி மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு நிறுவனம்), தமிழ்நாட்டிற்கு புதிய தொழில் முதலீட்டுத் திட்டங்களை ஈர்ப்பதற்காக 1992ல் இலாப நோக்கமற்ற சங்கமாகத் தொடங்கப்பட்டது. நாட்டிலேயே முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் ஆதரவுச் சேவைகள் அளிப்பது என்ற குறிக்கோளுடன் அமைக்கப்பட்ட முதல் நிறுவனமாக வழிகாட்டி நிறுவனம் விளங்குகிறது. இந்நிறுவனம் தொடங்கிய நாள் முதல், பல்வேறு தொழில் திட்டங்கள் வாயிலாக 6.5 இலட்சம் கோடி ரூபாய் அளவிற்கும் மேலான முதலீடுகளை வெவ்வேறு துறைகளில் ஈர்த்துள்ளது. இவற்றுள், 2021–22 மற்றும் 2022–23 நிதியாண்டுகளில் மட்டுமே 2.7 இலட்சம் கோடி ரூபாய் அளவிற்கான முதலீடுகள் ஈர்க்கப்பட்டுள்ளது. முதலீடு ஊக்குவிப்பு மற்றும் ஆதரவுச் சேவைகள் அளிப்பு என்பதையும் தாண்டி, வழிகாட்டி நிறுவனம், முதலீட்டாளர்கள் நிறுவியுள்ள திட்டங்களுக்கு எந்நிலையிலும் வழிகாட்டுதல்கள் அளித்திடும் வகையில், படிப்படியாக, பரிணாம வளர்ச்சி அடைந்துள்ளது. தொழிற்சாலைகள் மற்றும் கல்வி நிறுவனங்களை இணைத்து வைத்து, திறன் வளர்ச்சி மற்றும் பயிற்சிகள் அளித்து, திறன் மிகு

பணியாளர்களை தொழிலகங்கள் பணியமர்த்திக் கொள்ள வசதிகள் செய்து தரும் பணியையும் இந்நிறுவனம் மேற்கொள்கிறது.

தமிழ்நாட்டில் முதலீடுகளை ஊக்குவிப்பதிலும், ஆதரவுச் சேவைகளை அளிப்பதிலும் மேற்கொள்ளப்பட்ட ஒருங்கிணைந்த முயற்சிகளை அங்கீகரிக்கும் வகையில், 2022ஆம் ஆண்டைய, வருடாந்திர முதலீட்டாளர்கள் கூட்டத்தில் (Annual Investors Meeting – AIM 2022), **"ஆசியா ஓசியானியா மண்டலத்தின் சிறந்த முதலீட்டு ஊக்குவிப்பு முகவர்"** என்ற விருதை வழிகாட்டி நிறுவனம் வென்றுள்ளது.

## 1.1 கொள்கை இலக்கு

மாநிலத்தின் தொழில் வளர்ச்சியை மேலும் மேம்படுத்ததும் நோக்கத்துடனும், தொழில் முனைவோர்க்குத் தேவைப்படும் தகவல்களை அளிப்பதற்கும், முதலீட்டாளர்கள் தொழில் துவங்க தேவையான ஆதரவுச் சேவைகளை வழங்குவதற்கும் முகவாண்மை நிறுவனமாக, வழிகாட்டி நிறுவனம் நிறுவப்பட்டது. தமிழ்நாடு வணிகம் புரிதலை எளிதாக்குதல் சட்டம் 2018ன்படி, பெரிய தொழில் நிறுவனங்களுக்கு, ஒற்றைச் சாளர முறையில் பல்வேறு துறை / நிறுவனம் சார்ந்த தொழில்

அனுமதிகளை குறிப்பிட்ட கால வரம்பிற்குள் வழங்குவதற்கும், சிறப்பு ஊக்கத் தொகுப்புச் சலுகை வழங்குவதற்குமான முகவாண்மை நிறுவனமாகவும், வழிகாட்டி நிறுவனம் செயல்பட்டு வருகிறது. மாநிலத்தின் நியமிக்கப்பட்ட முதலீட்டு ஊக்குவிப்பு நிறுவனமாக விளங்கும் வழிகாட்டி நிறுவனம், முதலீடுகளை எளிதாக்குவதற்கும், வருங்கால முதலீட்டாளர்களை மாநிலத்தில் முதலீடு மேற்கொள்ள ஊக்குவிப்பதற்கும், பின்வரும் செயல்பாடுகளை மேற்கொண்டு வருகிறது:–

- முதலீட்டு ஊக்குவிப்பு
- முதலீடுகளுக்கான ஆதரவுச் சேவைகள் மற்றும் திட்டங்கள் அமைக்கப்பட்டபின் வழங்கப்படும் சேவைகள்
- வெளிப்புற ஈடுபாடுகள்
- கொள்கை மற்றும் ஆராய்ச்சி
- பணி ஆய்வகப்பிரிவு மற்றும் சிறப்பு முன்முயற்சிகள்
- மண்டலங்களைச் சென்றடைதல்
- ஊடகம் மற்றும் தகவல் தொடர்பு

## 1.2 முதலீட்டு மேம்பாடு

முதலீடுகளை ஈர்த்திடும் முகவாண்மை நிறுவனமாக செயல்படும் வழிகாட்டி நிறுவனம், முதலீட்டாளர்களின் தேவைகளைப் புரிந்து கொண்டு, அவர்களுக்குத் தேவையான நடைமுறை மற்றும் தனிப்பயனாக்கப்பட்ட ஆதரவுச் சேவைகளைத் தொடர்ச்சியாக வழங்கி வருகிறது. நாடுகளுக்கான பிரத்யேக அமைவுகள், துறைகளுக்கான அமைவுகள், முதலீட்டு மாநாடுகள் மற்றும் தேசிய மற்றும் உலகளாவிய அளவில் நடத்தப்படும் பொருளாதார மாநாடுகளில் கலந்து கொள்ளுதல் மூலம் இவ்வாறான பொருளாதார மேம்பாட்டு நடவடிக்கைகளை வழிகாட்டி நிறுவனம் மேற்கொண்டு வருகின்றது.

அனைத்துத் துறைகளிலும் முதலீடுகளை ஈர்த்திடுவதே, வழிகாட்டி நிறுவனத்தின் முக்கிய குறிக்கோள் எனினும், மோட்டார் வாகனம் மற்றும் மோட்டார் வாகன உதிரிபாகங்கள், இராசயனங்கள், மின்னணுவியல் மற்றும் மின்னணு வன்பொருட்கள், கனரக பொறியியல், தோல், ஜவுளி, நிதிச் சேவைகள் மற்றும் தகவல் தொழில் நுட்பம் / தகவல் தொழில் நுட்பச் சேவைகள் ஆகிய துறைகளின் மீது, சிறப்புக் கவனம் செலுத்தி, அத்துறைகளில் முதலீடுகளை ஈர்த்திட விழைகிறது.

மேற்கூறிய துறைகள் மட்டுமின்றி, வருங்காலத்தில் முதலீடு மேற்கொள்ளப்படும் துறைகளையும் அடையாளம் கண்டு, நிலைத்தன்மை மற்றும் மேம்பட்ட உற்பத்தி நடைமுறைகளைப் பின்பற்றி, முதலீடுகளை ஈர்க்கும் நடவடிக்கைகளையும் வழிகாட்டி நிறுவனம் மேற்கொள்கிறது. வான்வெளி மற்றும் பாதுகாப்பு, வேளாண் மற்றும் உணவு பதப்படுத்துதல், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உபகரணங்கள், மின்னணுவியல் வடிவமைப்பு மற்றும் உற்பத்தி (ESDM), மருத்துவ சாதனங்கள், மின் வாகனம், உயிரி தொழில் நுட்பவியல், மருந்துகள், பெட்ரோலியம் மற்றும் சிறப்பு இரசாயனங்கள், தோல், தொழில் நுட்ப ஜவுளி, தகவல் தரவுமையங்கள் மற்றும் நிதிநுட்பம் ஆகிய துறைகளை வளர்ந்து வரும் துறை என வகைப்படுத்தி, அத்துறையில் கணிசமான முதலீடுகளை ஈர்த்திட முன்னுரிமை அளிக்கப்படுகிறது.

கடந்தகால மற்றும் தற்போதைய முதலீடுகளை ஆராய்ந்து, அதன் அடிப்படையில், வழிகாட்டி நிறுவனம், சில முக்கிய நாடுகளை அடையாளம் கண்டுள்ளது. அந்நாடுகளில் உள்ள முதலீட்டாளர்களுடன் ஈடுபாடுகளை மேம்படுத்துவதற்காக, பிரத்யேகமாக குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

### 1.2.1 முதலீட்டு மாநாடுகள்

மாநிலத்தில் முதலீடுகளின் வாய்ப்புகளை அதிகரிக்கும் ஒரு வழிமுறையாக, தமிழ்நாட்டில் முதலீட்டு மாநாடுகள் (Investment Conclaves) மேற்கொள்ளப்படுகிறது. 2030ஆம் ஆண்டிற்குள், US $ 1 டிரில்லியன் பொருளாதாரம் அடைந்திட வேண்டும் என்ற ஒரு மிகப்பெரிய இலக்கை நிர்ணயித்து, 2022–23ஆம் நிதியாண்டில், பல முதலீட்டு மாநாடுகளை மேற்கொண்டு, பெருமளவில் முதலீடுகளை ஈர்த்து, அவ்விலக்கை நோக்கி மாநிலம் தனது பயணத்தை மேற்கொண்டு வருகின்றது.

பல்வேறு துறைகளில் முதலீடுகளை ஈர்ப்பதற்காக, பல்வேறு துறைகளை கருப்பொருளாகக் கொண்டு முதலீட்டு மாநாடுகள் நடத்தப்பட்டன. உதாரணமாக, காலணி மற்றும் தோல் பொருட்கள் முதலீட்டு மாநாடு மூலம், ஏறக்குறைய 4,000 கோடி ரூபாய் முதலீடு மற்றும் சுமார் 62,000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு என்ற வகையில் முதலீடுகள் ஈர்க்கப்பட்டன. பிப்ரவரி 2023ல் நடத்தப்பட்ட மோட்டார் வாகனம் மற்றும் மின்னணுவியல் மாநாடுகள் மூலம், கிட்டத்தட்ட 11,000 கோடி ரூபாய் முதலீடு மற்றும் ஏறக்குறைய 5,000 நபர்களுக்கு வேலை வாய்ப்பு என்ற

வகையில், அத்துறையில் முன்னணி நிறுவனங்களின் முதலீடுகள் ஈர்க்கப்பட்டன. ஜூலை 2022ல் நடத்தப்பட்ட முதலீட்டாளர்களின் முதல் முகவரி தமிழ்நாடு என்ற பொருண்மையில் நடத்தப்பட்ட மாநாட்டின் போது, 1.25 இலட்சம் கோடி ரூபாய் முதலீடு மற்றும் ஏறக்குறைய 75,000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு என்ற வகையில் 60 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

ஆகமொத்தம், 2022–23 ஆண்டில், இவ்வாறான பல்வேறு பொருண்மை சார்ந்த முதலீட்டு மாநாடுகள் மூலமாக ஏறக்குறைய 1.67 இலட்சம் கோடி ரூபாய் முதலீடு மற்றும் கிட்டத்தட்ட 1.5 இலட்சம் நபர்களுக்கு வேலைவாய்ப்பு என்ற வகையில் 86 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பரவலான மற்றும் சமச்சீரான வளர்ச்சி என்பதே இந்த அரசின் தலையாய குறிக்கோள். அதை உறுதிப்படுத்தும் விதமாக, "C" வகை மாவட்டங்களில் மட்டுமே, ஏறக்குறைய 1.1 இலட்சம் கோடி ரூபாய் முதலீடு ஈர்த்து கிட்டத்தட்ட 1.17 இலட்சம் நபர்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. மொத்த முதலீடுகளில், இது கிட்டத்தட்ட 47% ஆகும். மேலும், மொத்த வேலைவாய்ப்பு உறுதியளிப்பில், 37% வேலைவாய்ப்பும்

இம்மாவட்டங்களில் மேற்கொள்ள உறுதி செய்யப்பட்டிருக்கிறது.

புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளும் நிறுவனங்கள், தமது திட்டங்களை செயல்படுத்தும் நிலைக்குக் கொண்டு வருவதை உறுதிப்படுத்துவதில், தமிழ்நாடு அரசு மிகுந்த கவனம் செலுத்துகிறது. அதாவது, தற்போதுள்ள மற்றும் புதிய முதலீட்டாளர்களின் திட்டங்களுக்கு தேவையான ஆதரவுச் சேவைகள் அளித்து, அவர்களின் திட்டங்களை நிறுவுவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றது. இதன் காரணமாக முன்மொழியப்பட்ட முதலீடுகள், தமது திட்டத்தைத் துவக்கிய விகிதாசாரம் என்று வருகையில், தமிழ்நாடு அகில இந்திய அளவில் முன்னணி மாநிலமாக விளங்குகிறது. 2019ம் வருடம் முதல் போடப்பட்டுள்ள 519 புரிந்துணர்வு ஒப்பந்தங்களில், 72 சதவிகித திட்டங்கள் பல்வேறு செயல்பாட்டு நிலைகளில் உள்ளது. அதாவது, இத்திட்டங்கள் அனுமதிக்காக ஒற்றைச் சாளர இணையத்தில் விண்ணப்பம் மேற்கொண்டோ, நிலம் கையகப்படுத்தியோ, கட்டுமானப் பணிகளைத் துவக்கியோ அல்லது பகுதி / முழு உற்பத்தியோ துவங்கிய நிலைகளில் உள்ளன.

### 1.2.2 அயல் நாடுகளில் உயர்மட்ட முதலீட்டுக் குழு

மாண்புமிகு தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் தலைமையிலான முதலீட்டுக் குழு டாவோஸில் நடைபெற்ற உலகப் பொருளாதார மன்றத்தினை சிறப்புற பயன்படுத்தி, தமிழ்நாட்டின் முதலீடு ஈர்த்திடும் ஆற்றலையும், தமிழ்நாடு அடைந்த வெற்றிகளையும் உலகத்திற்கு வெளிச்சமிட்டுக் காட்டியது. 2022 மற்றும் 2023ஆம் ஆண்டு நடைபெற்ற இரண்டு உலகப் பொருளாதார மன்றங்களிலும், தமிழ்நாட்டுக்கென்றே, மேம்பட்ட உற்பத்தி மையம் என்ற தலைப்பில் பிரத்யேக தளங்கள் அமைத்துக் கொடுக்கப்பட்டன. உலகளாவிய நிறுவனங்களின் முதன்மை அதிகாரிகள், வெளிநாட்டு நிறுவனங்களின் பிரதிநிதிகள் போன்ற பலதரப்பட்ட முதலீட்டாளர்கள் கலந்து கொண்ட இந்நிகழ்வில், அத்தகு முதலீட்டாளர்களின் எதிர்காலத் திட்டங்களை அறிந்து, அதற்கேற்றவாறு, தமிழ்நாட்டின் பன்முகத்தன்மை வாய்ந்த சூழலமைப்பினை எடுத்துரைப்பதற்கும், இத்தளம் பேருதவியாக அமைந்தது. மே 22–26, 2022 நடைபெற்ற 2022ஆம் ஆண்டிற்கான வருடாந்திரக் கூட்டத்தில் மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் "உற்பத்திச் சூழலமைப்பு இணைப்புகள்" என்ற அமர்வில்

பங்கேற்று உரையாற்றினார்கள். அதுமட்டுமின்றி, கோங்ரெஸ் மையத்தில் நடைபெற்ற "2030 தொழில் வளர்ச்சி நிகழ்ச்சி நிரல்" என்ற நிகழ்விலும் கலந்து கொண்டார்கள். மேலும், மேம்பட்ட உற்பத்தி தொடர்பான பல அமர்வுகளிலும், சந்திப்புகளிலும் இக்குழு பங்கேற்றது. அதேபோல் ஜனவரி 16–20, 2023 நடைபெற்ற, உலகப் பொருளாதார மன்றத்தின் வருடாந்திரக் கூட்டத்தில், தமிழ்நாடு அரசு பங்கேற்றது. இந்த 2023ஆம் ஆண்டு உலகப் பொருளாதார மன்றத்தின் வருடாந்திரக் கூட்டத்தில் மேம்பட்ட உற்பத்தி, பசுமை எரிசக்தி, ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு ஆகிய துறைகள் உட்பட பல்வேறு துறைகளில், தமிழ்நாட்டின் சிறப்பம்சங்களை வழிகாட்டி நிறுவனம் எடுத்துரைத்தது. மேலும், "நிலையான வளர்ச்சிக்கான மேம்பட்ட உற்பத்தி சூழல் அமைப்புகளை உருவாக்குதல்", "புத்தாக்கத்தினை இயக்கிடும் உலகளாவிய திறன் மையங்களை மறுவடிவமைத்தல்" மற்றும் "தமிழ்நாடு–சுத்தமான எரிசக்தி விநியோகச் சங்கிலி முதலீடுகளுக்கான ஒரு பசுமை சூழலமைப்பு" என்ற அமர்வுகளிலும் பங்கேற்றது.

இந்த பயணத்தின்போது, தொழில், முதலீடு மேம்பாடு மற்றும் வர்த்தகத் துறையின் கூடுதல் செயலாளர் திரு.ச. கிருஷ்ணன், இ.ஆ.ப அவர்கள்,

முன்னர் ரிசர்வ் வங்கி கவர்னர் டாக்டர் ரகுராம் ராஜன் அவர்களிடம் உரையாடல் நிகழ்த்தினார்கள். இந்தியாவின் திறன்சூழல், தமிழ்நாட்டின் சிறப்பான திறமை மிகு பணியாளர் இருப்பு போன்றவற்றைப் பற்றிக் கூறி, வேகமாக வளர்ந்து வரும் சேவைத் துறையின் மீது அரசு கவனம் செலுத்திட வேண்டியது முக்கியம் என்று எடுத்துரைத்தார்கள்.

தமிழ்நாட்டுக்கென்று உள்ள அடையாளத்தை மேம்படுத்தும் வகையில் மே 30 முதல் ஜூன் 2, 2022 வரை நடைபெற்ற, உலகின் மிகப்பெரிய தொழில் வர்த்தகக் கண்காட்சிகளில் ஒன்றான ஹானோவர் மெஸ்ஸிலும், தமிழ்நாடு தனது முத்திரையைப் பதித்துள்ளது. இக்கண்காட்சியில், மின்னணுவியல், நான்காம் தலைமுறை தொழில் வளர்ச்சி திட்டங்கள், வட்டப் பொருளாதாரம் ஆகிய துறைகளைச் சார்ந்த பெரும் தொழிலகங்களை, நமது முதலீட்டுக் குழு சந்தித்தது. ஹானோவர் நகருடன், வர்த்தகம் மற்றும் முதலீட்டு உறவுகளை மேம்படுத்தும் வகையில், அந்த மண்டலத்தின் கூட்டுப் பொருளாதார மேம்பாட்டு நிறுவனமான ஹனோவர் இம்பல்ஸ் நிறுவனத்துடன், தமிழ்நாடு அரசு ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது.

மாறிவரும் புவிசார் அரசியல் சூழ்நிலையை பயன்படுத்திக் கொள்ளும் விதமாக, 2022 செப்டம்பரில் தோல் அல்லாத காலணித்துறை, மின்னணுவியல் மற்றும் எரிசக்தித் துறைகளில், முதலீடுகளை ஈர்ப்பதற்காக ஒரு முதலீட்டுக் குழு, ஜப்பான் மற்றும் தென்கொரியா நாடுகளுக்கு பயணம் மேற்கொண்டது. இந்தப் பயணத்தின் போது, தமிழ்நாட்டில் ஏற்கனவே முதலீடு மேற்கொண்டுள்ள முதலீட்டாளர்களுடன் விரிவான சந்திப்புகள் மேற்கொண்டு, அவர்களின் தொடர் ஆதரவையும், விரிவாக்க / புத்தாக்க / மதிப்புக் கூட்டு திட்டங்களை எல்லாம் தமிழ்நாட்டிலேயே மேற்கொள்ளுமாறும், இக்குழு அவர்களைக் கேட்டுக் கொண்டது.

தைவான் நாட்டிலும் இவ்வாறே முதலீட்டு சந்திப்புகள் மேற்கொள்ளப்பட்டது. தொழில் நுட்ப ஜவுளி, காலணிகள் மற்றும் மின்னணுவியல் ஆகிய துறைகளில் முதலீடுகளை ஈர்த்திடும் நோக்கத்துடன், தைவான் தொழில்நுட்ப ஜவுளிகள் சங்கம் மற்றும் தைவான் மின்னணுவியல் உற்பத்தியாளர் சங்கம் (TEEMA) ஆகியவற்றுடன் வட்ட மேஜை சந்திப்புகள் நடத்தப்பட்டன.

### 1.2.3 முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் எளிதாக்கல் ஆணையரகம்

2022–23ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையின்போது, மாண்புமிகு தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் எளிதாக்குதலுக்காக (ஆதரவுச் சேவைகளை வழங்குவதற்காக) தனியே ஒரு ஆணையரகம் உருவாக்கப்படும் என்று அறிவித்தார்கள். வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் & தலைமைச் செயல் அலுவலரை, அலுவல் முறை ஆணையராக அறிவித்து, இந்த ஆணையரகம் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த ஆணையரகத்தின் முக்கிய செயல்பாடுகள் பின்வருமாறு:–

- தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறையின் கீழ் உள்ள நிறுவனங்களுக்கான மதிப்பீடு, ஒத்திசைவு மற்றும் பணம் பெறும் அலுவலகமாகச் செயல்படுதல்;
- சர்வதேச மற்றும் தேசிய நிகழ்வுகளில் மாநிலத்தை பிரதிநிதித்துவப் படுத்துதல் மற்றும் தூதரக அலுவலகங்கள் மற்றும் தொழிற் சங்கங்களுடன் இணைந்து செயலாற்றுதல்;

- வணிகம் புரிதலை எளிதாக்குதல், கொள்கை வடிவமைப்பு மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாடு போன்றவற்றிற்காக, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை மற்றும் வழிகாட்டி நிறுவனத்துடன் இணைந்து செயலாற்றுதல்;

- கொள்கைகள் மற்றும் ஊக்கத் தொகைகள் குறித்த தெளிவுரை மற்றும் விளக்கங்கள் வழங்குதல்;

- பெருந்தொழில்களுக்கு விருதுகள் பற்றிய பரிந்துரைகளை அரசுக்கு பரிந்துரைத்தல்;

ஆணையரகம் உருவாக்கப்பட்டுள்ளதன் காரணமாக, தமிழ்நாடு வணிகம் புரிதலை எளிதாக்குதல் சட்டம் 2018ன்கீழ், தொழிற்சாலைகளுக்கு ஆதரவுச் சேவைகள் அளிப்பதற்காக அரசுடன் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள இயலுவதோடு மட்டுமின்றி, துரிதப்படுத்திடவும் இயலும்.

### 1.2.4 நிதிநுட்ப தொழில் ஊக்குவிப்புப் பிரிவு

புத்தாக்க நிறுவனங்கள் மற்றும் வளர்ந்து வரும் தொழில் முனைவோருக்கு, டிஜிட்டல் நிதிக்கருவிகளை பயன்படுத்த ஊக்குவிக்கும்

வகையில், உலகளாவிய நிதி நிறுவனங்களான Pay U, Vakil Search, Vyapar, M2P போன்ற நிறுவனங்களுடன் இணைந்து, "தமிழ்நாடு டெக்ஸ்பீரியன்ஸ்" என்ற திட்டத்தினை துவக்கியுள்ளது. புத்தாக்க நிறுவனங்களுக்கு, நிதிநுட்பச் சேவைகள் ஒரே தளத்தில் கிடைத்திடுமாறு இத்திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஜூலை 2022ஆம் மாதம், புகழ்பெற்ற வென்ச்சர் கேப்பிடல் நிறுவனங்களையும் மற்றும் புத்தொழில் முதலீட்டாளர்களையும் ஈர்ப்பதற்காக தமிழ்நாடு களவிழாவினை அறிவித்தார்கள். இதன் மூலம், 250 விண்ணப்பங்கள் பெறப்பட்டு, உலகளாவிய வென்ச்சர் கேப்பிடல் நிறுவனங்களில் இருந்து அமைக்கப்பட்ட நிபுணர்கள் குழுவிற்கு தங்களது திட்டத்தை விளக்கக்கூடிய 8 புத்தொழில் நிறுவனங்கள் தேர்வு செய்யப்பட உள்ளன.

### 1.2.5 ஏற்றுமதி ஊக்குவிப்புப் பிரிவு

தமிழ்நாடு ஏற்றுமதி மேம்பாட்டுக் கொள்கை 2021ல் அறிவித்திருந்தவாறே, ஏற்றுமதி பற்றிய நுண்ணறிவு, ஆதரவுச் சேவைகள், ஏற்றுமதியாளர்களைச் சென்றடைதல் ஆகியவற்றில்

சிறப்புக் கவனம் செலுத்தும் வகையில், வழிகாட்டி நிறுவனத்தில் ஒரு ஏற்றுமதி பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்தப் பிரிவு ஏற்றுமதி சார்ந்த தொழில்களுக்கு ஆதரவுச் சேவைகள் வழங்குதல், ஏற்றுமதி தொடர்பான அவர்களின் கேள்விகளுக்கு தெளிவு வழங்குதல், ஏற்றுமதி தொடர்பான பிரச்னைகளுக்குத் தீர்வு காணுதல், வர்த்தகக் கூட்டாளிகளை இணைத்து வைத்தல், அறிவுசார் சேவைகள், ஏற்றுமதி மேம்பாடு மற்றும் ஏற்றுமதியாளர்களைச் சென்றடைதல் நிகழ்வுகள் போன்ற சேவைகளை வழங்கும் நோக்கத்தைக் கொண்டுள்ளது.

சீர்திருத்தங்கள் மேற்கொள்ள வேண்டிய பகுதிகள், உள்கட்டமைப்பு இடைவெளிகளை அடையாளம் கண்டறிதல், ஏற்றுமதித் துறை மேம்பாட்டிற்கான திட்டங்களை வகுத்தல் போன்ற நோக்கங்களுக்காக, ஒருங்கிணைப்பு அறக்கட்டளையின் கீழ், இலாப நோக்கற்ற நிறுவனமான, ஃபௌண்டேஷன் ஃபார் எகனாமிக் டெவலப்மெண்ட் (Foundation for Economic Development FED) நிறுவனத்துடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதிக அளவில் வேலைவாய்ப்புகளை அளிக்க வல்ல துறைகளான

உணவு பதப்படுத்துதல், தோல் அல்லாத காலணிப் பொருட்கள், மின்னணுவியல் ஆகிய துறைகளில் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. 2022–23ஆம் ஆண்டைப் பொறுத்தவரை, உணவுப் பதப்படுத்தும் துறைக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு உள்ளது. பிற துறைகளுக்கான செயல்திட்டங்கள் வரும் வருடங்களில் செயல்படுத்தப்படும்.

## 1.3 கொள்கை கட்டமைப்பு

தொழிற் கொள்கையில் அறிவிக்கப்பட்ட ஊக்கத் தொகுப்புச் சலுகைகள், தொழில் முதலீடுகளில் உண்டாக்கும் தாக்கத்தை மதிப்பிடுவதற்காக ஒரு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. ஊக்கத் தொகை அளிப்பு என்பது, ஒரு மாநிலத்திற்கு முதலீடுகளை ஈர்ப்பதில் பெரும் பங்கு வகிக்கிறது என்பதை இந்த ஆய்வின் மூலம் அறிய முடிந்தது. தமிழ்நாட்டில், தொழில் துறையின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கும் வகையில், 2022–23 நிதியாண்டில் பல்வேறு கொள்கைகள் வெளியிடப்பட்டன. வழிகாட்டி நிறுவனத்தில் தயாரிக்கப்பட்ட இந்தக் கொள்கைகள் அனைத்துமே, சம்பந்தப்பட்ட துறையின் இலக்கு மற்றும் வரையறை, துறை சார்ந்த கொள்கைத் தலையீடுகள் மற்றும் ஊக்கத் தொகுப்புச் சலுகை

பற்றிய விவரங்களை முதலீட்டாளர்களுக்கு எடுத்துரைக்கின்றது.

### 1.3.1 மானியங்களின் தாக்கம் பற்றிய ஆய்வுப் பணிகள்

தமிழ்நாட்டின் தொழில் கொள்கையில், தொழிலகங்களுக்கு மானியங்கள் / ஊக்கத் தொகுப்புச் சலுகைகள் அளிப்பது என்பது ஒரு இன்றியமையாத அங்கமாக விளங்குகிறது. தமிழ்நாடு உள்ளிட்ட பல இந்திய மாநிலங்கள், தங்கள் மாநிலத்திற்கு முதலீட்டாளர்களை ஈர்ப்பதற்காக, துறை சார் திட்டங்கள், புவி சார் திட்டங்கள்(அமைக்கும் மாவட்டங்கள்), வேலைவாய்ப்பு மற்றும் முதலீடு ஆகிய பல்வேறு காரணிகளின் அடிப்படையில் ஊக்கத் தொகுப்புச் சலுகைகள் / மானியங்கள் வழங்கி வருகின்றன. தமிழ்நாடு உட்பட, அனைத்து மாநிலங்களும், முதலீடுகளை ஈர்ப்பதற்கு மானியங்கள் வழங்குவதில் தொடர் கவனம் செலுத்தி வருவதால், இந்த மானியங்கள், முதலீடுகளை ஈர்ப்பதற்கும் மாநிலத்திற்கு சாதகமான தாக்கத்தையும் உண்மையில் ஏற்படுத்துகிறதா, அதன் மூலம் தேவைப்பட்ட விளைவுகள் ஏற்படுகின்றனவா என்பதை அறிந்து கொள்ள ஆய்வுகள் செய்வது இன்றியமையாததாகிறது. இவ்வாறு வழங்கப்படும் மானியங்கள் / ஊக்கத் தொகுப்புச் சலுகைகள், தொழிலகங்கள்

மேற்கொள்ளும் முதலீடுகள் மீது ஏற்படுத்தும் தாக்கம் குறித்து ஆய்வுகள் மேற்கொள்ளும் பணியினை டெலாய்ட் தொமாட்சு இந்தியா LLP (Deloitte Tohmatsu India LLP (Deloitte) நிறுவனத்திடம் வழங்கப்பட்டது.

கடந்த பத்து ஆண்டுகளில், ஊக்கத் தொகுப்புச் சலுகைகள் / மானியங்கள் அளிக்கப்பட்ட 43 பயனாளி நிறுவனங்களில் 30 நிறுவனங்களை தேர்ந்தெடுத்து ஒரு மாதிரி கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டது. இந்தக் கணக்கெடுப்பில், பயனாளர் நிறுவனங்கள் தாங்கள் உறுதி செய்திருந்த முதலீடுகளை விடவும் அதிக அளவில் முதலீடு செய்திருப்பதும், உறுதியளித்திருந்த வேலைவாய்ப்பு எண்களை விட, ஏறக்குறைய மூன்று மடங்குக்கு மேல் வேலைவாய்ப்புகளை உருவாக்கியதும், அதிலும்கூட, கிட்டத்தட்ட 87.5% அளவிற்கு தமிழ்நாட்டைச் சேர்ந்த பணியாளர்களை பணியமர்த்தியுள்ளதையும் காண முடிந்தது.

அரசியல் நிலைத்தன்மை (அரசுக் கொள்கைகளின் நிலைத்தன்மை), வணிகம் புரிதலை எளிதாக்குதல், துறைமுகங்களுக்கான அணுகல்கள், தொழில் சூழலமைப்பு மற்றும் ஊக்கத் தொகுப்புச் சலுகைகள் போன்ற காரணிகள், முதலீட்டாளர்கள், தங்கள் திட்டத்தினை குறிப்பிட்ட மாநிலத்தில்

நிறுவுவதற்கு முக்கிய காரணிகளாக விளங்குகின்றன என்பதை இந்த கணக்கெடுப்பு தெளிவாக சுட்டிக்காட்டுகிறது. சமநோக்கு பார்வை கொண்ட கணக்கெடுப்பாக இருந்திட வேண்டும் என்ற நோக்கத்திற்காக, ஊக்கத்தொகை அளிக்கப்படாத சில நிறுவனங்களும் கணக்கில் சேர்த்துக் கொள்ளப்பட்டன. ஏறத்தாழ அனைத்து பொருண்மைகளிலும் ஒரே அளவிலான போட்டித்தன்மை உடைய மாநிலங்களுக்கிடையே முதலீடுகளுக்கான தேர்வு என்று வருகையில், ஊக்கத் தொகுப்புச் சலுகைகள் / மானியங்கள் அளிப்பது என்பது முதலீடுகளை ஈர்த்திட மிகப் பெரும் பங்கு வகிக்கிறது.

மானியங்கள் ஏற்படுத்திடும் தாக்கத்தைத் தீர்மானித்திட செலவினங்கள்–நன்மைகள் பகுப்பாய்பு முறை (Cost Benefit Analysis) பயன்படுத்தப்பட்டது. (அ) நிறுவனங்களின் விற்பனை மற்றும் கொள்முதல் மூலம் மாநிலத்திற்கு கிடைத்திடும் வரி வருவாய்; (ஆ) பணியாளர்கள் பயன்படுத்தும் பொருட்கள் மற்றும் சேவைகளிலிருந்து கிடைத்திடும் மறைமுக வரி வருவாய் மற்றும் அவர்கள் செலுத்திடும் வருமான வரியில் மாநிலத்தின் பங்கு; (இ) நீர் மற்றும் மின்சாரம் ஆகியவைகளின் பயன்பாட்டிற்காக நிறுவனங்களால் செலுத்தப்படும் தொகை மற்றும் (ஈ) நிறுவனங்களால்

மேற்கொள்ளப்பட்ட மூலதன செலவினங்களில் இருந்து ஈட்டப்படும் வரி வருவாய்; போன்ற நான்கு முக்கிய காரணிகள் மூலம் அரசால் பெறப்படும் நன்மைகள் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டன.

அதேபோல, செலவினங்கள் என்று எடுத்துக் கொண்டால், நிறுவனங்களுக்கு அளிக்கப்பட்ட ஊக்கத் தொகைகள் (அதாவது, மென்கடன்கள், SGST / VAT திருப்பியளிப்பு, பயிற்சி மானியம், மூலதன மானியம், கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்கான மானியம், மின் வரி திரும்ப வழங்கப்படுதல் மற்றும் ஊக்கத்தொகை கோருவதற்கான விண்ணப்பக் கட்டணம் ஆகிய காரணிகள் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. நிகரச் செலவு நன்மையின் அடிப்படையில், அவ்வாறு வழங்கப்படும் ஒவ்வொரு ரூபாய் ஊக்கத்தொகைக்கும், அரசுக்கு 4.95 ரூபாய் திரும்பக் கிடைக்கப் பெறுகிறது என்பதை இந்த ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

### 1.3.2 தற்போதுள்ள தொழில் கொள்கை கட்டமைப்பு

மாநிலத்தில் முதலீடுகளை ஈர்ப்பதற்கான சட்ட ரீதியான கட்டமைப்புகளை வணிகம் புரிதலை எளிதாக்கும் சட்டம் மற்றும் விதிகள் வழங்குகின்றன. கூடுதலாக, தமிழ்நாடு தொழில் கொள்கை 2021யினை

அடித்தளமாகக் கொண்டு, தொழில் கொள்கைகளின் ஒருங்கிணைந்த கட்டமைப்பினை மாநில அரசு உருவாக்கியுள்ளது. இதன் மூலம், சம்பந்தப்பட்ட துறைகளில் முதலீடுகளை ஈர்ப்பதற்கான சரியான பாதையை வகுத்துத் தருவதோடு மட்டுமின்றி, தேவைப்பட்ட கொள்கை தலையீடுகளையும் வழங்கிட இயலும். இதன் பொருட்டு, தகவல் அளிப்பதில் நிலவி வரும் சமச்சீரற்ற தன்மை மற்றும் பரிவர்த்தனைச் செலவுகளை வெகுவாக குறைத்திட இயலும். தமிழ்நாடு நிதிக் கொள்கை 2021 மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டுக் கொள்கை 2021 ஆகியவை இதில் அடங்கும். மின் வாகனக் கொள்கை 2019, வான்வழி மற்றும் பாதுகாப்புத் தொழில் கொள்கை 2019 மற்றும் மின்னணு வன்பொருள் உற்பத்திக் கொள்கை 2020 ஆகிய, தொழில் கொள்கைகளும், புதிய தொழிற்கொள்கைக்கு ஏற்ப திருத்தி வடிவமைக்கப்பட்டுள்ளன.

### 1.3.3 2022-23ஆம் வருடம் வெளியிடப்பட்ட கொள்கைகள்

2022-23ஆம் வருடம் மட்டும், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்பில் 8 கொள்கைகள் வெளியிடப்பட்டுள்ளன. இது கடந்த 10 வருடங்களில் அதிக அளவில் அளிக்கப்பட்ட

கொள்கை வெளியீடுகள் ஆகும். மாநிலத்தில் சாதகமான கொள்கை கட்டமைப்பை உருவாக்குவதற்கும், உகந்த முதலீட்டுச் சூழலை உருவாக்கவும், அரசு முன்னுரிமை அளிப்பதற்கு இது சான்றாக விளங்குகிறது. கொள்கை வடிப்பு கட்டமைப்பின் அங்கமாக, கீழ்க்கண்ட கொள்கைகள் வெளியிடப்பட்டுள்ளது.

- **தமிழ்நாடு உயிர் அறிவியல் கொள்கை 2022 –** மருத்துவ சாதனங்கள் மற்றும் ஜவுளி, உயிரி தொழில் நுட்பம் மற்றும் உயிர் சேவைகள், மருந்து மற்றும் ஊட்டச்சத்து ஆகிய துறைகளை உள்ளடக்கிய உயிர் அறிவியல் துறையில், முதலீடுகளை ஈர்த்திடும் விதமாகவும், உயர்தர வேலைவாய்ப்புகளை உருவாக்கும் நோக்கத்துடனும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தமிழ்நாடு உயிர் அறிவியல் கொள்கை 2022 வெளியிடப்பட்டுள்ளது. அடுத்த 5 ஆண்டுகளில், 20,000 கோடி ரூபாய் முதலீடு மற்றும் 50,000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்துவதை இக்கொள்கை குறிக்கோளாகக் கொண்டுள்ளது.

- **தமிழ்நாடு ஆராய்ச்சி & மேம்பாட்டுக் கொள்கை 2022 –** தொழில் மற்றும் சேவைத் துறைகளில், புத்தாக்க தொழில் நுட்பங்கள் மற்றும் தீர்வுகளின் வளர்ச்சிக்கு உதவிடும் வகையிலும், மாநிலத்தில் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு சூழலமைப்பை மேம்படுத்தும் வகையிலும், அறிவியல் ஆராய்ச்சி & மேம்பாடு மற்றும் உலகளாவிய திறன் மையங்களில் முதலீடுகளை ஈர்ப்பது என்ற நோக்கத்துடனும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால், தமிழ்நாடு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுக் கொள்கை, 2022 வெளியிடப்பட்டது. ஆராய்ச்சிப் பூங்காக்கள், திறன் மையங்கள் மற்றும் புத்தாக்க மையங்களை மேம்படுத்தும் நோக்கத்துடன் வெளியிடப்பட்ட இக்கொள்கை, ஊக்கத் தொகுப்புச் சலுகைகள், ஒழுங்குமுறை இணக்க ஆதரவுச் சேவைகள் மற்றும் தற்போதுள்ள தொழில்கள் மற்றும் ஆராய்ச்சி மேம்பாட்டு மையங்களை மின்னணு முறையில் இணைத்து, ஆராய்ச்சியின் வரையறையை பன்மடங்கு அதிகரித்திட உதவி புரிந்திடும்.
- **தமிழ்நாடு காலணி மற்றும் தோல்பொருட்கள் கொள்கை 2022 –** காலந்தொட்டே, தமிழ்நாட்டில் தோல் மற்றும் காலணித்

தொழில்கள் வலுவான நிலையில் உள்ளன. குறிப்பாக பெண் தொழிலாளர்களுக்கு அதிக அளவில் வேலை வாய்ப்பை வழங்கிடும் துறையாகவும், ஏற்றுமதியில் சிறந்து விளங்கும் துறையாகவும் இத்துறை விளங்குகின்றது. இத்தொழில்களுக்கு புத்துயிர் அளித்திடும் வகையிலும், தோல் அல்லாத காலணி மற்றும் அது சார்ந்த நிறுவனங்களுக்கு, துணைத் தொழிற் சாலைகளை மேம்படுத்தும் வகையிலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு காலணி மற்றும் தோல் பொருட்கள் கொள்கை, 2022ஐ வெளியிட்டார்கள். 2025ஆம் ஆண்டிற்குள், இத்துறையில் 20,000 கோடி ரூபாய் முதலீடு மற்றும் இரண்டு இலட்சம் நபர்களுக்கு வேலைவாய்ப்பு என்ற வகையில், இக்கொள்கையில் இலக்கு நிர்ணயிக்கப்பட்டு உள்ளது. இவ்வகையான கொள்கை நாட்டிலேயே முதன்முதலாக வெளியிடப்பட்டது. தொகுப்புகள் அடிப்படையிலான வளர்ச்சிக்கு வித்திடும் வகையில், இக்கொள்கையில் சிறப்புத் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

- **தமிழ்நாடு மின் வாகனக் கொள்கை 2023 –** இந்தியாவின் மின்வாகனத் தலைநகரம் என அழைக்கப்படும் தமிழ்நாட்டின் நிலையை மேலும் வலுப்படுத்தவும், வணிக வாகனத் துறையில் மின்வாகனங்களின் பயன்பாட்டினை வெகுவாக ஊக்குவிக்கும் வகையிலும், பகிர்வு நகர்திறனை ஊக்கப்படுத்தும் வகையிலும், திருத்தப்பட்ட மின்வாகனக் கொள்கையினை பிப்ரவரி 2023ஆம் ஆண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வெளியிட்டார்கள். விநியோகம் தொடர்பாக, சேவை மற்றும் சரக்கு வரி திருப்பியளிப்பு மற்றும் மூலதன மானியம், தேவைப்பாடு தொடர்பான தள்ளுபடிகள், தற்போதைய விதிகளில் திருத்தம், மின்னேற்று சூழலமைப்புக்கான சிறப்பு ஆதரவு மற்றும் சூழலமைப்பு மேம்பாடு போன்ற பல சிறப்பு அம்சங்கள் இக்கொள்கையில் சேர்க்கப்பட்டுள்ளன. சென்னை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, சேலம் மற்றும் திருநெல்வேலி ஆகிய 6 நகரங்களை மின் வாகன நகரங்களாக மேம்படுத்தி, அதன் மூலம், மாநிலத்தின் வட்டப் பொருளாதாரத்தினை ஆதரித்திட இயலும்.

- **தமிழ்நாடு எத்தனால் கலவைக் கொள்கை 2023** – சர்க்கரைத் தொழிலுக்கு புத்துயிர் அளிக்கும் வகையிலும், விவசாயிகளின் வருமானத்தைப் பெருக்கிடும் வகையிலும், பசுமைப் பொருளாதாரத்தை மேம்படுத்தும் வகையிலும், செலவு குறைந்த மாற்று பசுமை எரிபொருளுக்கான முதலீட்டு மையமாக தமிழ்நாட்டை நிலைநிறுத்தும் தொலைநோக்குப் பார்வையுடன், அண்மையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் எத்தனால் கலவைக் கொள்கை, 2023ஐ வெளியிட்டார்கள்.

- தொழில் நுட்ப ஜவுளிகள், மறுசுழற்சி செய்யப்பட்ட தயாரிப்புகளிலிருந்து MMF நூல், MMF துணி மற்றும் ஆடை உற்பத்தி ஆகிய துறைகளில் குறிப்பிடத்தக்க மாற்றம் மற்றும் வளர்ச்சியை ஊக்குவிப்பதற்காக ஒரு சிறப்பு திட்டம் 2023 அறிவிக்கப்பட்டுள்ளது.

- **அதுமட்டுமின்றி, டிட்கோ நிறுவனம், வான்வழி மற்றும் பாதுகாப்புத் தொழில் கொள்கை 2023, தமிழ்நாடு சரக்கு போக்குவரத்து கொள்கை மற்றும் ஒருங்கிணைந்த சரக்கு போக்குவரத்துத் திட்டம் 2023 மற்றும் தமிழ்நாடு நகர எரிவாயு**

**விநியோகக் கொள்கை 2023 ஆகிய கொள்கைகளை வெளியிட்டுள்ளது.**

## 1.4 ஆதரவுச் சேவைகள் மற்றும் திட்டங்கள் அமைக்கப்பட்டபின் வழங்கப்படும் சேவைகள்

நிலையான தலையீடுகள் மற்றும் வணிக சீர்திருத்தங்கள் மூலம் முதலீட்டுச் சூழலை மேம்படுத்தி, மாநிலத்தின் போட்டித் தன்மையை பன்மடங்கு அதிகரித்திட தமிழ்நாடு அரசு உறுதி பூண்டு உள்ளது. 300க்கும் மேற்பட்ட வணிகம் செய்வதை எளிதாக்கும் நடவடிக்கைகள் செயல்படுத்தப்பட்டு உள்ளன. 165 தேவையற்ற சட்டங்கள் இரத்து செய்யப்பட்டுள்ளன. மேலும் 200 இணக்கங்கள் அடையாளம் காணப்பட்டு, பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட உள்ளது.

வழிகாட்டி நிறுவனத்தால் முன்னெடுக்கப்பட்ட பல துறை சார்ந்த முயற்சிகளின் காரணமாக, உரிமம் வழங்குவதில் இருந்து வணிகங்களுக்கு மூன்று ஆண்டு விலக்கு அளிக்க தேவையான திருத்தங்களை நிறைவேற்ற வழிவகுக்கப்பட்டது.

மின் ஆளுமை குறித்த வழிகாட்டி நிறுவனத்தின் பணிகள், தேசிய மற்றும் சர்வதேச மாநாடுகளில் நன்கு அங்கீகரிக்கப்பட்டுள்ளது. முன்பு

காகிதம் சார்ந்த நிலையில் இருந்திட்ட அரசு வணிகம் தொடர்பான சேவைகளை மாற்றி, தற்போது கிளவுட் அடிப்படையிலான சேவைகளை வழங்கும் நிறுவனமாக வழிகாட்டி நிறுவனம் தன்னை மாற்றிக் கொண்டுள்ளது. அக்டோபர் 2022ஆம் மாதம், போர்ச்சுக்கல் நாட்டில் மின்னணு ஆளுமையின் கோட்பாடு மற்றும் நடைமுறைகள் குறித்த 15வது வருடாந்திர சர்வதேச மாநாட்டில், வழிகாட்டி நிறுவனத்தின், வணிகம் புரிதலை எளிதாக்கும் குழு ஒரு ஆய்வறிக்கை சமர்ப்பித்தது. மேலும், புதுதில்லியில் நடைபெற்ற தேசிய ஒற்றைச் சாளர முறைகளுக்கான ஆய்வுக் கூட்டத்தில் நமது மாநிலத்தின் ஒற்றைச் சாளர முறை பற்றிய விளக்கங்களும் பிற மாநிலங்களுக்கு அளிக்கப்பட்டன.

வழிகாட்டி நிறுவனத்தின் செயல் இயக்குனர் தலைமையிலான ஒரு குழு தூத்துக்குடி, திருநெல்வேலி, ஓசூர், கோயம்புத்தூர், ஈரோடு, திருப்பூர், மதுரை, விருதுநகர் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களுக்குச் சென்று, அங்குள்ள தொழிற்சாலைகளுடன் சந்திப்புகள் மேற்கொண்டு, அவர்களின் பிரச்சனைகளை கேட்டு அறிந்தது. மாவட்ட நிர்வாக அலுவலகங்கள் மற்றும் FameTN ஆகிய நிறுவனங்களுடன் இணைந்து, ஒற்றைச்சாளர

இணையதளம், தொழில் தோழன் (Biz Buddy) இணையதளம் மற்றும் அனுமதிகள் பற்றிய ஆதரவுச் சேவைகள் ஆகிய தகவல்களை முதலீட்டாளர்கள் மற்றும் முதலீட்டுச் சங்கங்களுக்கு எடுத்துரைத்தது.

### 1.4.1 மின்னாளுமை முன் முயற்சிகள்

இன்றைய காலகட்டத்தில் மின் ஆளுமை மற்றும் தரவு சார்ந்த முடிவுகளை மேற்கொள்வது ஒரு இன்றியமையாத ஒன்றாக விளங்குகிறது. செயல்பாடுகள் அதிகரித்தல், விரைவான விநியோகம் மற்றும் வெளிப்படைத் தன்மை ஆகியவற்றை இது வழங்குகின்றது. ஒன்றிய அரசைச் சார்ந்த தேசிய மின் ஆளுமை சேவை வழங்கல் மதிப்பீட்டின் (National e–Governance Service Delivery assessment NeSDA)படி, தமிழ்நாடு தொடர்ச்சியாக மின்னாளுமை வழங்கும் மாநிலங்களில் முதல் மூன்று மாநிலங்களில் ஒன்றாக உள்ளது. வணிகம் புரிதலை எளிதாக்குவது, ஒப்புதல்கள் / அனுமதிகள் வழங்கப்படுவதை கண்காணிப்பது மற்றும் தொழில் சூழலமைப்பிற்கு ஏற்றவாறு சேவைகள் அளிக்கப்படுவதை உறுதி செய்வது போன்ற தரவு சார் நிர்வாக முன்முயற்சிகளை மேற்கொள்ளும் முக்கிய துறையாக, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை விளங்குகிறது.

மின்மய சேவைகளை செயல்படுத்துவதில் தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை எப்போதுமே முன்னணி வகித்து வருகிறது. ஒற்றைச் சாளர இணையதளம், நிலத் தகவல் இணையதளம், தொழில் தோழன் மட்டுமின்றி, முதலீட்டாளர்களை மையமாகக் கொண்ட பிற அறிவுசார் டிஜிட்டல் முன் முயற்சிகளையும் தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை தொடர்ச்சியாக செயல்படுத்தி வருகிறது.

### 1.4.1.1 ஒற்றைச் சாளர இணைய தளம் 2.0

ஒற்றைச்சாளர இணையதளம் என்பது முதலீட்டாளர்கள் தமது திட்டத்திற்கான அனுமதிகள், ஒப்புதல்கள், உரிமங்கள் மற்றும் தடையில்லா சான்றிதழ்கள் தொடர்பான சேவைகள் போன்றவற்றை ஒரே தளத்தில் பெற்றுக் கொள்வதற்காக வடிவமைக்கப்பட்ட ஒரு அரசு – வணிக (G2B) சேவைத் தளம் ஆகும். இந்த இணையம் மூலம், 236 சேவைகள் வழங்கப்படும் என்று இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, தற்போது 154 சேவைகள் வழங்கப்பட்டு வருகிறது. இந்த ஒற்றைச் சாளர இணையத்தினை பன்முகப்படுத்திடும் விதமாக, இத்தளத்திற்கான அலை பேசி வடிவத்தையும் (mobile version) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் துவக்கி வைத்துள்ளார்கள்.

அளிக்கப்படும் சேவைகள் மற்றும் முதலீட்டாளர்களுக்கு தேவையான வகையில் எளிய முகப்பு பெட்டிகள் போன்ற சிறப்பம்சங்கள், இவ்வலைத்தளத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.

முதலீட்டாளர்கள் இடையே பெரும் வரவேற்பை பெற்றுள்ள இந்த இணைய தளத்தில், 2022ஆம் ஆண்டில் மட்டும் 12000க்கும் மேற்பட்ட பெரும் தொழில்கள் மற்றும் சிறு குறு மற்றும் நடுத்தர தொழில்கள் துறை சார்ந்த அலகுகள், பல்வேறு அனுமதிகள் மற்றும் தடையில்லாச் சான்றிதழ்கள் கோரி விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன. இவ்வாறு, பெறப்பட்ட விண்ணப்பங்களில் 90 சதவீதத்துக்கு மேலாக அனுமதிகள் மற்றும் தடை இல்லா சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

2022ஆம் ஆண்டில், அரசுத் துறைகளில், கிளவுட் அமைப்பை ஏற்றுக் கொள்வதில் சிறந்து விளங்குவதற்கான நாஸ்காம் (NASSCOMM) விருதினை, ஒற்றைச்சாளர இணைய தளத்தின் வடிவமைப்பு மற்றும் செயல்பாடுகளை கையாளும் கணினி ஒருங்கிணைப்பாளருக்கு வழங்கப்பட்டது.

### 1.4.1.2 தமிழ்நாடு நில தகவல் இணையதளம்

பிப்ரவரி 2023 நிலவரப்படி, 19,505 ஹெக்டேர் நிலக் கையிருப்புடன், தொழில்களுக்கான நில வங்கி கையிருப்பில் அகில இந்திய அளவில் தமிழ்நாடு இரண்டாவது இடம் வகிக்கிறது. நிலங்களைக் கையகப்படுத்துவது முதலீட்டாளர்களுக்கு ஒரு மிகப்பெரும் சவாலாக உள்ளது. இதனை எளிதாக்கிடும் வண்ணம், நில வங்கிகள் கையிருப்புத் தகவலை இந்தத் தமிழ்நாடு நிலத்தகவல் இணையதளம் அளித்து வருகிறது. நிலத் தேர்வு தொடர்பான தகவல்களை வழங்குதல், நில பரிவர்த்தனைகள், நிலத் தொகுப்புகளின் சரிபார்ப்பு குறித்த மதிப்பு கூட்டப்பட்ட சட்ட ஆலோசனைகள் போன்ற தகவல்களையும் இந்த இணையதளம் வழங்குகிறது.

### 1.4.1.3 தொழில் நண்பன் – தொழிற்சாலைகளுக்கான உதவி மைய இணைய தளம்

தொழில் தோழன் என்பது அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள், சந்தேகங்கள் குறைகள் மற்றும் தொழில் துவங்கப்பட்டதற்குப் பிந்தைய சிக்கல்கள் ஆகியவற்றை நிவர்த்தி செய்ய வடிவமைக்கப்பட்டுள்ள

ஒரு பன்மொழி தொழில் உதவி மைய இணைய தளம் ஆகும். இதில் எழுப்பப்படும் உதவி அழைப்புகள் முகவாண்மை அலுவலர் முதல் மாண்புமிகு முதல்வர் அலுவலகம் வரை அனுப்பி வைக்கப்படுவதன் மூலம், எழுப்பப்படும் குறைகளுக்கு விரைவில் தீர்வு காணப்படுவது உறுதி செய்யப்படுகிறது. பிப்ரவரி 15, 2023 நிலவரப்படி, இது காறும் 306 உதவி அழைப்புகள் மேற்கொள்ளப்பட்டு அவற்றுள் 96 சதவீதம் அளவிற்கு தீர்வுகள் காணப்பட்டுள்ளன. சராசரியாக ஒவ்வொரு குறையும் ஒரு மாதத்திற்குள் தீர்க்கப்பட்டுள்ளது.

## 1.5 வெளிப்புற ஈடுபாடு

### 1.5.1 நிறுவனங்களுடன் இணைந்து சர்வதேச ஒத்துழைப்பு நடவடிக்கைகள்

இந்தியாவில் உள்ள சர்வதேச தூதரகங்கள், வெளிநாடுகளில் உள்ள இந்திய தூதரகங்கள், சர்வதேச தொழில்நுட்ப மற்றும் மேம்பாட்டு நிறுவனங்கள் மற்றும் உலகளாவிய புலம் பெயர்ந்தோர் சமூகத்துடன் ஒருங்கிணைந்து பணியாற்றி, அதன் மூலம், வழிகாட்டி நிறுவனம், தமிழ்நாட்டினை உலக அளவில் சிறந்த முதலீட்டு மாநிலம் என்பதை வெளிப்படுத்தி வருகிறது. ஆண்டு முழுவதும், வட்ட மேஜை விவாதங்கள், துறை மற்றும் நாடு சார்ந்த நிகழ்வுகள் நடத்தி, அதன் மூலம், உலக உற்பத்தித் துறையின் நாடித் துடிப்பைத்

துல்லியமாகக் கண்டறிவதற்கும், ஆர்வம் காட்டப்படும் பகுதிகளில், எதிர்கால ஒத்துழைப்புகளுக்கு தேவையான தொடர்புகள் ஏற்படுத்துவதையும் இது உறுதி செய்கிறது.

**2022–2023ஆம் ஆண்டில் வெளிநாட்டு ஈடுபாடு குழுவின் முக்கிய ஈடுபாடுகள்:**

- ஆஸ்திரேலியா, ஜப்பான், கனடா, சுவீடன் மற்றும் இத்தாலி ஆகிய நாடுகளில் இருந்து, சர்வதேச தூதரகங்கள் மற்றும் வர்த்தகப் பிரதிநிதிகளை சந்தித்து, இரு நாடுகளுக்கிடையே முதலீடு மற்றும் வர்த்தகங்களை மேம்படுத்துவதற்கான திட்டங்கள் குறித்து விவாதிக்கப்பட்டன.
- இந்தியா மற்றும் ஜெர்மனி நாட்டை சேர்ந்த ஹானோவர் இடையே வர்த்தக மற்றும் முதலீட்டு வாய்ப்புகளை மேம்படுத்தும் வகையில் அந்நகரத்தின் முதலீட்டு ஊக்குவிப்பு நிறுவனமான ஹானோவர் இம்பல்ஸ் நிறுவனத்துடனும் எண்டர்பிரைஸ் சிங்கப்பூர் நிறுவனத்துடனும் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.
- அமெரிக்க இந்திய உத்திசார் கூட்டாண்மை மன்றம் (US India Strategic Partnership Forum –

USISPF) 2022ஆம் ஆண்டு மே மாதத்தில் ஒரு தொழில் உரையாடல் சந்திப்பினை நடத்தியது. இதில் தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறையின் கூடுதல் தலைமைச் செயலாளரும், உலகளாவிய முன்னணி நிறுவனங்களுமான ஆப்பிள், HSBC, ஆம்வே, ரோல்ஸ் ராய்ஸ், டெல், லாக்கீட் மார்ட்டின், கேட்டர்பில்லர், டெட்ரா பேக், அமேசான், ஃபர்ஸ்ட் சோலார், ஃப்ளெக்ஸ், மாஸ்டர்கார்டு, ஃபோர்டு, BAE சிஸ்டம்ஸ், ஹனிவெல், தெர்மோஃபிஷர், காக்னிசண்ட், ATC டவர் போன்ற நிறுவனங்களின் முன்னணித் தலைவர்கள் கலந்து கொண்டனர்.

- மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தலைமையிலான தூதுக்குழு, அமெரிக்காவில் உள்ள சான்பிரான்சிஸ்கோ மற்றும் சியாட்டில் ஆகிய நகரங்களுக்குச் சென்று, முக்கிய தகவல் தொழில் நுட்பம் மற்றும் செமிகண்டக்டர் நிறுவனங்களின் உயர் அதிகாரிகளை சந்தித்து, அவர்களின் முதலீடுகளை தமிழ்நாட்டில் மேற்கொள்ள வலியுறுத்தியது. மேலும், சான்பிரான்சிஸ்கோ நகரில் நடந்த செமிகான்

வெஸ்ட் மாநாட்டிலும் இக்குழு கலந்து கொண்டது.

- தமிழ்நாடு மற்றும் மலேசியா இடையே வர்த்தக உறவுகளை மேம்படுத்திடவும், இரு தரப்பினரிடையே வணிக உறவுகளை வளர்த்திடுவதற்கான புதிய வழிமுறைகளை ஆராய்ந்திடவும், டிசம்பர் 2022ல், பினாங்கு மாநிலத்தின் இரண்டாம் துணை முதல்வர் டாக்டர் பி.ராமசாமி தலைமையிலான உயர்மட்டக்குழு தமிழ்நாட்டிற்கு வருகை புரிந்தது. அது மட்டுமின்றி, மலேசிய நாட்டின் முதலீட்டு மேம்பாட்டு மையம் மற்றும் வழிகாட்டி நிறுவனம் இடைய நிலவும் உறவுகளை விரிவுபடுத்தும் நோக்கத்துடனும், ஒத்துழைப்பு மற்றும் கூட்டு முயற்சிகளுக்கான துறைகள் பற்றி விவாதிப்பதற்கும், துணை தலைமை நிர்வாக அதிகாரி தலைமையில் ஒரு குழு தமிழ்நாட்டிற்கு வருகை புரிந்தது.
- ஜெர்மனி நாட்டைச் சேர்ந்த துரிங்கியாவின் டிஜிட்டல் சொசைட்டி மற்று பொருளாதார அமைச்சர் தலைமையிலான ஒரு முதலீட்டுக் குழு செம்படம்பர் 2022ல் கோயம்புத்தூருக்கு வருகை புரிந்தது. இக்குழுவில், துரிங்கியா

மாகாணத்தைச் சேர்ந்த கல்வி நிறுவனங்கள், வணிக நிறுவனங்கள் மற்றும் தொழில் நிறுவனங்களின் பிரதிநிதிகள் அடங்கிய குழுவும் அங்கம் வகித்தன. ஜெர்மனி–இந்தியா கூட்டு வட்டமேசை (Joint German–Indian Roundtable – GIRT) உறவுகளை வலுப்படுத்தி, தமிழ்நாட்டில் உள்ள மேற்கு மாவட்டங்களில் இருந்து வணிக வாய்ப்புகளை கண்டறிவதே இக்குழுவின் முக்கிய குறிக்கோள்.

- அக்டோபர் 2022ல் தைவானில் மேற்கொள்ளப்பட்ட முதலீட்டு ஊக்குவிப்பு நிகழ்வுகளின் தொடர்ச்சியாக, தைவான் மின்சார மற்றும் மின்னணு உற்பத்தியாளர்கள் சங்கத்தின் (Taiwan Electrical & Electronic Manufacturers' Association – TEEMA) தலைவர் தலைமையிலான ஒரு குழு நவம்பர் 2022 இல் தமிழ்நாட்டிற்கு வருகை புரிந்தது. தமிழ்நாட்டின் தொழில் துறை சார்ந்த முக்கிய துறைகள் மற்றும் தைவான் நிறுவனங்களுக்கான சூழலமைப்பு போன்ற பொருண்மைகளில் விவாதங்கள் மேற்கொண்டனர். அதுபோலவே, மார்ச் 2023ல், தைவான் காலணி உற்பத்தியாளர்கள் சங்கம் (Taiwan Footwear Manufacturers Association –

TFMA) தமிழ்நாட்டிற்கு வருகை புரிந்தது. தோல் அல்லாத காலணிகள் துறையில் வாய்ப்புகளை கண்டறிந்து முதலீடுகள் மேற்கொள்வதற்காக, வழிகாட்டி நிறுவனத்துடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது.

- முக்கியமான நாடுகளுடன், தமிழ்நாடு அரசு கொண்ட நீண்டகால உறவுகளுக்காவும், அப்பிணைப்புகளை நீட்டிப்பதற்காவும் நன்றி மற்றும் பாராட்டுகளைத் தெரிவிக்கும் வகையில், டிசம்பர் 2022ல், தமிழ்நாடு அரசு தூதரக அதிகாரிகள், சர்வதேச வர்த்தக சங்கங்கள் ஆகியவற்றுடன் ஒரு நன்றி தெரிவிப்பு சந்திப்பினை நடத்தியது.
- டென்மார்க் தொழில் மற்றும் வர்த்தகக் கூட்டமைப்பான DI இந்தியாவின் அலுவலகத்தினை சென்னையில் திறந்திட வழிகாட்டி நிறுவனம் ஆதரவுச் சேவைகள் மேற்கொண்டது. இந்தியா மற்றும் டென்மார்க் நாடுகளுக்கிடையே உறவுகள் மேம்படுத்தப்படுத்துவதற்கும், புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறையில் முதலீடுகள் மற்றும் கூட்டாண்மை அதிகரிப்பதற்கும்

இந்நிறுவனத்துடன் வழிகாட்டி நிறுவனத்துடன் இணைந்து பணியாற்றிடும்.

- டென்மார்க் நகரத்தின் பட்டத்து இளவரசர் & இளவரசி தலைமையில், அமைச்சர் மற்றும் வர்த்தக நிறுவனங்கள் அடங்கிய ஒரு உயர்மட்டக்குழு, மார்ச் 2023ல் வருகை புரிந்தது. தமிழ்நாடு மற்றும் டென்மார்க் நாட்டின் முன்னணி நிறுவனங்களுக்கிடைய பத்தாண்டுகளுக்கும் மேலாக நிலவும் உறவை பலப்படுத்தும் விதமாக அமைந்தது. அந்நிறுவனங்களில், சிலர், 25 ஆண்டுகளாக தமிழ்நாட்டில் தாங்கள் கண்ட வளர்ச்சியை கொண்டாடியதும் குறிப்பிடத்தக்கது.
- 12.01.2023 அன்று உலகத் தமிழ் புலம்பெயர்ந்தோர் தினம் கொண்டாடப்பட்டது. தமிழ் வம்சாவளியைச் சேர்ந்த தலைசிறந்த பேச்சாளர்கள், தொழில் வல்லுநர்கள் மற்றும் பல்வேறு தலைவர்கள் ஆகியோருடன், முதலீடுகள் மற்றும் இருதரப்பு பொருளாதார உறவுகள் குறித்த விவாதங்கள் மேற்கொள்ளப்பட்டன.
- பசுமை ஹைட்ரஜன் மற்றும் வருங்கால நகர்திறன் ஆகிய துறைகளில் ஒத்துழைப்பு

வாய்ப்புகளை கண்டறிவதற்காக, ஆராய்ச்சி அறிஞர்கள் மற்றும் கொள்கை நிபுணர்கள் அடங்கிய ஒரு குழு தமிழ்நாட்டிற்கு வருகை புரிந்தது. வெளிநாடு காமன்வெல்த் மற்றும் மேம்பாட்டு அலுவலகம் (Foreign Commonwealth & Development Office (FCDO) நிறுவனம் ஆதரிக்கும், ஆராய்ச்சி திட்டமான காலநிலை இணக்க வளர்ச்சி (Climate Compatible Growth – CCG) யின் ஒரு பகுதியாக இந்த வருகை அமைந்திட்டது. இக்குழு, பசுமை ஹைட்ரஜன் குறித்த ஒரு பயிலரங்கத்தை நடத்துவதற்கும் வழிகாட்டி நிறுவனம் உதவி புரிந்தது.

- மேற்கு ஆஸ்திரேலியா அரசு, தனது முதலீடு மற்றும் வர்த்தக மேம்பாட்டு அலுவலகத்தை தமிழ்நாட்டில் நிறுவியுள்ளது. இதன் பொருட்டு பரஸ்பர ஒத்துழைப்புக் கடிதம் வழிகாட்டி நிறுவனத்துடன் பரிமாறிக் கொள்ளப்பட்டுள்ளது.
- 2023ஆம் ஆண்டு டாவோஸில் நடைபெற்ற உலகப் பொருளாதார மன்றத்தில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளினால் மாநிலத்திற்கு ஏற்பட்ட பலன்களை வலுப்படுத்தும் விதமாக, சுவிஸ் இந்தியன் வர்த்தக சபை (Swiss Indian Chamber of Commerce

India – SICCI) தமிழ்நாட்டில் நிறுவப்பட்டுள்ளது. சுவிட்சர்லாந்து முதலீடுகளை தமிழ்நாட்டில் ஈர்ப்பதற்கான மையப்புள்ளியாக இந்த வர்த்தக சபை விளங்கும்.

## 1.6 சிறப்பு முன்முயற்சிகள்

### 1.6.1 பணி ஆய்வகப் பிரிவு

**தொழிற்சாலைகள்–கல்வித்துறை ஒத்துழைப்பு –** அதிக மதிப்புள்ள தயாரிப்பு, மேம்பாடு, வடிவமைப்பு மற்றும் புத்தாக்கத்திற்கு ஏற்றவாறு மாநிலத்தில் உள்ள தொழில் அடித்தளம் நிலையாகவும் தொடர்ச்சியாகவும் முடுக்கி விடப்பட வேண்டுமானால், எதிர்கால தொழில் வளர்ச்சிக்கு ஏற்றவாறு நமது பணியாளர்களை தயார் படுத்துவது மிகவும் இன்றியமையாதது. 120 தொழிற்சாலைகளுடன் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் மேற்கொண்டு, அதன் மூலம் "நான் முதல்வன்" திறன் மேம்பாட்டு திட்டத்திற்கு பணியாய்வகப்பிரிவு சேவை நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறது. மேலும். இந்த பணி ஆய்வகப்பிரிவு, 2022ஆம் ஆண்டு, தொழில் நுட்ப கல்வி இயக்குநரகம் மற்றும் 40–க்கும் மேற்பட்ட தொழில் வல்லுநர்கள் ஆகியோருடன் இணைந்து, கட்டுமானவியல், இயந்திரவியல், ECE, EEE & CSE

ஆகிய துறைகளில் பாலிடெக்னிக் படிப்புகளை மறுசீரமைக்க முயற்சிகள் மேற்கொண்டு வருகிறது.

தொழிலகங்ளுக்கும், அரசு நிறுவனங்களான திறன் மேம்பாட்டுக் கழகம், மற்றும் தொழில் நுட்பக் கல்வி இயக்குநரகம் போன்ற நிறுவனங்களுக்குமிடையே 7 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதன் மூலம் பல்வேறு தொழில் நுட்பத் துறைகளில் பயிலும் டிப்ளமோ மாணவர்களுக்கு பணிசார் பயிற்சிகளும், திறன் மேம்மடுத்துதல் ஆகிய திட்டங்களும் மேற்கொள்ளப்படும். கோயம்புத்தூர், விழுப்புரம், பெருந்துறை மற்றும் மதுரை ஆகிய நகரங்களில் உள்ள கல்வி நிறுவனங்கள் இதன் மூலம் வெகுவாக பயனடையும்.

மேலும், கல்வி மற்றும் தொழில் நிறுவனங்களை ஒருங்கிணைக்கும் வகையில், வழிகாட்டி நிறுவனத்திற்கும், ஜப்பான் நாட்டைச் சேர்ந்த வெளிநாட்டு ஒத்துழைப்பு மற்றும் நிலையான கூட்டாண்மை சங்கம் (Overseas Technical Cooperation and Sustainable Partnerships (AOTS) நிறுவனத்திற்குமிடையே ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஜப்பான் – இந்தியா உற்பத்திக்கான கல்வி மையங்களை அதிகரித்து,

ஜப்பானிய உற்பத்திக்கேற்றவாறு தொழில்நுட்பப் பாடங்கள் மாநிலத்தில் அறிமுகப்படுத்தப்படும்.

**தொழில் திட்டங்களுக்கு வேண்டிய தொழிலாளர் / பணியாளர் தேவைகளை எளிதாக்குதல்** – புதிய மற்றும் ஏற்கனவே உள்ள முதலீட்டாளர்கள், தங்கள் பணியாளர்கள் தேவைகளை பூர்த்தி செய்திட, பணி ஆய்வகப்பிரிவு, ஆதரவுச் சேவைகள் அளித்து வருகிறது. 2022ஆம் ஆண்டில், திருச்சிராப்பள்ளி, பெரம்பலூர், திருப்பூர் மற்றும் சென்னை ஆகிய நகரங்களில் உள்ள 30க்கும் மேற்பட்ட பெரிய தொழிற்சாலைகளிடம் பேச்சு வார்த்தைகள் மேற்கொண்டு, வேலை வாய்ப்பு முகாம்களில் பங்கேற்க வைத்தது.

**பயிற்சி திட்டங்கள்** – ஒரு செயலை செய்வதன் மூலம் கற்றுக் கொள்வது, அச்செயலில் ஏற்படும் சிக்கல்களை தீர்ப்பதற்கான சிந்தனைகளை வளர்த்திடும். அவ்வாறே, தொழிற்சாலைகளில் பயிற்சி மேற்கொள்ளும் மாணவர்களுக்கு, நடைமுறை சிந்தனை மற்றும் சிக்கல்கள் தீர்வு ஆகியவை கற்றுக்கொள்ள பல சந்தர்ப்பங்கள் வழங்கப்படுகிறது. 45 தொழிற்சாலைகளுடன் இணைந்து, 1500 மாணவர்களுக்கு மேல் இவ்வாறான பயிற்சி வாய்ப்புகள் உருவாக்கப்பட்டன.

**ஆசிரியர் மேம்பாட்டு பயிற்சித் திட்டங்கள்** – மேலும் தொழிற்சாலைகளில் பின்பற்றப்படும் நவீன உற்பத்தி செயல்முறைகள் மற்றும் தொழில்நுட்பங்களின் சமீபத்திய முன்னேற்றங்களை அறிந்து கொள்வதற்காக, முன்னணி பொறியியல் உற்பத்தி நிறுவனங்களின் ஆதரவுடன், பொறியியல் துறைகளில் 65 பேராசிரியர்களுக்கு ஆசிரியர் மேம்பாட்டு பயிற்சி அளிக்கப்பட்டது.

### 1.6.2 மேம்பட்ட உற்பத்தி மையம்

உலக பொருளாதார மன்றத்துடன் இணைந்து செயலாற்றி, தெற்கு ஆசியாவிலேயே முதல் மேம்பட்ட உற்பத்தி மையத்தை நிறுவ வேண்டும் என்பது தமிழ்நாடு அரசின் மிக முக்கிய திட்டங்களில் ஒன்று. இம்மையம் நிறுவும் திட்டம் சரியான பாதையில் பயணித்து வருகின்றது. இதற்காக பல துறைகளுடன் ஆலோசனை மேற்கொள்ளப்பட்டு, ஒரு சிறப்பான திட்டம் வகுக்கப்பட்டு வருகிறது. இதன் பொருட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஜூன் 2022ல் நான்காம் தலைமுறை தொழில் தயார் நிலை ஆய்வு (Industry 4.0 Readiness Survey) ஒன்றை துவக்கி வைத்தார்கள். அதன் தொடர்ச்சியாக, வழிகாட்டி நிறுவனம், இன்போசிஸ், IIT மெட்ராஸ் மற்றும் நாட்டிங்கம் பல்கலைக்கழகம் ஆகிய

நிறுவனங்களுடன் இணைந்து ஒரு ஆய்வு மேற்கொண்டுள்ளது. நான்காம் தலைமுறை தொழில் வளர்ச்சியினை இலக்காகக் கொண்ட நடவடிக்கைகளை மதிப்பிடுவதற்கும் மேம்படுத்துவதற்கும் எதிர்கால நிறுவனங்களுக்கு இந்த அறிக்கை உதவிடும்.

### 1.6.3 கரையோர காற்றாலை உற்பத்தி வசதி

தமிழ்நாட்டின் கடல் சார் காற்றாலைத் திறன் கிட்டதட்ட 35 ஜிகாவாட் அளவில் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தேசிய காற்று எரிசக்தி நிறுவனம் (National Institute of Wind Energy (NIWE), பலதரப்பட்ட நிறுவனங்களுடன் இணைந்து நடத்திய ஆரம்ப ஆய்வுகளின் அடிப்படையில், தமிழ்நாட்டின் கடலோரப் பகுதிகளில் அமைந்துள்ள எட்டு மண்டலங்கள் ஒன்றிய அரசால் அடையாளம் காணப்பட்டு, கடலோர காற்றாலை எரிசக்தி மண்டலங்களாக கண்டறியப்பட்டு உள்ளன. கன்னியாகுமரி மற்றும் ராமேஸ்வரம் இடையே உள்ள பகுதி, அதிக சாத்தியக்கூறுகளைக் கொண்டிருப்பதாக இந்த ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

ஒன்றிய அரசின் புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம் (The Ministry of New and Renewable

Energy – MNRE), தமிழ்நாட்டின் கடலோரத்தின் முன்மொழியப்பட்ட கடலோர காற்றாலை ஆற்றல் திட்டங்களுக்கான (Offshore Wind Energy projects) கடல்படுகை குத்தகை (Sea bed leasing) தேர்வுக்கான கோரிக்கை ஆவணத்தை வெளியிட்டுள்ளது (Request for Selection – RfS). காற்றாலை மின் திட்டங்களில் இருந்து உற்பத்தி செய்யப்படும் 2 ஜிகாவாட் திறன் மின்சாரம் மாநிலத்திற்கே வழங்கப்படும் என்று MNRE வெளியிட்ட அறிவிப்பினை தொடர்ந்து, தென் மாநிலங்களில் தொழில் வளர்ச்சியை மேம்படுத்துவதற்காக, இந்த மொத்த மின் உற்பத்தியையும் மாநிலமே வாங்கிக் கொள்வதாக, தமிழ்நாடு அரசு தனது விருப்பத்தைத் தெரிவித்துள்ளது.

எரிசக்தி ஆதாரங்கள் மற்றும் அதன் தொடர்பான உற்பத்தி முதலீடுகள் மூலமாக, கணிசமான அளவில் பயன்பெறும் நிலையில் நமது மாநிலம் உள்ளது. சமீபத்திய ஆண்டுகளில், நார்டெக்ஸ், கமீசா, எனர்கான் மற்றும் வெஸ்டாஸ் போன்ற எரிசக்தி உபகரண உற்பத்தியாளர்கள் தமது திட்டங்களை இங்கு நிறுவியுள்ள காரணத்தால், காற்றாலை எரிசத்தி உபகரண உற்பத்திக்கான தொழில் சூழலமைப்பை மாநிலம் வெகுவாக மேம்படுத்தியுள்ளது. இதுபோலவே, வார்ப்பாலைகள், வடிவமைத்தல் மற்றும் பொது

உற்பத்தி நிறுவனங்கள் வலுவாக உள்ள காரணத்தால், கியர் பாக்ஸ் உற்பத்தியாளர்கள் மற்றும் உயர் கோபுரங்கள் கட்டுபவர்கள் போன்றவர்களும், தமது திட்டங்களை தமிழ்நாட்டில் நிறுவுகின்றனர். கடலோர காற்றாலை உற்பத்தி என்பது, தற்போதுள்ள நிறுவனங்களும் புதிய முதலீட்டாளர்களும், தங்களது புதிய / விரிவாக்க / மதிப்புக் கூட்டு திட்டங்களை நிறுவிட, பல வாய்ப்புகளை வழங்குகிறது. அது மட்டுமல்லாமல், கடலோரக் காற்றாலை திட்டங்கள், தூத்துக்குடி துறைமுகம் மற்றும் இதர சிறிய துறைமுகங்களுக்கு, பணியாளர் மற்றும் கப்பல் இயக்கத்தினை மேம்படுத்தி, ஆதரவுச் சேவைகள் மற்றும் பராமரிப்பு போன்றவற்றை மேம்படுத்திடவும் உதவிடும்.

இத்துறையில் மாநிலத்தின் திறனை வெளிப்படுத்தவும், பல திட்டங்களை வகுத்திட ஏதுவாகவும், வழிகாட்டி நிறுவனம், டெலாய்ட் மற்றும் உலகளாவிய காற்றாலை எரிசக்தி கவுன்சில் (Global Wind Energy Council) ஆகிய நிறுவனங்களுடன் இணைந்து, ஒரு இடைவெளி பகுப்பாய்வு அறிக்கையை (gap analysis report) வெளியிட, வழிவகை செய்தது.

## 1.7 2023–24ஆம் நிதியாண்டில் செயல் திட்டம்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், 2024ஆம் ஆண்டு ஜனவரி 10, 11 ஆகிய தேதிகளில் உலக முதலீட்டாளர்கள் மாநாடு நடத்தப்படும் என்று அறிவித்துள்ளார்கள். மேலும், வழிகாட்டி நிறுவனம், இந்த நிகழ்வுக்குத் தேவையானதும் இன்றியமையாததும் ஆன முதலீட்டு ஊக்குவிப்பு நடவடிக்கைகளையும் அவ்வாறான திட்டங்கள் அமைக்கப்பட்ட பிறகு மேற்கொள்ள வேண்டிய ஆதரவுச் சேவைகளையும் மேற்கொள்ளும் வகையில், சில செயல்திட்டங்களை திட்டமிட்டுள்ளது.

### 1.7.1 முதலீட்டு ஊக்குவிப்பு

06.04.2022 அன்று, சட்டமன்ற விதி 110ன்கீழ், உலகளாவிய முதலீட்டாளர்களை ஈர்த்திடவும், 1 டிரில்லியன் டாலர் பொருளாதாரம் என்ற இலக்கை அடைந்திடும் நோக்கத்துடனும், உலக முதலீட்டாளர்கள் மாநாடு நடத்தப்படும் என்று சட்டமன்றத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருந்தார்கள். 2024ஆம் ஆண்டு, ஜனவரி 10 மற்றும் 11 ஆகிய தேதிகளில் இந்த நிகழ்வினை நடத்திட அரசு அனுமதி அளித்துள்ளது. மேலும்,

இந்நிகழ்வினைச் சிறப்பாக நடத்திடுவதற்காக, 100 கோடி ரூபாய் நிதியும் ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வின் பொருட்டு, 2023–24 நிதியாண்டில், கடந்த ஆண்டில் அரசின் சாதனைகள், நாடு / நிறுவனங்கள் சார்ந்த கண்காட்சிகள், உலகளாவிய நிபுணர்களுடன் வட்ட மேசை மாநாடுகள், இந்நிகழ்விற்கான கூட்டாளி நாடுகளுடன் பல்வேறு அமர்வுகள், அரசு–வணிக சந்திப்புகள், வாங்குபவர் – விற்பவர்களுக்கான சந்திப்புகள், தொழிற்சாலைகளுக்கான சுற்றுலா, கலாச்சார மற்றும் தொடர்புப் பிணையங்கள் (Networking), நிரலோட்டங்கள் (Hackathons) மற்றும் விளக்கக் காட்சிகள் போன்ற நடவடிக்கைகள் முக்கிய நடவடிக்கைகளாக கண்டறியப்பட்டுள்ளன. இந்த உலக முதலீட்டாளர்கள் மாநாட்டை நடத்துவதற்கான முன்னோட்ட நிகழ்வுகளாக, வழிகாட்டி நிறுவனத்தின் முதலீட்டு ஊக்குவிப்புக் குழு, சர்வதேச மற்றும் உள்நாட்டு முதலீட்டாளர்களை இலக்கு வைத்து, அதற்கேற்றாற்போல முதலீட்டு ஊக்குவிப்பு நிகழ்வுகள் நடத்தும். முதலீடு ஈர்ப்பு நடவடிக்கைகளின் உத்வேகத்தை அதிகரிக்கும் வகையில், மாவட்ட வாரியாக முதலீட்டு நிகழ்வுகள் நடத்தப்பட உள்ளன.

முதலீட்டு நோக்கங்களை, உண்மையான முதலீடுகளாக மாற்றி, மாநிலத்தில் நிறுவ செய்திடுவதே, இதன் நோக்கம். தலைப்புச் செய்திகளுக்காக மட்டும், பெரிய பெரிய திட்டங்களை ஈர்த்ததாக அறிவிப்பது, முதலீட்டாளர்கள் மனதில் ஐயத்தை விளைவிக்கும். மேலும், தமிழ்நாட்டிற்கு வெளியில் இருந்து வரும் முதலீட்டாளர்கள், தங்கள் உற்பத்தி மற்றும் இதர முதலீடுகளுக்கான தளமாக தமிழ்நாடு வழங்கிடும் வாய்ப்பை நன்கு பயன்படுத்திக் கொண்டு, தங்களின் முதலீடுகளை உறுதி செய்வதே, இம்முயற்சிகளின் நோக்கமாகும். அதே நேரத்தில், மாநிலத்தில் உள்ள பெரிய மற்றும் சிறிய தொழில்கள், புத்தொழில்கள் உள்ளிட்ட தொழில் முனைவோர் மற்றும் இதர நிறுவனங்கள், வணிகம் செய்ய சாத்தியக்கூறு உள்ள நிறுவனங்களுடன் தங்களை இணைத்துக் கொள்ள இயலும்.

### 1.7.2 வணிகம் புரிதலை எளிதாக்குதல்

#### 1.7.2.1 முதலீடுகளுக்கான ஆதரவுச் சேவைகள் மற்றும் திட்டங்கள் அமைக்கப்பட்டபின் வழங்கப்படும் சேவைகள்

- வணிகம் புரிதலை எளிதாக்கும் குழு, 82 கூடுதல் சேவைகளை ஒற்றைச்சாளர இணையத்தில் இணைக்கும். இதன் மூலம்

திட்டமிட்ட 236 சேவைகள் ஒற்றைச்சாளர இணையதளம் மூலம் வழங்குவது உறுதிப்படும்.

- ஒன்றிய அரசின் DPIIT துறையுடன் இணைந்து செயலாற்றி, ஒரு இணக்கச் சுமை குறைப்பு மதிப்பீட்டுப் பயிற்சி ஒன்று 2023ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படும். இதற்கான முன்னோடி திட்டங்களும் இந்த ஆண்டில் மேற்கொள்ளப்பட உள்ளது.
- தகவல் தரவு மையங்களுக்கு ஆதரவுச் சேவைகள் வழங்கிடும் விதமாக "நில அன்பளிப்பு" தொடர்பாக 2023ஆம் ஆண்டில் சட்ட திருத்தங்கள் மேற்கொள்ளப்படும்.

### 1.7.2.2 ஏற்றுமதி ஊக்குவிப்புப் பிரிவு

தமிழ்நாடு ஏற்றுமதிக் கொள்கை 2021ல் அறிவித்துள்ளபடி, சமீபத்திய ஏற்றுமதிப் போக்குகள், இணக்கங்கள், சந்தை நிலவரங்கள் ஆகியவற்றைக் கண்டுபிடிப்பதற்கும், தகவல்களை எளிதில் அணுகக் கூடிய வகையிலும், ஒரு மின்னணு தளம் வடிவமைக்கப்படும்.

### 1.7.3 சிறப்பு முயற்சிகள்

- மேம்பட்ட உற்பத்தி மற்றும் நான்காம் தலைமுறை தொழில் வளர்ச்சி தொடர்பாக ஒரு பிரத்யேக இணையதளம் 2023ஆம் ஆண்டில் உருவாக்கப்படும். இத்துறை சம்பந்தப்பட்ட அனைத்து பங்குதாரர்களும் பயன்பெறும் வகையில் இது அமைக்கப்படும்.
- **அறிவுசார் நகரங்கள் மற்றும் பூங்காக்கள் அமைத்தல்** – ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையங்கள், திறன் பயிற்சி மையங்கள் மற்றும் அறிவுசார் தொழில் நிறுவனங்களுடன் இணைந்து, புகழ்பெற்ற சர்வதேச பல்கலைக்கழகங்கள் நிறுவப்படுவதை மேலும் மேம்படுத்திடும் வகையில், அறிவுசார் பூங்காக்கள் மற்றும் நகரங்கள் நிறுவப்படும் என்று தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.
- மேம்பட்ட உற்பத்தி மற்றும் நான்காம் தலைமுறை தொழில் வளர்ச்சி சார்ந்த தொழில் நுட்பங்களை ஏற்றுக் கொள்வதற்கு உதவிடும் வகையில், தமிழ்நாடு அரசு, ஐக்கிய நாடுகள் தொழில் மேம்பாட்டு நிறுவனத்துடன் (UNIDO) இணைந்து, முக்கியத் துறைகளில் கொள்கை வகுப்பாளர்களுக்காக திறன்

மேம்பாட்டு திட்டங்கள் நடத்த முடிவெடுத்துள்ளது.

### 1.7.4 கொள்கை வடிவாக்கம்

- இந்தியாவின் எரிசக்தி பாதுகாப்பை அதிகரித்தல், பசுமை எரிசக்தி வர்த்தகத்தில் ஒரு முக்கிய பங்கு வகித்தல், குறைவான கார்பன் – பொருளாதாரத்தை நோக்கி முன்னேறுதல், குறைவான கார்பன் – உற்பத்தி நுட்பங்கள் மற்றும் விநியோகச் சங்கிலியில் முதலீடுகளை ஈர்த்தல் போன்ற இலக்குகளோடு, நைட்ரஜன் / அம்மோனியா கொள்கையை, தமிழ்நாடு அரசு வெளியிட உள்ளது.
- 2021ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட தொழிற்கொள்கையின் மூலம் ஏற்பட்ட முதலீடுகள், தொழில்துறை சூழலமைப்பு போன்றவற்றில் ஏற்படுத்தப்பட்ட தாக்கம் ஆகியவை குறித்து மறு ஆய்வு மேற்கொள்ளப்படும்.




ஸ்விட்சர்லாந்து, டாவோஸ் நகரில் நடைபெற்ற உலகப் பொருளாதார மன்றம் 2023ல் தமிழ்நாட்டிற்கான அரங்கம்

BLANK




19.01.2023 அன்று டாவோசில் நடந்த உலகப் பொருளாதார மன்றம் – 2023ல்
மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் மற்றும் உலகளாவிய
தொழில் நிறுவனங்களின் முன்னணித் தலைவர்கள்

**BLANK**




23.08.2022 அன்று நடந்த காலணி மற்றும் தோல் பொருட்கள் முதலீட்டு மாநாட்டின் போது மாண்புமிகு முதலமைச்சர் முன்னிலையில் இத்துறையில் உள்ள பல பெரிய நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டன

BLANK




மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 14.02.2023 அன்று புதிய
"தமிழ்நாடு மின் வாகனக் கொள்கை 2023"-ஐ வெளியிட்டார்கள்

BLANK




மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 14.02.2023 அன்று நடந்த ஓலா நிறுவனத்தின் மின் வாகன மற்றும் மின்னேற்று கலன்கள் உற்பத்தி நிறுவனத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்த விழாவிற்கு தலைமை தாங்கினார்கள்

BLANK

## 2. தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம்

தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சியை முன்னேற்ற பாதையில் கொண்டு செல்லும் நோக்கத்துடன் 1971ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் (சிப்காட்) தோற்றுவிக்கப்பட்டது. சிப்காட் நிறுவனம், நிறுவப்பட்டதிலிருந்து, தமிழகத்தில் 16 மாவட்டங்களில், 6 சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் உட்பட, 28 தொழிற்பூங்காக்களை சுமார் 38,538 ஏக்கர் பரப்பளவில் ஏற்படுத்தியதோடல்லாமல் வளர்ச்சியடையச் செய்துள்ளது.

சிப்காட் தொழிற் பூங்காக்கள், தொழில்மயம் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆகியவற்றுக்கு இடையிலான சமநிலையை உறுதி செய்யும் வகையில், அனைத்து பகுதிகளையும் சரியானபடி இணைக்கும் வகையுடன் கூடிய தரமான நன்கு ஒளிரும் சாலைகள், மழை நீர் வடிகால் அமைப்புகள், நீர் விநியோகம் மற்றும் சேமிப்பு அமைப்புகள், அனைத்து வசதிகளையும் உள்ளடக்கிய நிர்வாக அலுவலகங்கள், செம்மையான கண்காணிப்பு அமைப்புகள், போதுமான பசுமைச் சூழல் மேம்பாடு, நன்கு பராமரிக்கப்படும் திறந்தவெளிப் பகுதிகள் (OSR) ஆகிய அடிப்படை கட்டமைப்பு வசதிகளை கொண்டுள்ளன.

கடந்த 52 ஆண்டுகளில், சிப்காட் நிறுவனம், ஒட்டுமொத்தமாக 1.62 இலட்சம் கோடி ரூபாய் முதலீட்டுடன், 7.56 இலட்சம் நபர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கிய 3,142 தொழில் நிறுவனங்களை உருவாக்கியும், அதன் வளர்ச்சிக்கும் இன்றியமையாத பங்களிப்பை ஆற்றியுள்ளது.

21ஆம் நூற்றாண்டில், நான்காம் தலைமுறை தொழில் புரட்சியானது உற்பத்தி செயல்முறைகளில் குறிப்பிடத்தக்க மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. அறிவார்ந்த தொழிற்சாலைகள் மற்றும் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பங்களை நோக்கிய முன்னேற்றத்துடன், தொழில் கட்டமைப்பின் தேவைகள், அடிப்படை உள்கட்டமைப்பு வசதிகளிலிருந்து ஒருங்கிணைந்த உள்கட்டமைப்பு வசதிகளுக்கு குறிப்பிடத்தக்க வகையில் மாறியுள்ளன. சிப்காட் நிறுவனம், எப்போதும் தொழில் நிறுவனங்களில் வளர்ந்து வரும் தேவைகளைப் பூர்த்தி செய்யும்வகையில் விரிவான தொழில் சூழலை ஏற்படுத்த முனைந்து வருகிறது.

சமீப காலங்களில், சிப்காட் நிறுவனம் வளர்ந்து வரும் துறைகளான, அறைகலன்கள், மருத்துவ உபகரணங்கள், மின்னணு உற்பத்தி தொகுப்புகள், உணவுப் பதப்படுத்துதல், வருங்கால நகர்திறன், ஜவுளி

மற்றும் தோல் துறைகளுக்காக மாநிலத்தில் உருவாக்கும் தனிப்பட்ட துறை சார்ந்த பூங்காக்கள் தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சிக்கு மணிமகுடங்களாக விளங்கும். அனுபவம் மிக்க தொழில்நுட்ப மற்றும் மேலாண்மை ஆலோசகர்கள் மூலம் குறிப்பிட்ட துறை சார்ந்த தொழில்களின் தேவைகளுக்கேற்ப, தொழில்வாரியாகவும் பல கட்டங்களாக செயல்படுத்தப்படும் வகையிலும், விரிவான தொழிற் பூங்கா பெருந்திட்டத்தினை சிப்காட் நிறுவனம் தயாரித்து வருகிறது. தனது துறை சார்ந்த தொழிற் பூங்காக்களின் மூலம் இத்துறையில் உள்ள பல்வேறு பங்குதாரர்களின் தொழிற்சூழல் அமைப்பு மதிப்புச் சங்கிலி உதவியோடு, அதிக அளவில் உற்பத்தி செய்யும் பயன்களைப் பெற சிப்காட் முயற்சி செய்து வருகிறது.

சிப்காட் நிறுவனம், தனது வணிக வசதி சேவைகளை, கோப்புகளை டிஜிட்டல் மயமாக்குதல், விரைவான ஒப்புதலுக்கான இ-அலுவலக அமைப்பு (e-office) பயன்பாடு மற்றும் தொழிற்பூங்காக்களில் இருப்பில் உள்ள நிலம் பற்றிய தகவல்களை முதலீட்டாளர்கள் மின்னணு முறையில் நேரடியாக, எளிதான முறையில் அறியும் வசதிகளுடன் புவியியல் தகவல் முறைமை வரைதளத்துடன் (GIS portal) கூடிய

இ–முன்னெடுப்பு முறைக்கு மாறியுள்ளது. இணையதள நில ஒதுக்கீட்டு விண்ணப்ப முகமை, விண்ணப்பதாரர்களுக்கு எளிதான மற்றும் வெளிப்படையான சேவையை தொடர்ந்து வழங்கி வருகிறது.

சிப்காட் நிறுவனம், தொழில்மனை அளவினை எளிதாக மாற்றியமைத்தல், தொழில்மனை பயன்பாட்டினை தொடர் கண்காணித்தல், நிலத்தை திரும்ப ஒப்படைத்தல் மற்றும் உள் குத்தகைக் கொள்கைகளை கடைபிடிப்பதன் மூலமாக, தொழில்முனைவோர் ஒதுக்கீடு பெற்ற மனையை திறமையாகவும், முழுமையாகவும் பயன்படுத்துவதை உறுதி செய்கிறது. சிப்காட் நிறுவனத்தின் நேரடி பேச்சுவார்த்தை முறை, நிலம் கையகப்படுத்துவதை விரைவுபடுத்தியுள்ளது.

அனைவரையும் உள்ளடக்கிய நீடித்த நிலையான தொழில் வளர்ச்சி எப்போதும் சிப்காட் நிறுவனத்தின் முன்னுரிமையாக இருந்து வருகிறது. உள்கட்டமைப்பு மேம்பாட்டில் பங்கேற்பு திட்டத்தின் (Participatory Infrastructure Development Program)கீழ், தொழிற் பூங்காக்களில் சிறப்பு உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் மற்றும் சிறப்பு கட்டமைப்பு வசதிளை ஏற்படுத்துவதன் மூலம், சிப்காட் நிறுவனம்

அதன் நில ஒதுக்கீட்டாளர்களிடையே கூட்டுப் பொறுப்புணர்வை ஏற்படுத்தி வருகிறது. கழிவுநீரை மறுசுழற்சி செய்து பயன்படுத்துதல், நீர்நிலைகளை புத்தாக்கம் செய்தல், கார்பன் மூழ்கிகளை உருவாக்க பெருமளவில் மரம் வளர்ப்பு போன்ற செயல்கள் மூலம், சிப்காட் தனது தொழில் பூங்காக்களை பசுமையான, நிலையான சுற்றுச்சூழல் பாதுகாப்பு கொண்ட பூங்காக்களாக மாற்றி வருகிறது.

## 2.1 தற்போதுள்ள தொழில் பூங்காக்கள்

சிப்காட் நிறுவனம் கீழ்கண்ட தனது தொழிற் பூங்காக்கள் மூலம் மாநிலத்தின் தொழில் வளர்ச்சிக்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பினை அளித்து வருகிறது.

| வ. எண் | தொழிற் பூங்கா | நிலப்பரப்பு (ஏக்கரில்) |
|---|---|---|
| 1 | இராணிப்பேட்டை நிலை I & II<br>(சிறப்புப் பொருளாதார மண்டலம் உட்பட) | 1,421 |
| 2 | கும்மிடிப்பூண்டி நிலை I & II<br>(ஏற்றுமதி ஊக்குவிப்பு தொழிற் பூங்கா (EPIP) உட்பட | 1,478 |
| 3 | கடலூர் நிலை I, II & III | 2,625 |
| 4 | இருங்காட்டுக்கோட்டை | 1,844 |
| 5 | பிள்ளைப்பாக்கம் | 1,131 |
| 6 | (i) திருப்பெரும்புதூர் நிலை I, II & III<br>(சிறப்புப் பொருளாதார மண்டலம் உட்பட) | 2,185 |
| | (ii)திருப்பெரும்புதூர் நிலை IV (மாம்பாக்கம்) | 189 |

| | | |
|---|---|---|
| 7 | சிறுசேரி | 783 |
| 8 | (i) ஒரகடம் நிலை I<br>(சிறப்புப் பொருளாதார மண்டலம் உட்பட) | 3,074 |
| | (ii) ஒரகடம் நிலை II (வைப்பூர்–மாத்தூர்) | 452 |
| 9 | செய்யாறு நிலை I & II | 2,937 |
| 10 | மப்பேடு | 122 |
| 11 | தேர்வாய்க்கண்டிகை | 1,127 |
| 12 | (i) வல்லம் – வடகால் நிலை I & II | 1,456 |
| | (ii) வல்லம் – வடகால் வானூர்திப் பூங்கா | 234 |
| 13 | திண்டிவனம் | 694 |
| 14 | (i) மாநல்லூர் நிலை I | 692 |
| | (ii) மாநல்லூர் நிலை II | 1,348 |
| 15 | நெமிலி | 229 |
| 16 | திருமுடிவாக்கம் | 82 |
| 17 | எறையூர் | 244 |
| 18 | பெருந்துறை<br>(சிறப்புப் பொருளாதார மண்டலம் உட்பட) | 2,623 |
| 19 | ஓசூர் நிலை I & II | 2,093 |
| 20 | சூளகிரி நிலை I | 1,022 |
| 21 | பர்கூர்<br>சிறப்புப் பொருளாதார மண்டலம் உட்பட) | 1,379 |
| 22 | குருபரப்பள்ளி நிலை I & II | 196 |
| 23 | புதுக்கோட்டை | 421 |
| 24 | மானாமதுரை | 492 |
| 25 | தூத்துக்குடி நிலை I & II | 2,509 |
| 26 | நிலக்கோட்டை | 387 |
| 27 | கங்கைகொண்டான்<br>(சிறப்புப் பொருளாதார மண்டலம் உட்பட) | 1,992 |
| 28 | மணப்பாறை | 1,077 |
| | **மொத்தம்** | **38,538** |

மேற்கூறிய தொழிற் பூங்காக்களில், திருப்பெரும்புதூர் (241.64 ஏக்கர்), ஒரகடம் (295.86 ஏக்கர்), பெருந்துறை (172.34 ஏக்கர்), இராணிப்பேட்டை (133.76 ஏக்கர்), கங்கைகொண்டான் (128.27 ஏக்கர்) மற்றும் பர்கூர் (149.95 ஏக்கர்) ஆகிய சிறப்புப் பொருளாதார மண்டலங்களும் அடங்கும். திருப்பெரும்புதூரில், ஃப்ளெக்ஸ்ட்ரானிக்ஸ் டெக்னாலஜிஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட் மற்றும் நோக்கியா இந்தியா பிரைவேட் லிமிடெட், செய்யாறு, பர்கூர் மற்றும் திண்டிவனத்தில், செய்யாறு செஸ் டெவலப்பர்ஸ் பிரைவேட் லிமிடெட், சிறுசேரியில் டாடா கன்சல்டன்ஸி சர்வீசஸ் லிமிடெட், சின்டல் இன்டர்நேஷனல் பிரைவேட் லிமிடெட், காக்னிஸன்ட் டெக்னாலஜி சொலுஷன்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட் மற்றும் ஹெக்சாவேர் டெக்னாலஜீஸ் லிமிடெட் ஆகிய தனியார் சிறப்பு பொருளாதார மண்டலங்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

சிப்காட் நிறுவனம் துறை சார்ந்த தொழிற் பூங்காக்கள் மீது செலுத்தும் தனி கவனம், அதன் வாகன உற்பத்தி தொகுப்புகள், மின்னணு தொகுப்புகள், பொது பொறியியல் தொகுப்புகள், தகவல் தொழில்நுட்பம் மற்றும் பிற துறைகளில்,

பெருந்தொழில் நிறுவனங்களின் குழுமங்கள் தங்கள் தடத்தினைப் பதித்திட முன்னோடியாக உள்ளது.

திருப்பெரும்புதூர் மண்டலத்தில், ஹூண்டாய் மோட்டார் இந்தியா லிமிடெட், இந்தியா யமஹா மோட்டார் பிரைவேட் லிமிடெட், எய்ச்சர் மோட்டார்ஸ் லிமிடெட், ரெனால்ட் நிசான் ஆட்டோமோட்டிவ் இந்தியா பிரைவேட் லிமிடெட், டெய்ம்லர் இந்தியா கமர்ஷியல் வெஹிகிள்ஸ் பிரைவேட் லிமிடெட், மோபிஸ் இந்தியா லிமிடெட், மேண்டோ ஹெல்லா எலக்ட்ரானிக்ஸ் ஆட்டோமோடிவ் இந்தியா பிரைவேட் லிமிடெட், ச்விங் ஸ்டெட்டர் இந்தியா லிமிடெட் மற்றும் பிற நிறுவனங்களை உள்ளடக்கிய வாகன உற்பத்தி தொகுப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளதால் பன்முக வளர்ச்சியை காணமுடிகிறது.

திருப்பெரும்புதூர் பகுதியில், எஃப்ஜஎச் இந்தியா டெவலப்பர் பிரைவேட் லிமிடெட், ஃப்ளெக்ஸ்ட்ரானிக்ஸ் டெக்னாலஜிஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட், சாம்சங் இந்தியா எலக்ட்ரானிக்ஸ் பிரைவேட் லிமிடெட், டெல் இந்தியா பிரைவேட் லிமிடெட், சால்காம்ப் மேனுபாக்சரிங் இந்தியா பிரைவேட் லிமிடெட், சான்மினா எஸ்சிஐ டெக்னாலஜி இந்தியா பிரைவேட் லிமிடெட், நோக்கியா சொல்யூஷன் & நெட்வொர்க்ஸ் இந்தியா பிரைவேட்

லிமிடெட் மற்றும் பிற நிறுவனங்கள் உள்ளடக்கிய மின்னணு தொகுப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மேலும், திருப்பெரும்புதூர் மண்டலம், இருங்காட்டுக்கோட்டையில் உள்ள ஆடைப்பூங்கா (123.85 ஏக்கர்) மற்றும் காலணி உபகரணங்கள் பூங்கா (52.63 ஏக்கர்), ஒரகடத்தில் உள்ள ரெனால்ட் & நிஸ்ஸான் நிறுவனத்திற்கு உபகரணங்கள் உற்பத்தி செய்வோர் பூங்கா (168.73 ஏக்கர்) (Renault & Nissan Vendors Park), பிள்ளைப்பாக்கத்தில் உள்ள ரெனால்ட் & நிஸ்ஸான் நிறுவனத்திற்கு உபகரணங்கள் விற்பனையாளர் பூங்கா (Renault & Nissan Suppliers Park) (80.00 ஏக்கர்) மற்றும் வல்லம்–வடகாலில் உள்ள இந்தியா யமஹா நிறுவனத்திற்கு உபகரணங்கள் உற்பத்தி செய்வோர் பூங்கா (67.25 ஏக்கர்) ஆகிய தயாரிப்பு பொருள் சார்ந்த தொழிற்பூங்காக்கள் சிப்காட் நிறுவனத்தின் பன்முக வளர்ச்சியினைப் பறைசாற்றுகின்றது.

ஓசூரில், அசோக் லேலண்ட், டைட்டன் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட், டெரெக்ஸ், வெக் மற்றும் பிரெஸ்டீஜ் ஆகிய நிறுவனங்களால் பொது பொறியியல் தொகுப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. பெருந்துறையில், ஜே ஜே மில்ஸ் லிமிடெட், கே.பிரைவேட்ஆர் மில்ஸ், பிரீமியர் பாலிவீவ் பி லிமிடெட், ஸ்ரீ கண்ணபிரான்

மில்ஸ் லிமிடெட், அமர்ஜோதி ஸ்பின்னிங் மில்ஸ் லிமிடெட் மற்றும் பிற நிறுவனங்களுடன் ஜவுளி தொகுப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. கடலூரில், கெம்ப்ளாஸ்ட் கடலூர் வினைல்ஸ் லிமிடெட், டான்ஃபாக், டாக்ரோஸ், டாடா கெமிக்கல்ஸ் மற்றும் பிற நிறுவனங்கள் வேதியியல் தொகுப்பில் உறுதியான அடித்தளத்தை ஏற்படுத்தியுள்ளன. இராணிப்பேட்டையில் பெருமளவிலான சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் (MSME Units) தோல் தொழில் தொகுப்பு (Leather Cluster) வளர்ச்சிக்கு முக்கிய பங்களித்துள்ளது.

டாடா கன்சல்டன்சி சர்வீசஸ் லிமிடெட், சின்டெல் இன்டர்நேஷனல் பிரைவேட் லிமிடெட், காக்னிஸன்ட் டெக்னாலஜி சொலுஷன்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட், ஹெக்ஸாவேர், ஐகேட், ஜியோ இன்ஃபோகாம் மற்றும் பிற நிறுவனங்களின் வருகையினால், சிறுசேரி தகவல் தொழில்நுட்ப தொகுப்பின் மையமாக உருப்பெற்றுள்ளது. மேலும், இந்த பூங்கா, நேஷனல் பேமென்ட்ஸ் கார்ப்பரேஷன் ஆஃப் இந்தியா லிமிடெட், சிஃபி இன்பினிட் ஸ்பேஸ் லிமிடெட், நெக்ஸ்ட்ரா டேட்டா லிமிடெட், டிசி டெவலப்மென்ட் சென்னை பிரைவேட் லிமிடெட், டெக்னோ இன்ஃப்ரா டெவலப்பர் பிரைவேட் லிமிடெட்,

ஈக்வினிக்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட் மற்றும் எஸ்டிடி குளோபல் டேட்டா சென்டர்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட் போன்ற நிறுவனங்கள் அமையபெற்றுள்ளதால் சிறுசேரி தகவல் தொழில்நுட்ப பூங்கா, பெரும் தரவு மையமாகவும் உருவாகி வருகிறது.

சிப்காட் தொழிற்பூங்காக்களில் அமைந்துள்ள செயின்ட் கோபெய்ன் இந்தியா பிரைவேட் லிமிடெட், அப்பல்லோ டயர்ஸ் லிமிடெட், அல்லிசன் ட்ரான்ஸ்மிஸ்ஸன் இந்தியா பிரைவேட் லிமிடெட், டெல்பி ஆட்டோமோடிவ் பிரைவேட் லிமிடெட், கெபாரோ இன்ஜினியரிங் இந்தியா பிரைவேட் லிமிடெட், மிச்சலின் இந்தியா பிரைவேட் லிமிடெட், ஏடிசி டயர்ஸ் பிரைவேட் லிமிடெட், ஆம்வே இந்தியா என்டர்பிரைசஸ் பிரைவேட் லிமிடெட், மஹிந்திரா அண்டு மஹிந்திரா லிமிடெட், டெல்டா எலக்ட்ரானிக்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட், மைலான் லேபாரட்டரீஸ், டான்ஃபாஸ் இண்டஸ்ட்ரீஸ் பிரைவேட் லிமிடெட், ஓலா எலக்ட்ரிக் டெக்னாலஜீஸ் பிரைவேட் லிமிடெட், ஆட்டோலிவ் இன்ஃப்ளேட்டர்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட், கிரேசிம் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட், பிரிட்டானியா இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட், அன்ஜான் ட்ரக் பிரைவேட் லிமிடெட், சுந்தரம் க்ளேடன் லிமிடெட், லூகாஸ் டி.வி.எஸ்

லிமிடெட், பி.சி.பி.எல். (த.நா) லிமிடெட் ஆகிய நிறுவனங்கள் மாநிலத்தில் நிலையான முதலீட்டையும் வேலைவாய்ப்பையும் ஏற்படுத்தியுள்ள பிற பெரிய நிறுவனங்களாகும்.

2022–2023 ம் ஆண்டில், சிப்காட் நிறுவனம், சூளகிரியில், ஸ்கே.ஃப்ளர் இந்தியா லிட் மற்றும் மாய்வா ஃபார்மா பிரைவேட் லிட், செய்யாறில், அமர ராஜா பேட்டரீஸ் லிமிடெட் மற்றும் எம்&பி இன்ஜினியரிங் லிட், எறையூரில், ஃபீனிக்ஸ் கோத்தாரி ஃபுட்வேர் லிமிடெட், கங்கைக் கொண்டானில், டி,பி. சோலார் லிமிடெட் மற்றும் வி.எஸ்.எல். க்ரீன் பவர் பிரைவேட் லிமிடெட், தேர்வாய்கண்டிகையில் சென்சுரி ப்ளைபோர்ட்ஸ் இந்தியா லிமிடட், தூத்துக்குடியில் மேனர் & மியூஸ் பர்னிச்சர் இந்தியா பிரைவேட் லிமிடெட், பெருந்துறையில் டெக்னோ ஆக்டிவேர் பிரைவேட் லிமிடெட், பர்கூரில் ஸ்ரீசக்ரா பாலிப்ளாஸ்ட் இந்தியா பிரைவேட் லிமிடெட், திருப்பெரும்புதூரில் பாக்ஸ்கான் ஹான் ஹாய் டெக்னாலஜி இந்தியா மெகா டெவலப்மென்ட் பிரைவேட் லிமிடெட் மற்றும் பாலிஹோஸ் லாஜிஸ்டிக்ஸ் பூங்கா எல்.எல்.பி, வல்லம்–வடகால் வானூர்திப் பூங்காவில் இண்டோ எம்ஜஎம் பிரைவேட் லிமிடெட் ஆகிய புதிய நிறுவனங்களை வரவேற்று, மாநிலத்தில் தொழில் வளர்ச்சியினை

வலுப்படுத்தியுள்ளது. சிப்காட் நிறுவனம், கூடுதலாக சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களை ஊக்குவிப்பதற்காக, திண்டிவனம் மற்றும் மணப்பாறையில் தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்திற்கு (சிட்கோ) நிலம் வழங்கியுள்ளது.

## 2.2 நில வங்கி

வருங்கால முதலீட்டாளர்கள் மற்றும் தொழில்முனைவோரின் நிலத் தேவையை பூர்த்தி செய்வதற்காக, வரவிருக்கும் தொழிற் பூங்காக்கள் மற்றும் புதிதாக உத்தேசிக்கப்பட்டுள்ள தொழிற் பூங்காக்கள் உட்பட, 45,000 ஏக்கர் அளவிலான நில வங்கியை ஐந்தாண்டுகளில் உருவாக்க சிப்காட் நிறுவனம் முனைந்து வருகிறது. தொழில் வளர்ச்சியில் பின் தங்கிய மாவட்டங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து இந்த நில வங்கி உருவாக்கப்படும்.

### 2.2.1 அடுத்து வரவிருக்கும் தொழிற்பூங்காக்கள்:

தற்போதுள்ள 28 தொழிற்பூங்காக்கள் தவிர, சிப்காட் நிறுவனம் 7 புதிய தொழிற்பூங்காக்களை, மொத்தம் 6,035 ஏக்கர் நிலப்பரப்பில், உருவாக்கி வருகிறது. இவற்றிற்கான நிலம் கையகப்படுத்தும் பணி முடியும் தருவாயில் உள்ளது.

| வ. எண் | தொழிற்பூங்கா/ திட்டம் | மாவட்டம் | நிலப்பரப்பு (ஏக்கரில்) |
|---|---|---|---|
| 1 | இ.குமாரலிங்கபுரம் நிலை–I (பிரைவேட் எம் மித்ரா பூங்கா உட்பட) | விருதுநகர் | 1,500 |
| 2 | அதகபாடி நிலை–I | தருமபுரி | 1,733 |
| 3 | பூமலைக்குண்டு | தேனி | 468 |
| 4 | இலுப்பைக்குடி | சிவகங்கை | 776 |
| 5 | வைப்பார் | தூத்துக்குடி | 1,020 |
| 6 | மணக்குடி | இராமநாதபுரம் | 225 |
| 7 | சக்கரக்கோட்டை | இராமநாதபுரம் | 313 |
| | மொத்தம் | | **6,035** |

### 2.2.2 புதிதாக தொடங்க உத்தேசிக்கப்பட்டுள்ள தொழிற் பூங்காக்கள்

மேலும், சிப்காட் நிறுவனம், தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய மாவட்டங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து, 11 புதிய தொழிற் பூங்காக்களை மொத்தம் 14,695 ஏக்கர் நிலப்பரப்பில் தொடங்க உத்தேசித்துள்ளது, இந்த இடங்களில் நில எடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

| வ எண் | தொழிற்பூங்கா/ திட்டம் | மாவட்டம் | நிலப்பரப்பு (ஏக்கரில்) |
|---|---|---|---|
| 1 | பனப்பாக்கம் | இராணிப்பேட்டை | 1,213 |
| 2 | சிலாநத்தம் | தூத்துக்குடி | 394 |
| 3 | அல்லிக்குளம் | தூத்துக்குடி | 2,234 |
| 4 | கங்கைக்கொண்டான் நிலை – II | திருநெல்வேலி | 1,665 |

| | | | |
|---|---|---|---|
| 5 | சூளகிரி நிலை – II | கிருஷ்ணகிரி | 1,902 |
| 6 | வல்லப்பாக்கம் | காஞ்சிபுரம் | 118 |
| 7 | செய்யாறு நிலை – III (மேல்மா திட்டம்) | திருவண்ணாமலை | 3,174 |
| 8 | மாநல்லூர் நிலை – III | திருவள்ளூர் | 2,433 |
| 9 | நாகமங்கலம் நிலை–I | கிருஷ்ணகிரி | 1,441 |
| 10 | பாடலூர் | பெரம்பலூர் | 100 |
| 11 | குருபரப்பள்ளி நிலை III | கிருஷ்ணகிரி | 21 |
| | மொத்தம் | | **14,695** |

கூடுதலாக, மேலும் 18 புதிய தொழிற்பூங்காக்களை மொத்தம் சுமார் 11,095 ஏக்கர் நிலப்பரப்பில் தொடங்க சிப்காட் நிறுவனம் உத்தேசித்துள்ளது. இவற்றிற்கான நிலம் உத்தேசமாக தெரிவு செய்யப்பட்டு, மேல் நடவடிக்கையில் உள்ளது.

| வ. எண் | தொழிற்பூங்கா/ திட்டம் | மாவட்டம் | நிலப்பரப்பு (ஏக்கரில்) |
|---|---|---|---|
| 1 | இ.வேலாயுதபுரம் | தூத்துக்குடி | 355 |
| 2 | நாமக்கல் | நாமக்கல் | 790 |
| 3 | மதுரமங்கலம் | காஞ்சிபுரம் | 423 |
| 4 | கொடூர் | செங்கல்பட்டு | 249 |
| 5 | இ.குமாரலிங்கபுரம் நிலை – II | விருதுநகர் | 581 |
| 6 | அதகபாடி நிலை – II | தருமபுரி | 690 |

| | | | |
|---|---|---|---|
| 7 | காட்டுப்பள்ளி | திருவள்ளூர் | 769 |
| 8 | கரூர் | கரூர் | 200 |
| 9 | வெம்பூர் | தூத்துக்குடி | 2,814 |
| 10 | மகிமண்டலம் | வேலூர் | 288 |
| 11 | தலைவாசல் | கள்ளக்குறிச்சி | 724 |
| 12 | சின்னக்கோவிலன் குளம் | தென்காசி | 90 |
| 13 | வண்டுவாஞ்சேரி | நாகப்பட்டினம் | 250 |
| 14 | நாகமங்கலம் நிலை II | கிருஷ்ணகிரி | 1,593 |
| 15 | ஏ. சாத்தனூர் | கள்ளக்குறிச்சி | 190 |
| 16 | கூலநாயக்கன்பட்டி | கோயம்புத்தூர் | 90 |
| 17 | தாராபடவேடு | வேலூர் | 74 |
| 18 | அகத்தாகுளம் | விருதுநகர் | 925 |
| | மொத்தம் | | **11,095** |

## 2.3 நில ஒதுக்கீட்டில் ஊக்கத்தொகை

தமிழ்நாடு அரசின் தொழில் கொள்கை 2021–ன்படி, சிப்காட் நிறுவனம், "C" பிரிவு மாவட்டங்களில் (தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய மாவட்டங்கள்) தொழில் நிறுவனங்களுக்கு செய்யப்படும் நிலஒதுக்கீட்டு மதிப்பில் 50 சதவீதம் குறைத்து முன்னரே வழங்கப்படும் (front–ended) ஊக்கத்தொகையாகவும், "A" மற்றும் "B" பிரிவு (பிற மாவட்டங்கள்) சிப்காட் தொழிற்பூங்காவில் அமைந்துள்ள தொழில் நிறுவனங்களுக்கு நில ஒதுக்கீட்டு மதிப்பில் 10 சதவீதம் மீளப் பெறும் (back–

ended) ஊக்கத்தொகையாகவும் நில ஒதுக்கீடு செய்துவருகிறது.

## 2.4 குறிப்பிட்ட துறை சார்ந்த தொழிற் பூங்காக்கள்

சிப்காட் நிறுவனம், தொழில் நிறுவனங்களின் தேவைகளில் ஏற்படும் மாற்றத்திற்கேற்ப, அதன் செயல்பாடுகளை மாற்றியமைத்துக்கொள்கிறது. மேலும், சிப்காட் நிறுவனம் பல்வேறு துறை சார்ந்த தொழிற் பூங்காக்களை அந்தந்த பகுதி திறனாற்றலைக் கருத்தில்கொண்டு ஏற்படுத்தியுள்ளது.

### 2.4.1 மாபெரும் ஜவுளிப் பூங்கா / ஒருங்கிணைந்த ஆடைப்பூங்கா

'இந்தியாவின் நூல் களஞ்சியம்" என்று அழைக்கப்படும் தமிழ்நாடு, நூற்பு, கைத்தறி நெசவு, விசைத்தறி நெசவு, பதப்படுத்தல், பின்னலாடை, ஆடை மற்றும் ஆடைத் தொழிலில் மிக முக்கியத்துவம் பெற்றுள்ளது. விருதுநகரில் அமையவுள்ள மாபெரும் ஜவுளிப்பூங்காவானது, ஒன்றிய அரசின் பிஎம் மித்ரா பூங்கா திட்டத்தின் கீழ் தேர்வு செய்யப்பட்டது, தமிழ்நாட்டிற்கு கிடைத்த பெருமையாகும். முதலாவதாக விருதுநகரில் பிஎம் மித்ரா பூங்கா தொடங்குவது தொடர்பாக ஒன்றிய அரசு மற்றும்

தமிழ்நாடு அரசுகளுக்கிடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் 22.03.2023 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் முன்னிலையில் மேற்கொள்ளப்பட்டது. இந்த பூங்காவிற்காக சிப்காட் நிறுவனம் 1,052 ஏக்கர் நிலம் ஒதுக்கியுள்ளது. இந்தப் பூங்கா ஒன்றிய மற்றும் மாநில அரசுகளின் கூட்டுத் திட்டமாக, ஒன்றிய அரசின் 500 கோடி ரூபாய் மானியம் உட்பட, 2,000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஏற்படுத்தப்படும். இதன் மூலம் சுமார் 2 இலட்சம் வேலை வாய்ப்பு உருவாவதுடன், இப்பூங்கா தென் மாவட்டங்களின் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தும்.

மேலும், விருதுநகர் மாவட்டம், இ.குமாரலிங்கபுரத்தில் 1,052 ஏக்கர் பரப்பில் அமையவிருக்கும் மாபெரும் ஜவுளிப் பூங்காவில், 250 ஏக்கர் பரப்பளவில் ஒருங்கிணைந்த ஆடைப்பூங்கா உலகத் தரம் வாய்ந்த உட்கட்டமைப்பு வசதிகளுடன் உற்பத்தி கூடங்களை நவீன கலை நுட்பத்துடன் மேம்படுத்தும் வகையில் 400 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் உருவாக்க சிப்காட் முனைந்து வருகிறது.

### 2.4.2 சர்வதேச அறைகலன் பூங்கா

தமிழ்நாடு அரசு, அறைகலன் துறையில் முன்னோடியாகத் திகழ, நாட்டிலேயே முதலாவதாகவும்,

உலகத் தரத்திற்கு இணையான சிறந்த தரமான வசதிகள் மற்றும் விரிவான சுற்றுச்சூழல் அமைப்புகளை நிலைக்குறியீடாகக் கொண்டு அமைக்க திட்டமிட்டு, அத்தகைய மிகப்பெரிய அறைகலன் பூங்கா ஒன்றினை தூத்துக்குடியில் உள்ள சிப்காட் தொழிற்பூங்காவில் 1,152 ஏக்கர் பரப்பளவில், 1,000 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் படிப்படியாக உருவாக்கி வருகிறது. இப்பூங்கா நிலையானதொரு சுற்றுசூழல் அமைப்புடன் கூடிய ஏற்றுமதி சார்ந்த அறைகலன் தொழிற்கூடங்கள் அமைய ஏதுவாகும். சுமார் ரூ.4,500 கோடி அந்நிய நேரடி முதலீட்டு திறன் மற்றும் 3.50 இலட்சம் நபர்களுக்கு நேரடி மற்றும் மறைமுக வேலை வாய்ப்புகளை இப்பூங்கா உருவாக்கும்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 07.03.2022 அன்று இந்த சர்வதேச அறைகலன் பூங்காவிற்கு அடிக்கல் நாட்டப்பட்டு, 2,800 கோடி ரூபாய்க்கு மேலான முதலீட்டினை ஈர்க்கும் வகையில் 8 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையொப்பமிடப்பட்டது. மேலும், அறைகலன் தயாரிப்பில் முன்னோடி நிறுவனமான மேனர் & மியூஸ் பர்னிச்சர் இந்தியா பிரைவேட் லிமிடெட் (29.94 ஏக்கர்) நிறுவனத்திற்கு நிலம் ஒதுக்கீட்டு ஆணைகள் வழங்கப்பட்டது.

இந்த பூங்காவிற்கான பெருந்திட்டம் புகழ்பெற்ற சர்வதேச ஆலோசகர்களான ஜுராங் கன்சல்டன்ட்ஸ் (இந்தியா) பிரைவேட் லிட். அவர்களால் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த அறைகலன்கள் பூங்காவிற்கான பொது உட்கட்டமைப்பு வசதிகள் SIDBI வங்கியிடமிருந்து பெறப்படும் 265.64 கோடி ரூபாய் நிதியுதவியுடன் மேற்கொள்ளப்படும். உட்புற அணுகுச்சாலைக்கான கட்டுமானப் பணி முடிக்கப்பட்டுள்ளது. வெளிப்புற அணுகுச் சாலைக்கான கட்டுமானப் பணி முடியும் தருவாயில் உள்ளது.

### 2.4.3 மருத்துவ உபகரணத் தொழிற் பூங்கா

தமிழ்நாடு அரசு, மருத்துவ உபகரணங்கள் மற்றும் தொழில்நுட்பத் தொடர்பான துறையை தொழில் வளர்ச்சியடையக்கூடிய துறையாகக் கண்டறிந்து, அதுபொருட்டு ஒரு விரிவான தொழில் சூழலை உருவாக்க உத்தேசித்துள்ளது.

சிப்காட் நிறுவனம், மருத்துவ உபகரண துறைக்காக தொழிற் பூங்கா ஒன்றினை பிரத்யேகமாக 350 ஏக்கர் பரப்பளவில், 400 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் காஞ்சிபுரம் மாவட்டம், ஒரகடத்தில் உருவாக்கி வருகிறது. இப்பூங்காவில் பொது உட்கட்டமைப்பு வசதிகளுக்காக ஒன்றிய அரசின்

மருத்துவத் துறையின் மருத்துவ உபரகண பூங்காக்கள் மேம்பாட்டு திட்டத்தின்கீழ் 100 கோடி ரூபாய் மானியத்திற்கு அனுமதி அளித்துள்ளது.

இந்த மருத்துவ சாதனங்கள் பூங்காவானது, ஒரு ஒருங்கிணைந்த சுற்றுச்சூழல் அமைப்புடன் சோதனை ஆய்வகங்கள், முன்மாதிரி மையம், அளவுத்திருத்த வசதிகள், திறன் மேம்பாட்டு மையம் போன்றவற்றை உள்ளடக்கியதாக அமையவுள்ளது. இதனால் உயர்தர தயாரிப்பு வசதிகளும், புதுமையாக்கம், ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு, புதிய தொழில் நுட்பங்களை மேம்படுத்துதல், போன்ற செயல்பாடுகளால், இப்பூங்கா நாட்டின் மருத்துவ உபகரண மையமாக மாறும்.

இப்பூங்காவின் முதல் ஒதுக்கீட்டு ஆணை 06.07.2022 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் ஜென்யூன் பயோ சிஸ்டம் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டது. மேலும், 15 நிறுவனங்களுக்கு ஒதுக்கீட்டு ஆணை வழங்கப்பட்டுள்ளது. 10.10.2022 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் சிப்காட் மற்றும் அண்ணா பல்கலைக்கழகம் இடையே அண்ணா பல்கலைக்கழகத்தை தொழில்நுட்ப பங்குதாரராக நியமித்து, புரிந்துணர்வு ஒப்பந்தம்

கையெழுத்திடப்பட்டது. ஒரகடம் தொழிற்பூங்காவில் நிலை II மருத்துவ உபகரணங்கள் துறை சார்ந்த தொழிற் பூங்காவை மேம்படுத்த / அமைப்பதற்காக, SIDBI வங்கி ரூ.114.00 கோடி காலக் கடனுக்கு (4.11.2022) அனுமதியளித்துள்ளது. தற்போது இப்பூங்காவிற்கான உட்புற உட்கட்டமைப்பு பணிகள் நடைபெற்று வருகின்றன. EMI/EMC கட்டிட கட்டுமானப் பணி மற்றும் அணுகுபாதையை அகலப்படுத்தும் பணி முடிவுறும் தருவாயில் உள்ளது.

### 2.4.4 மின்னணு தயாரிப்பு தொகுப்புகள்

வரும் ஐந்தாண்டுகளில் 100 பில்லியன் டாலர் மதிப்பிலான மின்னணு முறை வடிவமைப்பு மற்றும் உற்பத்தித் தொழிலை எட்டவேண்டும் என்ற தனது எண்ணத்தை செயல்படுத்துவதற்கு தமிழ்நாடு அரசு தகுந்த நிலையில் உள்ளது. உலகளாவிய நிறுவனங்கள் மாநிலத்தின் நன்கு வளர்ந்த உற்பத்தி முறையை மேம்படுத்தி வருவதால், தமிழ்நாடு, மின்னணு சாதனங்கள் வன்பொருள் உற்பத்தி மற்றும் ஏற்றுமதியில் நாட்டிலுள்ள மாநிலங்களில் முக்கியமான ஒன்றாக திகழ்கிறது. எதிர்பார்க்கப்பட்ட வளர்ச்சியை அடைந்திட சிப்காட் நிறுவனம், திருவள்ளூர் மாவட்டம், மாநல்லூர் (469.09 ஏக்கர்), காஞ்சிபுரம் மாவட்டம், பிள்ளைப்பாக்கம் (379.30

ஏக்கர்) ஆகிய இரண்டு மின்னணு தயாரிப்பு தொகுப்புகளை உருவாக்க உத்தேசித்துள்ளது. ஒன்றிய அரசின் மின்னணுவியல் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் (MEITY), மின்னணு தயாரிப்பு தொகுப்புகள் (EMC) 2.0 திட்டத்தின்கீழ் வழங்கும் நிதியுதவியுடன் இந்த மின்னணு தயாரிப்பு தொகுப்புகள் ஏற்படுத்தப்படும். இங்கு, சர்வதேச மின்னணு தயாரிப்பாளர்கள் மற்றும் விற்பனையாளர்களை ஈர்க்கும் வகையில் உலகத் தரம் வாய்ந்த உள்கட்டமைப்பு மற்றும் பொதுவான வசதிகள் உள்ளடக்கிய ஆயத்த தொழிற்கூடங்கள் / தயார் நிலையில் உள்ள தொழிற்கூடங்கள் உருவாக்கப்படும். ஒன்றிய அரசின் மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்துக்கு (MEITY) இணையதள விண்ணப்பம் முறையே, 15.09.2022 (மாநல்லூர்) மற்றும் 2.11.2022 (பிள்ளைப்பாக்கம்)–ல் சிப்காட் நிறுவனத்தால் சமர்ப்பிக்கப்பட்டு, பரிசீலனையில் உள்ளது.

### 2.4.5 மாபெரும் உணவுப்பூங்காக்கள்

சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் (MSME) வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு, சிப்காட் நிறுவனம், மணப்பாறை (138 ஏக்கர்), திண்டிவனம் (158 ஏக்கர்) மற்றும் தேனி (152

ஏக்கர்) ஆகிய இடங்களில் உணவுப் பூங்காக்களை உருவாக்கி வருகிறது. ஒன்றிய அரசின் உணவு பதப்படுத்தும் தொழில் அமைச்சகம் இந்த மூன்று உணவு பூங்காக்களையும் மாபெரும் உணவுப் பூங்காக்களாக அறிவித்துள்ளது.

மணப்பாறை உணவுப்பூங்கா, தேனி உணவுப்பூங்கா மற்றும் திண்டிவனம் உணவுப்பூங்கா ஆகியவற்றின் உட்கட்டமைப்பு வளர்ச்சிக்காக முறையே ரூ.110.00 கோடி, ரூ.138.80 கோடி மற்றும் ரூ.85.04 கோடி காலக்கடன்களாக வழங்க, நபார்டு வங்கி ஒப்புதல் அளித்துள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 29.12.2022 அன்று உணவுப்பூங்கா உள்ளடக்கிய மணப்பாறை தொழிற் பூங்கா நிலை–I தொடங்கி வைக்கப்பட்டு, உணவுப் பூங்காவின் முதல் நில ஒதுக்கீட்டு ஆணை திரு. முரல்யா டைரி புராடக்ட்ஸ் பிரைவேட் லிட். நிறுவனத்திற்கு வழங்கப்பட்டது.

### 2.4.6 வருங்கால நகர்திறன் பூங்கா மற்றும் மின்வாகன பூங்கா

தூய்மையான, பாதுகாப்பான மற்றும் நிலையான மாற்றங்களை நோக்கி நகர்திறன் அமைப்புகள் செல்லத் தொடங்கியதற்கு பெருமளவு முக்கியத்துவம்

ஏற்பட்டுள்ளதை கருத்தில் கொண்டு சிப்காட் நிறுவனம், கிருஷ்ணகிரி மாவட்டம், சிப்காட் சூளகிரியில், 300 ஏக்கர் பரப்பளவில், 300 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் ஒரு தொழிற் பூங்காவினை உருவாக்க உத்தேசித்துள்ளது. இந்த பூங்கா, மின்சார வாகனங்கள், ட்ரோன்கள், தானியங்கி வாகனங்கள் மற்றும் அவற்றின் உதிரி பாகங்கள், மேம்பட்ட செல் உற்பத்தி, ஆற்றல் மின்னணுவியல், உணரிகள் மற்றும் அச்சிடப்பட்ட சர்க்யூட் போர்டுகள் (PCB), மின்சார மோட்டார் போன்ற பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகளை மேம்படுத்தும் நோக்கத்தில் அமையும். வருங்கால நகர்திறன் பூங்காவின் மேம்பாட்டிற்கான கருத்தியல் பெருந்திட்டத்தை தயாரிக்க பிரிட்டிஷ் உயர் ஆணையரகம் உதவி புரிந்தது.

மேலும், மாநிலத்தில் மின்வாகனச் சுற்றுச்சூழலை உருவாக்க முற்பட்டுள்ள தமிழ்நாடு அரசின் குறிக்கோளினை எய்திட சிப்காட் நிறுவனம் அதன் மாநல்லூர் தொழிற் பூங்காவில் 300 ஏக்கர் பரப்பளவில் மின்வாகனப் பூங்கா ஒன்றை ஏற்படுத்தி வருகிறது. இந்த பூங்கா மின் வாகன துறையில் உள்ள வாகன உபகரண தயாரிப்பாளர்கள், பேட்டரி மற்றும்

உதிரி பாகங்கள் தயாரிப்பாளர்களின் முதலீட்டினை ஈர்க்கும் வகையில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### 2.4.7 மாபெரும் தோல் காலணி மற்றும் துணைப்பொருட்கள் தொகுப்பு

சிப்காட் நிறுவனம், இராணிப்பேட்டை மாவட்டம், பனப்பாக்கம் தொழிற் பூங்காவில் 300 ஏக்கர் பரப்பளவில், 275 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் மாபெரும் தோல் காலணி மற்றும் துணைப்பொருட்கள் தொகுப்பினை ஏற்படுத்த உத்தேசித்துள்ளது. இந்த தொகுப்பு, ஒன்றிய அரசின் தொழில் மற்றும் உள்வர்த்தகம் மேம்பாட்டுத் துறையின் (DPIIT) இந்திய காலணி மற்றும் தோல் மேம்பாட்டு துணை திட்டமான மாபெரும் தோல் காலணி மற்றும் துணைப்பொருட்கள் தொகுப்பு மேம்பாடு (MLFACD) வழங்கும் நிதியுதவியுடன் ஏற்படுத்தப்படும். இப்பூங்காவில் அடிப்படை உள்கட்டமைப்பு வசதிகள் மட்டுமின்றி, ஆயத்த தொழிற்கூடங்கள், சேமிப்பு கிடங்குகள், வர்த்தக மையம், பொருள் வடிவமைப்பு மையம், பரிசோதனைக்கூடம் ஆகியவை அமையவுள்ளது. சிப்காட் நிறுவனம் இத்திட்டத்திற்கான கொள்கை அளவிலான ஒப்புதல் கோரும் முன்மொழிவினை செப்டம்பர் 2022ல் ஒன்றிய அரசின் வர்த்தக மற்றும் வளர்ச்சித் (DPIIT) துறைக்கு சமர்ப்பித்துள்ளது.

கூடுதலாக, பனப்பாக்கம் தொழிற் பூங்காவில் காலணி தயாரிப்புத் துறைக்கான சிறப்பு பொருளாதார மண்டலம் (SEZ) ஏற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இந்த சிறப்பு பொருளாதார மண்டல அறிவிப்பிற்காக, விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டு விட்டது.

## 2.5 சிறப்பு முன்னெடுப்புகள்

நிலையான தொழில் வளர்ச்சியினை கருத்தில் கொண்டு தொழில் நிறுவனங்களின் தேவைக்கேற்ப சிப்காட் நிறுவனம் பல்வேறு சிறப்பு திட்டங்கள் வாயிலாக தன்னுடைய சேவையை மேற்கொண்டு வருகிறது.

### 2.5.1 சிப்காட் தொழில் புத்தாக்க மையம்

சிப்காட் தொழில் புத்தாக்க மையங்கள் (SIIC) ஓசூர் மற்றும் திருப்பெரும்புதூர் சிப்காட் தொழிற் பூங்காக்களில் 33.46 கோடி ரூபாய் மதிப்பீட்டில், தமிழ்நாடு மாநில திட்டக் குழுவின் தமிழ்நாடு புத்தாக்க முயற்சிகள் (TANII) திட்டத்தின்கீழ் மானியமாக பெறப்பட்ட 14.20 கோடி ரூபாய் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. இம்மையங்கள், தொழில் புத்தாக்கங்களும், தொழில் நுட்பங்களும் கொண்டு தொழில் முனைவோரின் இயக்கங்களை, உலகளாவிய

தரத்தில் பாதுகாத்து வளர்த்து விரைவாக செயல்பட வழி வகை செய்யும் மையங்களாகக் இருந்து வருகிறது. இம்மையங்கள் உயர் தொழில் நுட்பத் துறைசார் தொழில்களை தமிழ்நாட்டில் மேம்படுத்திட உத்தேசித்துள்ளது. மேலும், உற்பத்தித் திறனை பலப்படுத்தவும், சந்தையில் போட்டியிடும் தன்மையை மேம்படுத்தவும், இது உதவிகரமாக அமையும்.

இந்த மையங்கள் ஒவ்வொன்றும் 23,500 சதுர அடி கொண்ட கட்டிடங்களாக அமைக்கப்பட்டுள்ளன. இம்மையங்களில், புதுமையாளர்கள் / தொழில் தொடங்குபவர்கள் (Start – Ups) கூட்டாகப் பணிபுரியும் இடம் மற்றும் தொழில் 4.0 உபகரணங்கள் தயாரிப்புகள் மேம்பாட்டு மையம், முன்மாதிரி தயாரிப்பு வசதி (proto typing) மற்றும் பயிற்சி நிலையம் போன்ற வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இம்மையங்கள் வாயிலாக 1000–க்கும் மேற்பட்ட புதுமையான சிந்தனைகள், 200–க்கும் மேற்பட்ட முன்மாதிரி தயாரிப்பு மற்றும் 30–க்கும் மேற்பட்ட தொழில் தொடங்குபவர்களை ஊக்குவித்து தொழில் முனைவோர்களாக உருவாக்கிட சிப்காட் நிறுவனம் உத்தேசித்துள்ளது.

இப்புத்தாக்க மையங்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 24.06.2022 அன்று தொடங்கி வைக்கப்பட்டு, செயல்பாட்டில் உள்ளன.

கோயம்புத்தூர் இன்னோவேஷன் மற்றும் பிசினஸ் இன்குபேட்டர் (Coimbatore Innovation and Business Incubator) நிறுவனம் தொழிநுட்ப பங்குதாரராக நியமிக்கப்பட்டு இம்மையங்கள் செயல்பட்டு வருகின்றன. இதுவரை, ஓசூர் புத்தாக்க மையத்தில் 7 தொழில் தொடங்குபவர்களும், திருப்பெரும்புதூர் புத்தாக்க மையத்தில் 3 தொழில் தொடங்குபவர்களும், இம்மையங்களில் உள்ள வசதிகளைப் பயன்படுத்த தொடங்கியுள்ளனர்; மேலும், பல தொழில் தொடங்குபவர்களும் இந்த வசதி மீது ஆர்வம் காட்டி வருகின்றனர்.

### 2.5.2 நான் முதல்வன் திட்ட முன்னெடுப்பு

நான் முதல்வன் திட்ட முன்னெடுப்பின் ஒரு பகுதியாக, ஓசூர் மற்றும் திருப்பெரும்புதூரில் அமைந்துள்ள சிப்காட் தொழில் புத்தாக்க மையங்கள், இளைஞர்கள் 4ஆம் தலைமுறை தொழில் நுட்ப பயிற்சி மற்றும் திறன் மேம்பாடு பெற்று சிறந்த வேலைவாய்ப்பினை பெற்றிட ஒரு தளமாக உள்ளன. மேலும் இம்மையங்கள் இளைஞர்கள் தங்களது எண்ணங்களை வெற்றிகரமான தொழில் திட்டங்களாக மாற்ற உதவுகிறது.

சிப்காட் நிறுவனம், இளைஞர்கள் அவர்கள் பகுதிகளில் அமைந்துள்ள சிப்காட் தொழிற் பூங்காக்களில் உள்ள தொழிற்சாலைகளில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சிக்கான வாய்ப்பு பெற, தமிழ்நாடு திறன் மேம்பாட்டு நிறுவனத்துடன் இணைந்து செயலாற்றி வருகிறது. மேலும், சிப்காட் நிறுவனம், நான் முதல்வன் திட்ட முன்னெடுப்புகள் குறித்து அதன் தொழிற்பூங்காக்களில் அமைந்துள்ள தொழில் நிறுவனங்கள் அனைத்துக்கும் தெரிவித்து, அவர்களின் தொழிற்கூடங்களிலுள்ள காலி பணியிடங்கள் / தொழிற் பயிற்சிக்கான வாய்ப்பு குறித்த தகவல்களை நான் முதல்வன் திட்ட இணைய முகப்பில் பதிவேற்றம் செய்வதன் மூலம் அத்தொழில் நிறுவனங்களும், இளைஞர்களும் பயனடைய வழிவகை செய்துள்ளது. சிப்காட் நிறுவனத்தின் இத்தொடர் முயற்சியால், இளைஞர்கள் வாழ்வு மேம்படுவதோடு, பொருளாதார வளர்ச்சியும் ஏற்படும்.

### 2.5.3 தொழிலாளர் தங்குமிட வசதி

பாதுகாப்பான, தரமான, தங்குமிட வசதிகளை தொழிலாளர்களுக்கு அவர்களது சக்திக்கு உட்பட்டு வழங்குவது தொழில் வளர்ச்சிக்கு முக்கியத்துவம் வாய்ந்தது. மேலும், கொரோனா பெருந்தொற்று இந்த தேவையின் முக்கியத்துவத்தை அதிகரித்துள்ளது.

சிப்காட் நிறுவனம் தமிழ்நாடு உள்கட்டமைப்பு நிதி மேலாண்மை நிறுவனத்துடன் (TNIFMC) இணைந்து தமிழ்நாடு தொழிலாளர் குடியிருப்பு நிறுவனம் என்ற பெயரில் ஒரு சிறப்பு நோக்கு முகமையினை ஏற்படுத்தி, அதன் மூலம் தொழிற்சாலை பணியாளர்களுக்கு நிலையான மற்றும் சக்திக்கு ஏற்ற தங்குமிட வசதிகளை ஏற்படுத்த திட்டமிட்டுள்ளது.

தற்போது, தமிழ்நாடு தொழிலாளர் குடியிருப்பு நிறுவனம், பணிபுரியும் மகளிருக்காக, சிப்காட் சிறுசேரி தொழிற் பூங்காவில் 807 படுக்கைகளுடன் கூடிய ஒரு தங்குமிடத்தை ஏற்படுத்த திட்டமிட்டுள்ளது. மேலும், தொழிலாளர் தங்குமிட வசதி திட்டத்தை மாநிலத்தில் பரவலாக ஏற்படுத்த ஏதுவான இடங்களை, இந்த சிறப்பு நோக்கு முகமை தேர்வு செய்யும்.

மேலும், சிப்காட் நிறுவனம் நேரடியாக வல்லம் – வடகால் தொழிற்பூங்காவில் 670 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் 18,720 படுக்கைகள் கொண்ட தொழிலாளர் தங்குமிட வசதி ஒன்றினை ஒன்றிய அரசின் குறைந்த வாடகை வீட்டு வளாகம் (ARHC) திட்டத்தின்கீழ் வழங்கும் 37.44 கோடி ரூபாய் மானியம் மற்றும் பாரத ஸ்டேட் வங்கியிடமிருந்து பெறப்பட்ட 498 கோடி ரூபாய் காலக்கடன் கொண்டு நிறைவேற்றி வருகிறது.

13 கட்டடங்களுக்கான கட்டுமானப் பணிகளை மேற்கொள்ள 527.56 கோடி ரூபாய்க்கான பணி ஆணை வழங்கப்பட்டு அனைத்து கட்டடங்களுக்கான பணிகளும் நடைபெற்று வருகிறது.

இத்திட்டத்தில் குறிப்பிடத்தக்க பணி முன்னேற்றத்தினை கண்டு, ஒன்றிய அரசின் வீட்டு வசதி மற்றும் நகர்புற அலுவல்கள் அமைச்சகத்தின் குறைந்த வாடகை வீட்டு வளாகங்கள் (ARHC) திட்டம் மாதிரி 2–ன் கீழ் அதிவேகமாக செயல்பட்டமைக்கான விருதினை 19.10.2022 அன்று தமிழ்நாட்டிற்கு வழங்கியுள்ளது.

மேலும், சிப்காட் நிறுவனம், தொழிற்சாலைகளில் பணிபுரியும் பெண் தொழிலாளர்களுக்காக பெருந்துறையில் 6.43 கோடி ரூபாய் திட்ட மதிப்பில் 222 படுக்கை வசதிகளுடனும், தூத்துக்குடியில் 5.88 கோடி ரூபாய் திட்ட மதிப்பில் 252 படுக்கை வசதிகளுடனும் மகளிருக்கான பிரத்யேக தங்குமிட வசதியை அனைத்து அடிப்படை வசதிகளுடன் அமைத்து வருகிறது. இதற்கான கட்டுமானப் பணிகள் இரண்டு தங்குமிட வசதிகளில் நடைபெற்று வருகிறது. இப்பணிகள் நிறைவு பெற்று செப்டம்பர் 2023–ல் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும்.

இதுவரை, சிப்காட் நிறுவனம் (i) இருங்காட்டுக்கோட்டையில் மகளிர் தங்குமிட வசதி (330 நபர்கள்) (ii) திருப்பெரும்புதூரில் ஆடவர் தங்கும் விடுதி (400 நபர்கள்) (iii) திருப்பெரும்புதூரில் மகளிர் தங்கும் விடுதி (600 நபர்கள்) ஆகிய மூன்று விடுதிகளை கட்டி முடித்து, அவை பயன்பாட்டில் உள்ளன.

கூடுதலாக, சிப்காட் நிறுவனத்தின் சமூக பொறுப்பு திட்டத்தின் ஒரு பகுதியாக திருப்பூர் மாவட்டத்தில் நெருப்பெரிச்சல் கிராமத்தில் 8.58 கோடி ரூபாய் மதிப்பில் மகளிர் தங்கும் விடுதியொன்றை (600 நபர்கள்) ஏற்படுத்தியுள்ளது. இத்துடன் இதே இடத்தில் 10.18 கோடி ரூபாய் மதிப்பில் சமூக மற்றும் பொருளாதாரத்தில் பின்தங்கிய பிரிவைச் சேர்ந்தவர்களுக்காக 400 நபர்கள் தங்கும் வசதி கொண்ட விடுதி கட்டப்பட்டுள்ளது. இவ்விடுதியானது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 06.07.2022 அன்று திறந்து வைக்கப்பட்டது.

### 2.5.4 தண்ணீர் பாதுகாப்பு திட்டம்

நீடித்து நிலைத்த தன்மையே, சிப்காட் நிறுவனத்தின் மேம்பாட்டு அணுகுமுறையின் அடிப்படைக் கொள்கைகளில் ஒன்றாக

அமைந்துள்ளது. ஓர் விரிவான தண்ணீர் பாதுகாப்பு திட்டம் நமது நீர் ஆதாரங்களைப் பாதுகாத்து செயல்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இதற்கான விரிவான தண்ணீர் பாதுகாப்புத் திட்டம், கட்டடம் மற்றும் சுற்றுச்சூழலுக்கான மையம் (CUBE) வாயிலாக தயாரிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் ஒரு பகுதியாக தயாரிக்கப்படும் விரிவான திட்ட அறிக்கையில் (DPR) நீர் நிலைகளுக்கு புத்துயிரூட்டல், தொழிற் பூங்காக்களிலும் அதனருகாமையிலும் அமைந்துள்ள நீர் நிலைகளை மீட்டெடுத்தல் மற்றும் மழைநீர் சேமிப்பு ஆகியவை அடங்கும். 19 சிப்காட் தொழிற் பூங்காக்களில் தண்ணீர் பாதுகாப்பிற்கான கருத்துரு திட்டம் தயாரிக்கப்பட்டு அதற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது. இதன் அடிப்படையில் மாநில தொழில் நீர் கொள்கையும் உருவாக்கப்படவுள்ளது.

### 2.5.5 நிலையான நீர் வழங்கு அமைப்புகள் – மூன்றாம் நிலை எதிர்சவ்வூடு முறையில் சுத்திகரிக்கப்பட்ட நீர் வழங்கும் திட்டம் (TTRO Plant)

நீர் நிலைகளைப் பாதுகாப்பதுடன், நிலத்தடி நீர் குறையாமல் இருப்பதை உறுதி செய்ய, சிப்காட் நிறுவனம் மூன்றாம் நிலை எதிர்சவ்வூடு முறையில்

சுத்திகரிக்கப்பட்ட நீரை (**TTRO**) தொழில் நிறுவனங்கள் பயன்படுத்த ஊக்குவித்து வருகிறது. அதன்படி, இருங்காட்டுக்கோட்டை, திருப்பெரும்புத்தூர், ஒரகடம், பிள்ளைப்பாக்கம் மற்றும் வல்லம்–வடகால் தொழிற்பூங்காக்களில் அமைந்துள்ள தொழிற்சாலைகளுக்கு, சென்னை பெருநகர குடிநீர் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியம் கோயம்பேட்டில் அமைந்துள்ள நாளொன்றுக்கு 45 மில்லியன் லிட்டர் கொள்ளளவு கொண்ட ஆலையின் மூலமாக சுத்திகரிக்கப்பட்ட நீர் வழங்கப்படுகிறது.

மேலும், சிப்காட் நிறுவனம், நாளொன்றுக்கு 20 மில்லியன் லிட்டர் கொள்ளளவு கொண்ட மூன்றாம் நிலை எதிர்சவ்வூடு முறையில் சுத்திகரிக்கும் ஆலையை ஒசூரிலுள்ள கௌவரப்பள்ளியில் 182 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைத்து வருகின்றது. இந்த ஆலையின் வாயிலாக ஒசூர் மற்றும் சூளகிரி தொழிற்பூங்காக்களில் அமைந்துள்ள தொழிற்சாலைகளுக்கு தேவையான தண்ணீரை வழங்க இயலும். இதற்காக சிறுதொழில் மேம்பாட்டு வங்கி (SIDBI), 104.99 கோடி ரூபாய் காலக்கடனாக வழங்க ஒப்புதல் தெரிவித்துள்ளது. இத்திட்டத்தினை வடிவமைத்து கட்டுமானப் பணிகளை மேற்கொண்டு 20 ஆண்டுகளுக்கு பராமரிக்க (DBO) ஒப்பந்தப் புள்ளி

கோரப்பட்டு தேர்வுப்பெற்ற ஒப்பந்ததாரருக்கு 20.02.2023 அன்று பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது.

**2.5.6 நிலையான நீர் வழங்கல் அமைப்புகள் – கடல் நீரை நன்னீராக்கும் திட்டம்.**

சிப்காட் நிறுவனம் தூத்துக்குடி மற்றும் சுற்றுப்புறப் பகுதிகளில் அமைந்துள்ள தொழிற்சாலைகளின் நீர் தேவையைக் கருத்தில் கொண்டு 60 மில்லியன் லிட்டர் நாளொன்றுக்கு கொள்திறன் கொண்ட கடல் நீரை நன்னீராக்கும் ஆலையை தூத்துக்குடி முள்ளக்காடு கிராமத்தில் அமைக்க உத்தேசித்துள்ளது. இதற்குண்டான விரிவான திட்ட அறிக்கையைத் தயாரித்து இத்திட்டத்தை 975.47 கோடி ரூபாய் திருத்தப்பட்ட திட்ட மதிப்பில் (Hybrid Annuity Model) HAM முறையில் 40 சதவிகிதம் சிப்காட் பங்களிப்புடனும், 60 சதவிகிதம் ஒப்பந்ததாரர் பங்களிப்புடனும் செயல்படுத்திட முடிவு செய்யப்பட்டுள்ளது.

மேலும், கடலூர் சிப்காட் தொழிற் பூங்காவில் நாளொன்றுக்கு 20 மில்லியன் லிட்டர் கொள்திறன் கொண்ட கடல் நீரை நன்னீராக்கும் ஆலை ஒன்றினை சிப்காட் நிறுவனத்தால் அமைப்பதற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு கடலோர

ஒழுங்குமுறை மண்டல ஒப்புதல் செயல்முறையில் உள்ளது.

### 2.5.7 தொழிற் பூங்காக்களைப் பசுமையாக்குதல்

சுற்றுச்சூழலுக்கு உகந்த வகையில், 5.41 இலட்சம் மரக்கன்றுகள் 24.84 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சிப்காட் தொழிற் பூங்காக்களில் உள்ள திறந்தவெளிப் பகுதிகளில் நடப்பட்டுள்ளன. மரக்கன்றுகள் நடும் பணி படிப்படியாக நிறைவேற்ற திட்டமிடப்பட்டு, முதல் கட்டமாக 18 தொழிற் பூங்காக்களில் 2.65 இலட்சம் மரக்கன்றுகள் நடப்பட்டு, இரண்டாம் கட்டமாக 2.76 இலட்சம் மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன.

மேலும், முன்னோடி திட்டமாக, சிப்காட் நிறுவனம் 50,000 பனங்கன்றுகளை 1.11 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் அமைந்துள்ள ஓசூர், பர்கூர், குருபரப்பள்ளி தொழிற்பூங்காக்களில் நடவு செய்ய திட்டமிட்டுள்ளது. இத்திட்டத்திற்கான மரக்கன்றுகள் கிருஷ்ணகிரி மாவட்ட வனத்துறையால் முன்னதாகவே வளர்க்கப்பட்டு, 7,000 பனங்கன்றுகள் நடப்பட்டுவிட்டன. இந்த முன்னோடி திட்டத்தினை ஜூன் 2023–க்குள் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

### 2.5.8 சரக்கு வாகன நிறுத்தும் வசதிகள்

தொழிற்சாலைகளின் சரக்கு வாகனங்கள் தடையின்றி எளிதாக இயங்கிடவும் அவற்றை பிரேத்யேகமாக நிறுத்தம் செய்திடவும், சிப்காட் நிறுவனம், இருங்காட்டுக்கோட்டை, வல்லம்–வடகால், ஒரகடம், இராணிப்பேட்டை, பெருந்துறை, திருப்பெரும்புதூர், நிலக்கோட்டை, கங்கைக்கொண்டான், பிள்ளைப்பாக்கம், கும்மிடிப்பூண்டி மற்றும் சிறுசேரி ஆகிய தொழிற் பூங்காக்களில் 66.11 கோடி ரூபாய் மொத்த மதிப்பீட்டில், 1,722 சரக்கு வாகனங்கள் நிறுத்துவதற்கான வசதிகளை (Truck Parking Facilities) உருவாக்கியுள்ளது. மேலும், தேர்வாய்கண்டிகை மற்றும் ஓசூர் தொழிற் பூங்காக்களில் இந்த வசதிகள் ஏற்படுத்தப்படவுள்ளன. செய்யாறு சிப்காட் தொழிற் பூங்காவில் சரக்கு வாகன நிறுத்த வசதி உருவாக்க; 2.5 கோடி ரூபாய்க்கு பணி ஆணை வழங்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன.

### 2.5.9 ஏற்றுமதிக்கான வர்த்தக வசதி மையம்

சிப்காட் சிறுசேரி தொழிற் பூங்காவில் 34.81 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 2.16 ஏக்கர் நிலப்பரப்பில் 85,000 சதுர அடி கொண்ட கட்டுமானத்தில்

ஏற்றுமதிக்கான வர்த்தக வசதி மையம் (Export Trade Facilitation Centre) ஒன்று ஒன்றிய அரசின் ஏற்றுமதிக்கான வர்த்தக உள்கட்டமைப்பு திட்டத்தின்கீழ் (TIES) 13.98 கோடி ரூபாய் மானியத்துடன் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 06.07.2022 அன்று இந்த வர்த்தக வசதி மையம் தொடங்கி வைக்கப்பட்டது. இந்த மையமானது, உடன் பணிபுரியும் இடம் (Co–working Spaces), மாநாட்டு அரங்கம் (Convention Centre), ஆலோசனைக் கூடம் (Conference Hall), நிருவாக குழும கூடங்கள் (Executive Board Rooms), பார்வையாளர்கள் மண்டபம் (Auditorium), உணவகம் (Canteen) போன்ற வசதிகளை கொண்டுள்ளது.

### 2.5.10 ஆயத்த தொழிற் கூட வசதிகள்

நவீன உற்பத்தி முறையானது உள்கட்டமைப்புகளுடன் கட்டிடங்களைக் கட்டுவதிலிருந்து புதிதாக ஆயத்த நிலையிலுள்ள தொழிற்கூடங்களை ஏற்படுத்துவதில் கவனத்தை திருப்பியுள்ளது. இத்தொழிற் கூடங்கள் முன்னதாகவே கட்டப்பட்டு அடிப்படை வசதிகளுடன் உடனடியாக இயந்திரங்களை நிறுவி, வணிக உற்பத்தியைத் தொடங்க ஏதுவாக மிக விரைவில் அமைக்கப்படும். வல்லம் வடகால், பெருந்துறை மற்றும் ஓரகடம் ஆகிய

மூன்று சிப்காட் தொழிற்பூங்காக்களில் முறையே 1,50,000 சதுர அடி, 50,000 சதுர அடி மற்றும் 1,00,000 சதுர அடி கொண்ட ஆயத்த தொழிற் கூட வசதிகள் 85.20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் துரித தொழிற் வளர்ச்சியை ஊக்குவிக்கும் வகையில் அமைக்கப்பட்டு வருகிறது. மேற்கண்ட வசதிகள் ஒன்றிய அரசின் வணிகவியல் மற்றும் தொழில் துறையின் ஏற்றுமதிக்கான வர்த்தக உள்கட்டமைப்புத் திட்டத்தின் (TIES) கீழ் அங்கீகரிக்கப்பட்ட நிதியுதவியான 34.45 கோடி ரூபாய் மானியத்துடன் செயல்படுத்தப்படும்.

### 2.5.11 திருப்பெரும்புதூர் சிப்காட் தொழிற்பூங்காவில் வணிக வளாகம் மற்றும் உணவகம்

திருப்பெரும்புதூரில் உள்ள சிப்காட் தொழிற்பூங்காவில் 1.36 ஏக்கர் நிலப்பரப்பில் உத்தேசமாக 7 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இப்பூங்காவில் உள்ள தொழிலாளர்கள் மற்றும் ஊழியர்களின் தேவைகளுக்காக வணிக வளாகம் மற்றும் உணவகம் அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### 2.5.12 சிப்காட் தொழிற்பூங்காக்களுக்கான புவியியல் தகவல் முறைமை வரைபடம் (GIS Mapping) மற்றும் புவியியல் தகவல் முறைமைக்கான தகவலமைப்பினை (Geo Data Base) தயாரித்தல்

சிப்காட் தொழிற் பூங்காக்களில் ஆர்வமுள்ள முதலீட்டாளர்கள் எளிதாக தொழில் மனைகளை தேர்வு செய்திட, பயனீட்டாளர்கள் நட்புடன் கூடிய புவியியல் தகவல் முறைமை(GIS), செயல்பாட்டில் இருந்துவரும் சிப்காட் தொழிற் பூங்காக்கள் தொடர்பான தரவுகளைக்(Database) கொண்டு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இத்தரவு தளம் ட்ரோன் வழி நில அளவை (Drone survey), முப்பரிமாணப்படம் (3D imaging), தொலை உணர்வுத் தளம்(Remote sensing) உள்ளடக்கிய அதிநவீன தொழிநுட்பங்களைக் கொண்டு நிறுவப்பட்டுள்ளது. இத்தரவு (Database) சிப்காட் நில ஒதுக்கீட்டு வலைதளத்துடன் இணைக்கப்பட்டுள்ளதால், முதலீட்டாளர்கள் தொழிற்பூங்காக்களின் தளவமைப்புகள் / இருப்பில் உள்ள மனை விவரம் குறித்த தகவல்களை இடையூறற்ற வகையில் சீராகப் பெறுவதுடன், நில ஒதுக்கீட்டு விண்ணப்பத்தினை எளிதாக சமர்ப்பிக்க இயலும். மேலும் சிப்காட் நிறுவனம் இனி

அமையவுள்ள தொழிற்பூங்காக்களுக்கும் புவியியல் தகவல் முறைமையை ஏற்படுத்தவுள்ளது.

## 2.6 சிப்காட் நிறுவனம் – அரசின் அமைப்பு ரீதியிலான தொகுப்பு ஊக்க நிதியுதவி வழங்குவதற்கான முகவாண்மை நிறுவனம்

பெருந்தொழில், சிறப்புப் பெருந்தொழில் மற்றும் உயர் சிறப்புப் பெருந்தொழில் நிறுவனங்களுக்கு அமைப்பு ரீதியிலான தொகுப்பு ஊக்க நிதியுதவி வழங்கும் திட்டத்தை செயல்படுத்துவதற்கு தமிழ்நாடு அரசு சிப்காட் நிறுவனத்தை முகவாண்மை அமைப்பாக நியமித்துள்ளது. அரசு ஒப்புதல் வழங்கியபடி சிப்காட் நிறுவனம், 31.03.2023 வரை, 45 தொழில் நிறுவனங்களுக்கு பல்வேறு ஊக்க நிதியுதவியாக 16,625.50 கோடி ரூபாய் வழங்கியுள்ளது. நிதியாண்டு 2022–2023ல் 29 தொழில் நிறுவனங்களுக்கு 1192.38 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

| வ. எண். | நிதியுதவியின் வகைப்பாடு | வழங்கிய தொகை (ரூபாய் கோடியில்) | |
|---|---|---|---|
| | | 2008–2009 முதல் 2022–2023 | நிதியாண்டு 2022–2023 |
| 1 | மென்கடன் | 2078.06 | 183.38 |
| 2 | முதலீட்டு மேம்பாட்டு உதவித் தொகை | 14334.90 | 937.87 |
| 3 | மூலதன உதவித் தொகை | 46.33 | 4.03 |

| வ. எண். | நிதியுதவியின் வகைப்பாடு | வழங்கிய தொகை (ரூபாய் கோடியில்) | |
|---|---|---|---|
| | | 2008–2009 முதல் 2022–2023 | நிதியாண்டு 2022–2023 |
| 4 | சுற்றுச்சூழல் பாதுகாப்பு – கழிவுநீர் சுக்திகரிப்பு திட்டத்திற்கான உதவித் தொகை | 7.80 | 3.85 |
| 5 | பயிற்சி உதவித் தொகை | 93.34 | 37.32 |
| 6 | முத்திரைத் தீர்வை திருப்பியளித்தல் | 10.23 | 0.93 |
| 7 | மின் உற்பத்தி வாகன உதவித் தொகை | 50.00 | 25.00 |
| 8 | மின்கட்டண வரி திருப்பியளித்தல் | 2.84 | – |
| 9 | தொழில் கட்டமைப்பு பூங்கா உதவித் தொகை | 2.00 | – |
| மொத்தம் | | 16625.50 | 1192.38 |

## வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டின் ஒதுக்கீடு

| வ. எண். | நிதியுதவியின் வகைப்பாடு | (ரூபாய் கோடியில்) | |
|---|---|---|---|
| | | திருத்த மதிப்பீடு 2022–23 | வரவு செலவுத் திட்ட மதிப்பீடு 2023–24 |
| 1 | மென்கடன் | 250.00 | 300.00 |
| 2 | முதலீட்டு மேம்பாட்டு உதவித் தொகை (முத்திரைத் தீர்வை திருப்பியளித்தல் உட்பட) | 1400.93 | 1500.00 |
| 3 | மூலதன உதவித் தொகை | 5.00 | 5.00 |
| 4 | சுற்றுச்சூழல் பாதுகாப்பு – கழிவுநீர் சுக்திகரிப்பு திட்டத்திற்கான உதவித் தொகை | 5.00 | 5.00 |
| 5 | பயிற்சி உதவித் தொகை | 90.00 | 90.00 |

## 2.7 சிப்காட் நிறுவனத்தின் நிதிச்செயல்பாடு

சிப்காட் நிறுவனம், மிகச்சிறந்த நிதிச் செயல்பாட்டுடன் தமிழ்நாடு அரசுக்கு 2005-2006 முதல் தொடர்ந்து ஈவுத்தொகையை விநியோகித்து வருகிறது. 2021-22 நிதியாண்டில், சிப்காட் நிறுவனம், 1127.55 கோடி ரூபாய்க்கு வணிகம் புரிந்து, 203.99 கோடி ரூபாய் இலாபம் ஈட்டி, தமிழ்நாடு அரசுக்கு ஈவுத்தொகையாக 61.20 கோடி ரூபாயினை (செலுத்தப்பட்ட மூலதனத்தில் 53.60 சதவீதம்) செலுத்தியுள்ளது.




29.12.2022 அன்று திருச்சிராப்பள்ளி மாவட்டத்தின் முதல் சிப்காட் தொழில் பூங்காவான மணப்பாறை நிலை-I சிப்காட் தொழில் பூங்காவினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது

Blank




விருதுநகர் மாவட்டம், இ.குமாரலிங்கபுரத்தில் பிரதம மந்திரியின் முதலாவது மாபெரும் ஒருங்கிணைந்த ஜவுளி பூங்கா மண்டலம் மற்றும் ஆடைப் பூங்கா அமைக்க ஒன்றிய அரசுக்கும் தமிழ்நாடு அரசுக்கும் இடையே 22.03.2023 அன்று புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது

Blank




மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 28.11.2022 அன்று எறையூர்
சிப்காட் தொழில் பூங்கா திறந்து வைக்கப்பட்டது

Blank



சிப்காட் தொழில்பூங்கா, வல்லம் வடகாலில் அமைக்கப்பட்டு வரும் தொழிலாளர்களுக்கான ஒருங்கிணைந்த தங்குமிட வசதியின் வான்வழி காட்சி

Blank



சிப்காட் நிறுவனத்தால் பசுமை பணிகள் மேற்கொள்ளப்பட்டபின்
ராணிப்பேட்டை சிப்காட் தொழிற்பூங்காவின் வான்வழி காட்சி

Blank

## 3. தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம்

தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம், (டிட்கோ) தமிழ் நாட்டில் தொழில் வளர்ச்சியை மேம்படுத்துவதற்காக 1965ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசின் ஒரு முதன்மையான அமைப்பாக, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறையின் கீழ் இயங்கி வருகிறது. தனியார் தொழில் முனைவோருடன் இணைந்து, நடுத்தர மற்றும் பெரிய அளவிலான தொழில்களை மேம்படுத்தவும், கூட்டாண்மை நிறுவனங்கள் வழியாக முதலீட்டை ஈர்த்து, மாநிலத்தை உலகளாவிய தொழில் மையமாக்கும் நோக்கத்துடனும் டிட்கோ நிறுவனம், ஏற்படுத்தப்பட்டது.

தனியார் தொழில் முனைவோர் மற்றும் மாநில/ஒன்றிய அரசு நிறுவனங்களுடன் இணைந்து கூட்டாண்மை நிறுவனங்கள் மூலம் கீழ்க்கண்ட முறைகளில் பெரிய / நடுத்தர தொழில் திட்டங்களை டிட்கோ நிறுவனம் செயல்படுத்தி வருகிறது:–

- துணை நிறுவனம் (டிட்கோவின் பங்கு முதலீடு 50% க்கு மேல்),
- கூட்டு நிறுவனம் (டிட்கோவின் பங்கு முதலீடு 11% யிலிருந்து 50% வரை),

- இணைத்துறை நிறுவனம் (டிட்கோவின் பங்கு முதலீடு 2% யிலிருந்து 11% வரை),
- வழிநடத்தும் நிறுவனம் (டிட்கோவின் பங்கு முதலீடு 1% அல்லது டிட்கோவின் பங்கு முதலீடு இல்லை),

டிட்கோ நிறுவனம், வெற்றிகரமாக 122 கூட்டாண்மை நிறுவனங்களை நிறுவி, உற்பத்தி, உட்கட்டமைப்பு மற்றும் சேவை போன்ற துறைகள் வளர்ச்சி அடைய வழிவகை செய்துள்ளது. மேலும், இந்நிறுவனங்களின் வாயிலாக மாநிலத்தில் பெரும் முதலீடு மற்றும் அதிக வேலை வாய்ப்புகள் உருவாக்கி, தொழில் சூழலமைப்பை மேம்படுத்தியதன் மூலம் மாநில மற்றும் மண்டல தொகுப்புகளில் ஒட்டுமொத்த சமூக பொருளாதார வளர்ச்சிக்கு வழிவகுக்கிறது.

டிட்கோ நிறுவனத்தினால் உருவாக்கப்பட்ட பெருமைமிகு கூட்டாண்மை நிறுவனங்களில், சில பின்வருமாறு :

டைட்டன் நிறுவனம் லிமிடெட் (கடிகாரம் மற்றும் ஆடை அலங்காரப் பொருட்கள்), ஸ்பிக் லிமிடெட் (உரத்தொழிற்சாலை), டான்பேஃக் லிமிடெட் (வேதிபொருட்கள்), தமிழ்நாடு பெட்ரோ ப்ராடக்ட்ஸ் (வேதிப்பொருள்), டான்ஃப்ளோரா இன்ஃப்ராஸ்ட்ரக்சர் பார்க் லிமிடெட் (கொய் மலர்களுக்கான தொழில்

கூடம்), JSW ஸ்டீல்ஸ் லிமிடெட் (ஸ்டீல்) இந்தியன் ஆயில்–எல்என்ஜி பிரைவேட் லிமிடெட் (LNG), தகவல் தொழில்நுட்பம் மற்றும் அதை சார்ந்த சேவை துறை, ஆடை மற்றும் ஊர்தி துறைகளை மேம்படுத்த மகிந்திரா வேர்ல்டு சிட்டி SEZ, அசென்டாஸ் தகவல் தொழில் நுட்ப பூங்கா, டைடல் பார்க் லிமிடெட் ஆகிய நிறுவனங்கள், டைடல் பார்க் கோயம்பத்தூர் லிமிடெட் (தகவல் தொழில்நுட்பம் மற்றும் அதை சேர்ந்த சேவை துறை), டைசல் பயோ பார்க் லிமிடெட் (உயிரி தொழில்நுட்பம்), மெரைன் இன்ஃப்ராஸ்ட்ரக்சர் டெவலபர்ஸ் பிரைவேட் லிமிடெட் (காட்டுப்பள்ளி துறைமுகம்), எல்&டி ஷிப் பில்டிங் லிமிடெட் (கப்பல் கட்டுமானம்), சாலை மேம்பாட்டிற்காக தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனம் மற்றும் தகவல் தொழில்நுட்ப விரைவுச் சாலை நிறுவனம், தமிழ்நாடு வர்த்தக மேம்பாட்டு நிறுவனம் (கண்காட்சி மற்றும் மாநாட்டு மையம்).

தொழில்துறையில் மாறிவரும் சூழலுக்கு ஏற்ப, குறிப்பாக புதிய வளர்ந்து வரும் மற்றும் அறிவு சார்ந்த துறைகளின் விரைவான வளர்ச்சி மற்றும் தேவைகளை கருத்தில் கொண்டு டிட்கோ நிறுவனம் சேவைகளை வழங்கி வருகிறது. அந்த வகையில், டிட்கோ

நிறுவனத்தால் எடுக்கப்பட்ட முக்கிய முன்னெடுப்புகள் மற்றும் திட்டங்களில் சில பின்வருமாறு:

- நிதிநுட்ப நகரத்தை உருவாக்குதல்.
- இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலை நகரங்களில் டைடல் நியோ பூங்காக்களை உருவாக்குதல்.
- சென்னை மற்றும் கோயம்புத்தூர் நகரங்களில் பல்முனைய சரக்கு போக்குவரத்து பூங்காக்களை நிறுவுதல்.
- தொழில்துறை 4.0 திறன்மிகு மையங்கள் (டான்காம், டான்சம், டாம்கோ).
- பல்கலைக்கழக ஆராய்ச்சி பூங்காக்கள் மற்றும் தமிழ்நாடு அறிவுசார் நகரத்தினை உருவாக்குதல்.
- தமிழ்நாட்டில் உருவாகும் வளர் துறை ஊக்க நிதியத்திற்கு நிதி வழங்குதல் (TNESSF).
- தமிழ்நாடு பாதுகாப்புத் தொழில்துறை பெருவழித்தடத் திட்டத்தை செயல்படுத்துவதற்கான முகமை நிறுவனம் (TNDIC).
- பரந்தூர் புதிய விமான நிலையம் போன்ற உத்திசார் திட்டத்தை செயல்படுத்தும் முகமை நிறுவனம்.

- இயற்கை எரிவாயு மற்றும் எண்ணெய் (PNG) குழாய் அமைப்பு மற்றும் நகர எரிவாயு விநியோக (CGD) திட்டங்களை செயல்படுத்தும் முகமை நிறுவனம்.
- சரக்கு போக்குவரத்து சார்ந்த துறைகளை ஒருங்கிணைத்து செயல்படுவதற்கு முகமை நிறுவனம்.
- மேலும், டிட்கோ நிறுவனம் கீழ்கண்ட தொழில் கொள்கைகளை தயாரித்துள்ளது:–
  - தமிழ்நாடு நகர எரிவாயு விநியோக கொள்கை, 2023.
  - தமிழ்நாடு சரக்கு போக்குவரத்துக் கொள்கை மற்றும் ஒருங்கிணைந்த சரக்கு போக்குவரத்துத் திட்டம், 2023.
  - தமிழ்நாடு வானூர்தி மற்றும் பாதுகாப்பு தொழில் கொள்கை, 2022.

## 3.1 தொழில்துறை உட்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டங்கள்

### 3.1.1 நிதிநுட்ப நகரம்

சென்னை மாவட்டம், ஆலந்தூர் வட்டம், நந்தம்பாக்கம் கிராமத்தில் 110 ஏக்கர் நிலப்பரப்பில்

"நிதிநுட்ப நகரம்" ஒன்றை சுமார் ரூ.200 கோடி முதலீட்டில் அமைப்பதற்கு டிட்கோ நிறுவனம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இந்நிதிநுட்ப நகரம், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிதி நிறுவனங்கள் மற்றும் நிதிநுட்ப நிறுவனங்கள் தங்கள் அலுவலகப் பிரிவுகளை அமைப்பதற்கு தேவையான அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய மேம்படுத்தப்பட்ட நிலங்களை வழங்க வழிவகுக்கும். இத்திட்டத்தை செயல்படுத்துவதற்கு, வடிவமைப்பு மற்றும் திட்ட மேலாண்மை ஆலோசகர் நிறுவனம் நியமிக்கப்பட்டுள்ளது. முதற்கட்டமாக, இத்திட்டம் 56.48 ஏக்கர் நிலத்தில் அமைக்கப்படும். முதற்கட்ட பணிகளுக்கு உட்கட்டமைப்பு பணிகளை மேற்கொள்ள ஒப்பந்தபுள்ளிகள் கோரப்பட்டு அதற்கான பணி ஆணை ரூ.82.87 கோடி மதிப்பீட்டில் வழங்கப்பட்டுள்ளது.

இந்நிதிநுட்ப நகரத் திட்டத்தின் ஒரு பகுதியாக, 5 லட்சம் சதுர அடி கட்டடப் பரப்பளவில் சர்வதேச தரத்தில் ஒரு "ஃபின்டெக் டவர்" (Fintech Tower) திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது. நிதி மற்றும் நிதிநுட்ப நிறுவனங்கள் தங்கள் செயல்பாடுகளை தொடங்குவதற்கு ஏதுவாக அலுவலக இடங்கள் இங்கு வழங்கப்படும். இத்திட்டத்திற்கான மதிப்பீடு சுமார்

ரூ.225 கோடி ஆகும். கட்டிட வடிவமைப்பு மற்றும் விரிவான பொறியியல் பணிகளை ஆலோசகர் நிறுவனம் மேற்கொண்டு வருகின்றது.

### 3.1.2 மினி டைடல் பூங்காக்கள்

தமிழ்நாட்டின் தகவல் தொழில்நுட்ப சூழல் அமைப்பினை விரிவுபடுத்தும் வகையில் இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலை நகரங்களில் மினி டைடல் பூங்காக்கள் நிறுவப்பட்டு வருகின்றன. 50,000 சதுர அடி முதல் 1,00,000 சதுர அடி பரப்பளவுள்ளதாக வடிவமைக்கப்பட்டு தற்போது ஏழு மினி டைடல் பூங்காக்கள் மாநிலம் முழுவதும் அமைக்கப்பட்டு வருகின்றன. விழுப்புரம், திருப்பூர் மற்றும் வேலூர் மாவட்டங்களில் இத்திட்டங்களுக்கான கட்டுமான பணிகள் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகின்றன. மேலும் சந்தை தேவை மதிப்பீட்டின் அடிப்படையில் தஞ்சாவூர், தூத்துக்குடி மற்றும் சேலம் மினி டைடல் பூங்காக்கள் அமைப்பதற்கான கருத்துருவாக்கம் மற்றும் வடிவமைப்பு ஆகியவை தயார் செய்யப்பட்டுள்ளன. இதற்கான கட்டட ஒப்பந்ததாரர்களை தேர்ந்தெடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இத்திட்டங்களை செயல்படுத்துவதற்கான பணிகள்

விரைவில் தொடங்கப்பட உள்ளன. உதகமண்டலம் மினி டைடல் பூங்காவின் வடிவமைப்பில் புதுமையான அம்சங்கள் இடம் பெறுவதால் அது மிகவும் விரும்பத்தக்க தகவல் தொழில்நுட்ப பணியிடமாக விரைவில் உருவெடுக்கும்.

### 3.1.3 டைடல் பூங்கா, பட்டாபிராம்

சென்னை மாநகருக்கு அருகில் அமைந்துள்ள, ஆவடி தாலுகா பட்டாபிராமில் 11.41 ஏக்கர் நிலப்பரப்பில் தகவல் தொழில்நுட்ப பூங்காவை, டைடல் பார்க் நிறுவனம் நிறுவி வருகிறது. இத்திட்டத்தின் முதல் கட்டமாக 5.57 லட்சம் சதுர அடியில் தரைதளம் மற்றும் 21 அடுக்கு மாடிகள் கொண்ட கட்டடம் உருவாக்கப்பட்டு வருகிறது. இணைந்து பணியாற்றக்கூடிய இடவசதி (Co–working space), வணிக மையங்கள், மாடித் தோட்டம் போன்ற நவீன வசதிகளைக் கொண்டதாக இக்கட்டடம் உருவாக்கப்படுகிறது. தற்பொழுது, கட்டுமானப் பணிகள் மற்றும் குளிரூட்டு வசதி, தீ பாதுகாப்பு, ஒருங்கிணைந்த கட்டிட மேலாண்மை அமைப்பு, மின் தூக்கி முதலான வசதிகளை நிறுவும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இத்திட்டத்தின் மூலம் முதலீடுகளை ஈர்த்து, தகவல் தொழில்நுட்பத் துறையில்

ஆர்வமுள்ள இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புக்களை வழங்குவதோடு, இப்பகுதியில் விரைவான பொருளாதர வளர்ச்சி ஏற்படும்.

### 3.1.4 டைடல் பூங்கா, மதுரை

தமிழ் நாட்டின் மூன்றாவது பெரிய நகரமான மதுரை நகரம், சிறந்த மனிதவளம் பெற்ற மற்றும் தகவல் தொழில்நுட்ப வளர்ச்சிக்கான நல்ல சாத்தியகூறுகளைக் கொண்டதாகும். தகவல் தொழில்நுட்பம் மற்றும் நிதிநுட்ப நிறுவனங்களுக்கு தரமான உள்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதற்காக மதுரையில் இரண்டு கட்டங்களாக டைடல் பூங்கா அமைக்கப்படும் என மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார். இந்த பெருமிதம் கொள்ளதக்க திட்டத்தின் முதல் கட்ட பணிக்காக மதுரை மாட்டுத்தாவணி பகுதியில் 5.60 ஏக்கர் நிலம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. கோவில் நகரமான மதுரையில் இந்த சிறப்புமிகு திட்டம் மூலமாக அதிநவீன தகவல் தொழில்நுட்ப பயன்பாட்டு அலுவலகங்கள் அமைக்கப்படும். ஓய்விடம், உணவரங்கம், மாடித் தோட்டம், குழந்தைகள் பாதுகாப்பு மையம் மற்றும் இதர நவீன வசதிகளையும் கொண்டிருக்கும். இத்திட்டத்தின் வடிவமைப்பு மற்றும் திட்ட மேலாண்மை ஆலோசகர் நியமனம்

செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. வடிவமைப்பு மற்றும் மதிப்பீடு தயார் செய்யப்பட்டவுடன் கட்டட பணி மேற்கொள்ள ஒப்பந்ததாரர் நியமனம் செய்வதற்கான ஒப்பந்தப்புள்ளி கோரப்படும்.

### 3.1.5 தயார் நிலை (Plug and Play) உற்பத்தி கூடங்கள் – வல்லம் வடகால்

ஸ்ரீபெரும்புதூர் தொழில் வழிதடத்தில், பல்வேறு பெரு நிறுவனங்கள் தொழிற்சாலைகளை அமைத்து செயல்படுத்தி வருவதால் இது மிகவும் வேகமாக வளர்ந்து வரும் ஒரு முக்கிய தொழில் மண்டலமாக திகழ்கிறது. இத்தொழில் மண்டலத்தில் புதிய நிறுவனங்கள், குறிப்பாக சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் (MSME) கட்டமைப்பு மற்றும் மூலதனச் செலவை குறைத்து, உற்பத்தி நடவடிக்கைளை தொடங்க வாய்ப்பளிக்கும் விதமாக, வல்லம்-வடகால் பகுதியில் உள்கட்டமைப்புகளுடன் கூடிய 'பிளக்–அண்ட்–பிளே' (Plug & Play) திட்டத்தை டைடல் பார்க் நிறுவனம் மேற்கொண்டு வருகிறது. இத்திட்டம் மூலமாக 11.74 ஏக்கர் நிலத்தில், 2.55 லட்சம் சதுர அடியில் உடனடியாக பணிகளை துவங்கும் விதமாக உற்பத்தி கூடங்களை ஏற்படுத்தி குத்தகைக்கு விடப்படும். இதற்கான திட்ட மேலாண்மை ஆலோசகர் நியமிக்கப்பட்டு, வடிவமைப்பு

பணிகள் நடைபெற்று வருகின்றன. உள்கட்டமைப்பு மேம்பாடு மற்றும் கட்டுமானப் பணிகள் விரைவில் தொடங்கப்படும்.

### 3.1.6 டைடல் பூங்கா, கோயம்புத்தூர்

கோயம்பத்தூர் டைடல் தகவல் தொழில்நுட்ப பூங்கா நிறுவனம், கோயம்பத்தூரில் எல்காட் நிறுவனத்தால் நிறுவப்பட்ட சிறப்பு பொருளாதார மண்டலத்தில் 9.5 ஏக்கர் நிலப்பரப்பில் நிறுவப்பட்டுள்ளது. 17 இலட்ச சதுர அடி தளப்பரப்பில், 9.14 இலட்ச சதுர அடி குத்தகை இடம் கொண்டுள்ள இப்பூங்கா, 02.08.2010 அன்று தொடங்கப்பட்டது. இப்பூங்காவில் அனைத்து வசதிகளை உள்ளடக்கிய 952 இருக்கைகளுடன் கூடிய, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் முனைவோர் மற்றும் புத்தாக்க நிறுவனங்கள் பயன்பெறும் வகையில் தயார் நிலை பணியிடங்கள் நிறுவப்பட்டுள்ளன. கொரோனா காலத்திற்கு பிறகு, தகவல் தொழில்நுட்ப மற்றும் அதனை சார்ந்த சேவைகள் துறை முன்னேற்றம் கண்டுள்ளன. கடந்த ஆண்டில், பல்வேறு பெருநிறுவனங்களான Accenture Solutions, IBM India, LTIMindtree, Cameron, Corrohealth, Value Momemtum மற்றும் Omega Healthcare ஆகியவை தங்களது அலுவலகத்தை இப்பூங்காவில் அமைத்துள்ளன.

தற்போது இத்தொழில்நுட்ப பூங்கா 13,000 பணியாளர்களுடன் முழுமையான பயன்பாட்டில் உள்ளது. 2021–2022ஆம் ஆண்டில் கோயம்பத்தூர் டைடல் பூங்காவிலிருந்து ரூ.1,340 கோடி ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. கொரோனா காலத்திற்கு பிறகு, தகவல் தொழில்நுட்ப மற்றும் அதனை சார்ந்த பணிகளுக்கான இடத் தேவையினை கருத்திற்கொண்டு கோயம்பத்தூர் டைடல் பார்க் அதன் விரிவாக்கத்திற்கென, தொழில்நுட்ப மற்றும் பொருளாதார சாத்தியக்கூறு ஆய்வினை (TEFS) மேற்கொண்டுள்ளது.

### 3.1.7 வானூர்தி மையம் (Aero Hub)

வான்வெளி மற்றும் பாதுகாப்பு தொழில்களுக்கு தேவையான பொதுவான வசதிகளை வழங்கும் பொருட்டு, டிட்கோ நிறுவனம், டைசல் பூங்கா நிறுவனத்துடன் இணைந்து உருவாக்கப்பட்ட சிறப்பு நோக்க நிறுவமான "சென்னை ஏரோஸ்பேஸ் பார்க் லிமிடெட்" மூலம் வானூர்தி மையம் அமைக்கும் திட்டத்தை மேற்கொண்டு வருகிறது. இத்திட்டம், சுமார் ரூ.230 கோடி மதிப்பீட்டில், 10.73 ஏக்கர் நிலப்பரப்பில் 3.04 இலட்சம் சதுர அடி கட்டட பரப்பளவில், அமைப்பதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு

வருகிறது. இவ்வானூர்தி மையத்தின் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

### 3.1.8 கனரக பொறியியல் மையம்

திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டத்தில் உள்ள காட்டூர் மற்றும் எப்ரஹாம்புரம் கிராமங்களில் சுமார் 655 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.700 கோடி மதிப்பீட்டில் கனரக பொறியியல் மையம் ஒன்றை டிட்கோ நிறுவனம் உருவாக்க உள்ளது. இந்த இடத்திற்கு மாநில நெடுஞ்சாலை மற்றும் உத்தேசிக்கப்பட்டுள்ள வடக்கு துறைமுக அணுகு சாலை வழியாக எண்ணூர் / காட்டுப்பள்ளி துறைமுகங்களுடன் சாலை இணைப்பு உள்ளது.

கப்பல் கட்டும் தொழிலுக்கான ஆதரவு அலகுகள், மின்சாரம் மற்றும் வாகன உப பொருட்கள் மற்றும் பிற பொறியியல் தொழில் சார்ந்த துறைகளுக்கான ஒரு "சிறப்பு முதலீட்டுப் பகுதியாக" இம்மையம் இருக்கும். மேலும், இம்மையம், பத்து வருட கால அளவில் சுமார் ரூ.3,000 கோடி முதலீடுகளை ஈர்க்கும் எனவும், 48,000 நபர்களுக்கு நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்பினை ஏற்படுத்தும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

### 3.1.9 பல்முனைய சரக்கு போக்குவரத்து பூங்கா – சென்னை

தேசிய நெடுஞ்சாலை சரக்கு போக்குவரத்து மேலாண்மை நிறுவனம் (NHLML), சென்னை துறைமுக பொறுப்பு கழகம் (ChPA), இரயில் விகாஸ் நிகாம் லிமிடெட் (RVNL) மற்றும் டிட்கோ நிறுவனம் இணைந்து ஒரு "சிறப்பு நோக்க நிறுவனம் (SPV)" மூலம், சென்னை அருகே திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள மப்பேடு கிராமத்தில் சுமார் 182 ஏக்கர் நிலப் பரப்பில், ரூபாய் 1423 கோடி திட்ட மதிப்பீட்டில், "பல்முனைய சரக்கு போக்குவரத்து பூங்காவை" அமைத்து வருகிறது. சென்னை, காமராஜர் மற்றும் காட்டுப்பள்ளி ஆகிய துறைமுகங்களை பயன்படுத்தும் உற்பத்தியாளர்கள் மற்றும் வர்த்தகர்களுக்கு சாலை மற்றும் இரயில் இணைப்புடன் கூடிய ஒரு தடையற்ற சரக்கு போக்குவரத்து ஏற்பட வழிவகுக்கும்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் 12.10.2021 அன்று, தேசிய நெடுஞ்சாலை சரக்கு போக்குவரத்து மேலாண்மை நிறுவனம், சென்னை துறைமுக பொறுப்பு கழகம் மற்றும் டிட்கோ ஆகியவை இடையே ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. மேலும், 26.05.2022 அன்று, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்

முன்னிலையில், மாண்புமிகு பாரத பிரதமர் அவர்களால் இத்திட்டத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டது. இத்திட்டத்தினை செயல்படுத்த ஒரு தனியார் நிறுவனம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

இத்திட்டம் மூன்று நிலைகளில் செயல்படுத்தப்படும். முதல் நிலை 2024–ஆம் ஆண்டும், இரண்டாம் நிலை 2032–லும், மூன்றாம் நிலை 2037–லும் முடிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### 3.1.10 பல்முனைய சரக்கு போக்குவரத்து பூங்கா – கோயம்புத்தூர்

கோயம்புத்தூர் மாவட்டத்தில் குறு, சிறு, நடுத்தர மற்றும் பெரிய அளவிலான தொழில்கள் அதிக அளவில் இருக்கின்றன. தற்போது செயல்பாட்டிலுள்ள மற்றும் புதிதாக வரவிருக்கும் தொழிற்சாலைகளுக்கு, ஏதுவாக இரயில், சாலை மற்றும் வான்வழி சரக்கு பரிமாற்றத்தை எளிதாக்க தளவாட உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவது மிக அவசியமான ஒன்றாகும். வளர்ந்து வரும் தொழிற் தேவைகளைக் கருத்தில் கொண்டு, சரக்கு மற்றும் கிடங்கு கட்டணங்களை குறைப்பதற்கும், மாசற்ற மற்றும் நெரிசல் இல்லாத மாவட்டமாக மாற்றுவதற்கும்

கோயம்புத்தூரில் ஒரு பல்முனைய சரக்கு போக்குவரத்து பூங்கா அமைக்கப்பட உள்ளது.

தேசிய நெடுஞ்சாலை சரக்கு போக்குவரத்து மேலாண்மை நிறுவனம் (NHLML), இரயில் விகாஸ் நிகாம் லிமிடெட் (RVNL), வ.உ. சிதம்பரனார் துறைமுகம் (VOC Port), தூத்துக்குடி மற்றும் டிட்கோ நிறுவனம் இணைந்து இத்திட்டத்தை சிறப்பு நோக்க நிறுவனம் (SPV) மூலம் இத்திட்டம் உருவாக்கபப்ட உள்ளது.

இத்திட்டத்திற்காக NHLML நிறுவனமானது, கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள காரவள்ளி – மாதப்பூர் கிராமத்தில் சுமார் 220 ஏக்கர் நிலத்தினை அடையாளம் கண்டுள்ளது.

### 3.1.11 பாலிமர் தொழிற் பூங்கா

டிட்கோ மற்றும் சிப்காட் இணைந்து, தமிழ்நாடு பாலிமர் இண்டஸ்ட்ரீஸ் பார்க் லிமிடெட் (TPIPL), என்ற ஒரு சிறப்பு நோக்க நிறுவனம் (SPV) மூலம், திருவள்ளூர் மாவட்டத்தில், புழுதிவாக்கம் மற்றும் வாயலூர் கிராமங்களில், சுமார் 240 ஏக்கர் பரப்பளவில், **ரூ.216 கோடி** முதலீட்டில் ஒரு பாலிமர் தொழிற் பூங்காவினை அமைத்து வருகிறது. இத்திட்டம் இரண்டு கட்டங்களாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன், முதற்கட்டமாக 180.91 ஏக்கர் பரப்பளவில்

தற்போது பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அடிப்படை உட்கட்டமைப்பு பணிகள், நிர்வாகக் கட்டடம், தொழில்நுட்ப மையம், பயிற்சி மையம் மற்றும் நிர்வாகப் பணிக்களுக்கான கட்டடம் ஆகியவை கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்திற்கு, மத்திய அரசின் இரசாயன மற்றும் பெட்ரோலிய இரசாயனத்துறையானது நெகிழி பூங்கா திட்டத்தின் கீழ் ஒப்புதல் மற்றும் மானியம் வழங்கியுள்ளது. இத்தொழில் பூங்காவில் பாலிமர் பொருட்கள் தயாரிக்கும் சிறிய மற்றும் நடுத்தர தொழிற்பிரிவுகள் அமைக்க ஏதுவான உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

### 3.1.12 சென்னை வர்த்தக மையம் விரிவாக்கத் திட்டம்

சென்னை வர்த்தக மையமானது, டிட்கோ (TIDCO) மற்றும் இந்திய வர்த்தக மேம்பாட்டு நிறுவனங்களின் (ITPO) கூட்டாண்மை நிறுவனமாக தமிழ்நாடு வர்த்தக மேம்பாட்டு நிறுவனத்தால் (TNTPO) உருவாக்கப்பட்டது. சுமார் 10,560 சதுர மீட்டருக்கு கண்காட்சிக்கான இடவசதி மற்றும் 2000 நபர்கள் அமரக்கூடிய மாநாட்டு மையம் ஆகியவற்றை இவ்வர்த்தக மையம் உள்ளடக்கியுள்ளது. தேசிய மற்றும் சர்வதேச நிகழ்வுகளை நடத்த தேவையான

குறைந்தபட்ச இடவசதியான 20,000 சதுர மீட்டர் என்ற இலக்க பூர்த்தி செய்யும் பொருட்டு மொத்தம் 83,744 சதுர மீட்டர் கட்டட பரப்பில் சென்னை வர்த்தக மையம் விரிவுபடுத்தப்படுகிறது. இந்த விரிவாக்கத் திட்டத்தில் 20,809 சதுர மீட்டர் கண்காட்சி அமைக்க இடவசதி, 4,000 இருக்கைகள் கொண்ட மாநாட்டு மையம், பல அடுக்கு வாகன நிறுத்துமிடம், மற்றும் உலகத்தரம் வாய்ந்த இதர வசதிகளையும் உள்ளடக்கி, சுமார் ரூ.308.75 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**3.1.13 தரமணியில் தகவல் தொழில்நுட்ப பூங்கா**

டிட்கோவுடன் DLF நிறுவனம் இணைந்து, "டிஎல்எஃப் இன்ஃபோ பார்க் டெவலப்பர்ஸ் சென்னை லிமிடெட்" என்ற கூட்டாண்மை நிறுவனம் மூலம் சென்னை தரமணியில் சுமார் 27.05 ஏக்கர் நிலப்பரப்பளவில், 6.8 மில்லியன் சதுர அடி கட்டுமான பரப்பளவில், தகவல் தொழில் நுட்ப பூங்கா ஒன்றினை சுமார் ரூ.5,000 கோடி மதிப்பீட்டில் உருவாக்கி வருகிறது. இத்திட்டம் பல்வேறு நிலைகளில் செயல்படுத்தப்படுகிறது. நிலை I ஆனது, சுமார் 2.50 மில்லியன் சதுர அடி பரப்பளவில் ரூ.1,200 கோடி திட்ட மதிப்பீட்டில் உருவாகி வருகிறது. நிலை – I ல் 100 சதவீத கட்டட வேலைகளும், 76 சதவீதம் பூச்சு

வேலைகளும், இயந்திரவியல் மற்றும் மின்னியல் தொடர்பான வேலைகள் 69 சதவீதமும் முடிவடைந்துள்ளன.

மேலும், கூட்டாண்மை நிறுவனம் நிலை II–ல் "ஸ்டான்டர்டு சார்ட்டர்டு குளோபல் பிசினஸ் சர்வீசஸ் (SCGBS)" என்ற நிறுவனத்துக்கு ரூ.650 கோடி மதிப்பீட்டில் சுமார் 7.7 இலட்சம் சதுர அடி பரப்பளவில் ஒரு பிரத்தியேக கட்டடத்தை கட்டி வருகிறது. இத்திட்டத்திற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 14.03.2022 அன்று அடிக்கல் நாட்டினார்கள். 100 சதவீத அடித்தள (Pilling Work) பணிகள் முடிவடைந்து, 24 சதவீதம் கட்டட பணிகளும் நிலை – II ல் முடிவடைந்துள்ளன.

இத்திட்டத்தின் மூலம் 70,000–க்கும் அதிகமான "தகவல் தொழில்நுட்ப வல்லுநர்கள்" வேலைவாய்ப்பை பெறுவர்.

### 3.1.14 கிருஷ்ணகிரி மாவட்டத்தில் டாடா எலக்ட்ரானிக்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனம்

டாடா எலக்ட்ரானிக்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனம் (TEPL) சுமார் 575 ஏக்கர் நிலப்பரப்பில் "கைபேசி உதிரிபாகங்கள்" உற்பத்தி செய்வதற்கான

உட்கட்டமைப்பு வசதிகளை சுமார் ரூ.5,000 கோடி திட்ட மதிப்பீட்டில் அமைத்து வருகிறது. TEPL ஏற்கனவே ரூ.4,000 கோடிக்கும் அதிகமான முதலீட்டினை ஈர்த்துள்ளது. மேலும், இத்திட்டத்தில் உறுதியளித்தபடி 15,000 நபர்களில் சுமார் 13,000 நபர்களுக்கு வேலை வாய்ப்பினை வழங்கியுள்ளது. டிட்கோ நிறுவனம், இத்திட்டத்திற்கான நில மாறுதல் செய்வதற்கும் உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவதற்கும் வசதி செய்து வருகிறது.

மேலும், TEPL நிறுவனம், கிருஷ்ணகிரி மாவட்டம், தேன்கனிக்கோட்டை வட்டம், நாகமங்கலம் கிராமத்தில், சுமார் 64 ஏக்கர் நிலப்பரப்பில் TEPL பணியாளர்கள் தங்குவதற்காக தொழிலக வீட்டு வசதி திட்டத்தின் கீழ் "விடியல் ரெசிடென்சி பிரைவேட் லிமிடெட்" என்ற கூட்டு நிறுவனத்தின் மூலம் தேவையான உட்கட்டமைப்பினை ஏற்படுத்தி வருகிறது. இந்த கூட்டு நிறுவனத்தில் TEPL, TNSF மற்றும் டிட்கோ ஆகியோர் பங்குதாரர்கள் ஆவர். இத்திட்டத்திற்கு தேவையான கடன் வசதிகளை (Term Loan) TNSF நிறுவனம் வழங்கியுள்ளது. 6,300 பணியாளர்கள் தங்குவதற்கு ஏதுவாக, திட்டத்தின் முதற்கட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

### 3.1.15 தமிழ்நாட்டில் பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு குழாய் அமைப்பு திட்டங்கள்

சுற்றுச்சூழலுக்கு உகந்த முறையில், பாதுகாப்பாக, திறன் வாய்ந்த முறையில் பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயுவை, குறைந்த செலவில், தடையின்றி, தொழிற்சாலைகள், போக்குவரத்து மற்றும் வீடுகளுக்கு வழங்குவதை உறுதி செய்வதற்காக, பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு குழாய் அமைக்கும் திட்டங்கள் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இந்த குழாய் அமைக்கும் திட்டங்கள், தமிழ்நாட்டில் உள்ள நகர எரிவாயு விநியோக திட்டங்களுக்கு இயற்கை எரிவாயு வழங்குவதற்கு மூல காரணியாக இருக்கும். மேற்படி குழாய் அமைக்கும் திட்டங்கள் இரண்டு முதல் மூன்று ஆண்டுகளுக்கு சுமார் ரூ.14,200 கோடி முதலீட்டை ஈர்க்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. தமிழ்நாட்டில் தற்போது பெட்ரோலியம் எண்ணெய் நிறுவனங்கள் ஐந்து பெரிய பெட்ரோலியம் மற்றும் எரிவாயு குழாய் பதிக்கும் திட்டங்களை செயல்படுத்தி வருகின்றன. தமிழ்நாடு அரசின் ஆலோசனைகளின் படி, அனைத்து நிறுவனங்களும், தங்களது குழாய் பதிக்கும் திட்டங்களை, பெரும்பாலும் சாலை ஓரமாக அமைத்து வருகின்றன.

இயற்கை எரிவாயு குழாய் அமைப்பு திட்டத்தை இந்தியன் ஆயில் நிறுவனம் (IOCL) 1224 கி.மீ. நீளத்திற்கும், GAIL நிறுவனம் 319 கி.மீ. நீளத்திற்கும் மற்றும் பெட்ரோலிய பொருள்களுக்கான குழாய் அமைப்பு திட்டத்தை HPCL நிறுவனம் 82 கி.மீ. நீளத்திற்கும், BPCL நிறுவனம் 320 கி.மீ. நீளத்திற்கும், KSPPL நிறுவனம் 210 கி.மீ. நீளத்திற்கும், சுமூகமான முறையில் செயல்படுத்துவதை உறுதி செய்வதற்காக தமிழ்நாடு அரசு, டிட்கோ நிறுவனத்தினை முகமை நிறுவனமாக நியமனம் செய்துள்ளது.

இன்று வரை, இந்தியன் ஆயில் நிறுவனம் இயற்கை எரிவாயு குழாய் அமைப்பு திட்டத்தை 99 சதவீதம் முடித்துள்ளது. அதில் இரண்டு பாகங்கள், எண்ணூர் முதல் செங்கல்பட்டு வரை (115 கி.மீ நீளம்) மற்றும் திருவள்ளூரிலிருந்து பெங்களூர் வரை (270 கி.மீ நீளம்) குழாய் பதிக்கும் திட்டத்தை 26.05.2022 அன்று நாட்டிற்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள பணிகள் 2024ஆம் ஆண்டிற்குள் முடிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. HPCL நிறுவனம் அதன் பெட்ரோலிய பொருள்களுக்கான குழாய் அமைப்பு திட்டத்தை முடித்ததுடன், விரைவில் செயற்படுத்த திட்டமிட்டுள்ளது. GAIL நிறுவனம் அதன் இயற்கை எரிவாயு குழாய் அமைப்பு திட்டத்தை

சாலைகளின் வழியாக எடுத்து செல்வதன் மூலம் தனியார் நிலங்களை கையகப்படுத்துவதை வெகுவாக குறைத்துள்ளது. இந்நிறுவனம் இத்திட்டத்தை மூன்று பாகங்களாக, பாகம் 1–அத்திப்பள்ளி – கிருஷ்ணகிரி வரைக்கும், பாகம் 2– கிருஷ்ணகிரி – சேலம் வரை, பாகம் 3 – சேலம் – கோயம்புத்தூர் வரை திட்டமிட்டு செயற்படுத்திவருகிறது. பாகம் 1–ல் இதுவரை 83 சதவீதம் குழாய் பதிக்கும் பணிகள் முடிவடைந்துள்ளது, பாகம் 2–ல் குழாய் பணி அமைப்பதற்கான ஒப்பந்ததாரர்களை 16.03.2023 ல் முடிவு செய்து பணிகள் தொடங்க உள்ளன. BPCL நிறுவனம் அத்திப்பள்ளியிலிருந்து கோயம்பத்தூர் வரை குழாய் பதிக்கும் பணிக்காக குழாய் பாதை சீரமைப்பு பணிகளை முடிவு செய்ததுடன் பணியினை செயற்படுத்துவதற்கு தேவையான ஒப்பந்ததாரர்களை முடிவு செய்து வருகிறது. KSPPL நிறுவனம், வாளையார் முதல் கோயம்பத்தூர் வரை குழாய் பதிக்கும் பணியினை செய்வதற்கு குழாய் பாதை சீரமைப்பு பணிகளை முடிவு செய்ததுடன் கோயம்பத்தூரிலிருந்து சேலம் வரை குழாய் சீரமைப்பு பணிகளை மேற்கொண்டு வருகின்றது.

### 3.1.16 தமிழ் நாட்டில் நகர எரிவாயு விநியோகத் திட்டம், 2023

இயற்கை எரிவாயு என்பது, பசுமையான, பாதுகாப்பான மற்றும் சுத்தமான ஒரு எரிபொருள். தமிழ்நாட்டில் உள்ள 38 மாவட்டங்களிலும், தொழிற்சாலைகள், போக்குவரத்து மற்றும் வீடுகளில், இயற்கை எரிவாயு பயன்பாட்டை ஊக்குவிப்பதற்காக, டோரண்ட் கேஸ் (Torrent Gas), ஏஜி&பி (AG&P), ஐஓசிஎல்(IOCL), அதானி டோட்டல் கேஸ் (Adani Total Gas), மெகா இன்ஜினியரிங் (Mega Engineering), ஐஆர்எம் எனர்ஜி (IRM Energy) மற்றும் பிபிசிஎல் (BPCL) ஆகிய ஏழு நிறுவனங்களுக்கு, ஒன்றிய அரசானது எரிவாயுவை குழாய் மூலம் விநியோகம் செய்வதற்கான உட்கட்டமைப்பு அமைக்கும் திட்டத்தை செயல்படுத்துவதற்கான அனுமதி வழங்கியுள்ளது.

இத்திட்டத்தின் மூலம் 2,785 விற்பனை நிலையங்களில் அழுத்தப்பட்ட இயற்கை எரிவாயு (Compressed Natural Gas), சுமார் 2.30 கோடி வீடுகளுக்கு குழாயின் மூலம் இயற்கை எரிவாயு (Piped Natural Gas) ஆகியவற்றை விநியோகிக்க திட்டமிடப்பட்டுள்ளது. சுமார் ரூ.35,000 கோடி திட்ட மதிப்பீட்டில், 8 ஆண்டுகளில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், 27.07.2021 அன்று 25 அழுத்தப்பட்ட இயற்கை எரிவாயு நிலையங்களையும், வள்ளூர், சென்னையில் ஒரு நகர எரிவாயு சேகரிக்கும் நிலையத்தினையும், 10.10.2022 அன்று ராணிப்பேட்டை மாவட்டத்தில் ஒரு திரவ எரிவாயு சேகரிக்கும் நிலையத்தினையும் தொடங்கி வைத்தார்கள்.

இதுவரை, தமிழ் நாட்டில் 181 அழுத்தப்பட்ட இயற்கை எரிவாயு விற்பனை நிலையங்கள் உபயோகத்தில் உள்ளன. மேலும், 20,940 வீடுகளுக்கு எரிவாயு விநியோகம் செய்ய குழாய் பதிக்கும் பணிகள் முடிவடைந்து, 256 வீடுகளுக்கு குழாயின் மூலம் இயற்கை எரிவாயு வழங்கப்பட்டு வருகிறது.

### 3.1.17 டைசல் பயோ பார்க் லிமிடெட்

உயிரி தொழில் நுட்பம் மற்றும் மருந்தியல் நிறுவனங்களுக்கு ஒரு உட்கட்டமைப்பு வசதியை வழங்குவதற்காக, டிட்கோ, டைடல் பார்க் நிறுவனத்துடன் இணைந்து டைசல் உயிரி தொழில்நுட்ப பூங்காவை உருவாக்கியுள்ளது. டைசல் உயிரி தொழில்நுட்ப பூங்கா பகுதி – I மற்றும் பகுதி – II சென்னை தரமணியில் 5 ஏக்கர் நிலப்பரப்பில் முழுவதுமாக செயல்பட்டு வருகிறது. அதனைத்

தொடர்ந்து, மேற்கு தமிழ்நாட்டில் உயிரி தொழில்நுட்ப நிறுவனங்களின் வளர்ச்சியை ஊக்குவிக்கும் நோக்கத்துடன், டைசல் நிறுவனம், கோயம்புத்தூரில் 10 ஏக்கர் நிலப்பரப்பில், ரூ.85 கோடி திட்ட மதிப்பீட்டில், 2.29 லட்சம் சதுர அடி பரப்பளவில் டைசல் உயிரி தொழில்நுட்ப பூங்கா பகுதி – III ஐ உருவாக்கி தற்போது செயல்படுத்தி வருகிறது.

ஒன்றிய அரசின் உயிரி தொழில் நுட்ப துறையும், டிட்கோவும் இணைந்து உயிரி தொழில்நுட்ப முதன்மை கருவிகள் வசதி மையத்தை (Biotechnology Core Instrumentation Facility (BTCIF) டைசல் உயிரி தொழில்நுட்ப பூங்கா பகுதி – II ல் ரூ.19.30 கோடி மதிப்பீட்டில் அமைத்துள்ளது. இந்த ஆய்வு கூடமானது, புதிய தொழில் முனைவோருக்கும், ஆராய்ச்சி நிறுவனங்களுக்கும், உயர்தர ஆய்வு கருவிகள் மற்றும் சோதனை கருவிகளைக் கொண்டு அறிவியல் வளர்ச்சிக்கும் துணைபுரிகிறது.

## 3.2 கொள்கைகள்

ஒரு டிரில்லியன் டாலர் பொருளதாரத்தை 2030க்குள் அடைவதற்கு தொழில் மற்றும் முதலீடு வர்த்தக துறை பல்வேறு கொள்கைகளை உருவாக்கியிருக்கின்றது. இந்த இலக்கை

அடைவதற்கான நடவடிக்ககளை முன்னெடுத்து செல்லும் வகையில், டிட்கோ மூன்று கொள்கைகளை உருவாக்கி இருக்கிறது.

### 3.2.1 தமிழ்நாடு நகர எரிவாயு விநியோக கொள்கை, 2023

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 18.03.2023 அன்று **"தமிழ்நாடு நகர எரிவாயு விநியோக கொள்கை 2023"** யினை வெளியிட்டார்கள். பல்வேறு அரசுத்துறைகள், நிறுவனங்கள் மற்றும் பிற பங்குதாரர்களுடன் விரிவான ஆலோசனைகளுக்கு பின்னர், இந்த நகர எரிவாயு விநியோக திட்டத்திற்கான கொள்கையினை டிட்கோ நிறுவனம் உருவாக்கியிருந்தது. மேலும், நகர எரிவாயு விநியோக உட்கட்டமைப்பை துரிதமாக செயல்படுத்துவதற்கு அரசின் அனுமதி பெற்றுள்ள 7 நகர எரிவாயு விநியோக நிறுவனங்களோடு டிட்கோ ஒருங்கிணைந்து செயலாற்றி வருகிறது.

### 3.2.2 தமிழ்நாடு சரக்கு போக்குவரத்துக் கொள்கை, 2023

2030 ஆம் ஆண்டில் பொருளாதாராமானது 1 டிரில்லியன் அமெரிக்க டாலர் என்ற மாநிலத்தின் இலக்கை அடைவதற்கும், வளர்ச்சி பாதையில் பிற

மாநிலங்களோடு போட்டியிடும் திறனை உயர்த்துவதற்கும், சரக்கு போக்குவரத்து துறைக்கு வலுவான முக்கியத்துவம் அளிப்பதுடன் அதனை செயல்படுத்தும் சூழல் அமைப்பை நிறுவுதல் மிகவும் இன்றியமையாதாகும். ஆகையால், தமிழ்நாடு அரசு சரக்கு போக்குவரத்து சூழல் அமைப்பை உருவாக்குவதற்காக பல துறையிடையே ஒருங்கிணைந்த அணுகுமுறையுடன் கூடிய, 5 ஆண்டுக்கான, ஒரு சரக்கு போக்குவரத்து கொள்கையை உருவாக்கி உள்ளது. தமிழ்நாட்டில் ஒருங்கிணைந்த, நம்பகமான, சிக்கனமான மற்றும் நிலையான சரக்கு போக்குவரத்து சூழல் அமைப்பை ஏற்படுத்துவது இக்கொள்கையின் நோக்கமாகும். இத்தொலைநோக்குப் பார்வையை உறுதிப்படுத்தும் விதமாக ஒழுங்குமுறை கட்டமைப்பு, ஒருங்கிணைந்த உட்க்கட்டமைப்பு, புதுமையான தொழில்நுட்பத்தை புகுத்துதல், பயிற்சி மற்றும் திறன் மேம்பாடு போன்றவற்றை ஏற்படுத்துதல், அதன்மூலம் தொழில் மற்றும் வர்த்தகத்திற்கு உகந்த மாநிலமாக தமிழ்நாட்டை மேலும் வலு சேர்த்திட இக்கொள்கை பெரிதும் உதவும். சரக்கு போக்குவரத்து துறையின் வளர்ச்சிக்காக தனியார் பங்களிப்பை ஊக்குவிப்பதோடு, சந்தை பங்குகேற்பாளர்களுக்கு நிதி சலுகைகளையும் வழங்க இக்கொள்கையில் வழிவகை

செய்யப்பட்டுள்ளது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 18.03.2023 அன்று **"தமிழ்நாடு சரக்கு போக்குவரத்துக் கொள்கை மற்றும் ஒருங்கிணைந்த சரக்கு போக்குவரத்துத் திட்டம் 2023"** யினை வெளியிட்டார்கள்.

### 3.2.3 மாநில ஒருங்கிணைந்த சரக்கு போக்குவரத்துத் திட்டம் (SILP)

அடுத்த 10 ஆண்டுகளுக்கு சரக்கு போக்குவரத்து துறையில் அடையாளம் கண்டறியப்பட்ட இடையூறுகளை களைவதும் மற்றும் மாநிலத்தில் ஏற்படும் உடனடித் தேவைகளுக்கு முன் முயற்சிகளை மேற்கொள்வதும், மாநில ஒருங்கிணைந்த சரக்கு போக்குவரத்துத் திட்டத்தின் (SILP) முக்கிய அம்சமாகும். மேலும், இது சரக்கு போக்குவரத்து துறையின் செயல் திறனை வெகுவாக மேம்படுத்தும்.

முக்கிய தொழில்கள் மற்றும் சரக்கு போக்குவரத்து உட்கட்டமைப்பு ஆகியவைகளுக்கு இடையே பொருட்கள் மற்றும் சரக்குகளை இறுதி பயனாளிகளுக்கு கொண்டு செல்ல ஒரு சிறந்த ஒருங்கிணைப்பை ஏற்படுத்தி, அனைத்து பங்குதாரர்களுக்கும் நீடித்த, நிலையான, விரைவான வளர்ச்சியை ஏற்படுத்துவது இத்திட்டத்தின் முக்கிய

நோக்கம் ஆகும். **3 சரக்கு போக்குவரத்து பெருவழித்தடங்களில் செயல்படுத்தப்பட வேண்டிய திட்டங்களின் மதிப்பு சுமார் ரூ.63,000 கோடி என அடையாளம் காணப்பட்டுள்ளது. இதன் மூலம் சுமார் 1.60 லட்சம் நபர்கள் நேரடி மற்றும் மறைமுக வேலை வாய்ப்பை பெறுவர்.** இந்த ஒருங்கிணைந்த சரக்கு போக்குவரத்து திட்டம், அடுத்த 10 ஆண்டுகளில் 6 முக்கியக் கருப்பொருட்களின் (Themes) மூலம், 50 திட்டங்களை செயல்படுத்த அடையாளம் காணப்பட்டுள்ளன. சரக்கு வாகன முனையங்களுக்கான வலுவான உட்கட்டமைப்பை ஏற்படுத்துதல், உயர்தர சேவைகள் வழங்குதல், திறன் மேம்படுத்துதல், இத்துறையில் பல்வேறு பிரிவுகளுக்கு ஊக்கமளிப்பு / நிதி ஆதரவு வழங்குதல் ஆகியவை இத்திட்டத்தில் இடம் பெற்றுள்ளன. பல்வேறு முன்மாதிரி முயற்சிகளோடு, மேற்கூறிய 50 திட்டங்களை செயல்படுத்த வேண்டிய துறை, அதற்கான கால நிர்ணயம், அதனால் ஏற்படும் நன்மைகள் ஆகியவற்றுடன் இத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. மேலும், எதிர்கால தேவைகளுக்கேற்ப, அவ்வப்போது இத்திட்டம் மேம்படுத்தப்படும்.

### 3.2.4 தமிழ்நாடு வானூர்தி மற்றும் பாதுகாப்பு தொழில் கொள்கை, 2022

வான்வெளி மற்றும் பாதுகாப்புத் துறைக்கான உற்பத்தி மற்றும் சேவை மையமாக தமிழ்நாட்டை மாற்றவேண்டும் என்ற நோக்கத்தோடு **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 8.11.2022 அன்று "தமிழ்நாடு வான்வெளி மற்றும் பாதுகாப்பு தொழில் கொள்கை 2022" (Tamil Nadu Aerospace & Defence Industrial Policy 2022) வெளியிடப்பட்டது.** தமிழ்நாட்டில் வான்வெளி மற்றும் பாதுகாப்புத் தொழில்துறையின் வளர்ச்சியை மேம்படுத்தும் வகையில் தொழில்நுட்ப செயலாக்கிகள் (Technical enablers) திறன் செயலாக்கிகள் (Skilling enablers), நிதி செயலாக்கிகள் (Financial enablers), உள்கட்டமைப்பு செயலாக்கிகள் (Infrastructural enablers) மற்றும் செயல்பாட்டு செயலாக்கிகள் (Operational enablers) போன்ற செயலாக்கிகளை உருவாக்க இக்கொள்கை வழிவகை செய்கிறது. இக்கொள்கையின் மூலம் அடுத்த 10 ஆண்டுகளில் சுமார் ரூ.75,000 கோடி முதலீட்டை ஈர்க்கவும், 1 லட்சம் நபர்களுக்கு நேரடி மற்றும் மறைமுக வேலை வாய்ப்பினை உருவாக்கவும் முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## 3.3 உற்பத்தித் துறையில் வளர்ந்து வரும் புதிய தொழில்நுட்பங்களுக்கு ஏற்றவாறு திறன்மிகு மையங்கள் அமைத்தல் (Centres of Excellence)

உலகளவில் பெரிய நிறுவனங்களான Dassault Systemes, GE Aviation, மற்றும் Siemens ஆகிய நிறுவனங்களுடன் இணைந்து மூன்று திறன்மிகு மையங்களை (Centres of Excellence), மொத்தம் ரூ.600 கோடி மதிப்பில் டிட்கோ சென்னையில் அமைத்துள்ளது.

### 3.3.1 தமிழ் நாடு மேம்பட்ட உற்பத்தி முறைக்கான திறன்மிகு மையம் (TANCAM)

டிட்கோ நிறுவனம், Dassault Systemes உடன் இணைந்து இத்திறன்மிகு மையத்தை சுமார் 210 கோடி ரூபாய் மதிப்பில் உருவாக்கியுள்ளது. **இத்திறன்மிகு மையத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 24.06.2022 அன்று திறந்து வைத்தார்கள்**. இந்த மையம் வான்வெளி மற்றும் பாதுகாப்பு (A&D), இயந்திர வாகனங்கள் (Automotive) மற்றும் மின்சார வாகனங்கள் (Electric Vehicles) போன்ற பல்வேறு தொழில்துறைகளுக்கு உதவும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. புத்தாக்க (start-ups) நிறுவனங்கள் மற்றும் குறு, சிறு மற்றும் நடுத்தர

தொழில் நிறுவனங்களுக்கு (MSME) 3D வடிவமைப்பு திறன்களை வழங்குவதன் மூலம் வணிக ரீதியாகவும், தொழில்நுட்ப ரீதியாகவும் இம்மையம் உதவி புரியும். மேலும், தற்போது **"நான் முதல்வன்"** திட்டத்தின் ஒரு பகுதியாக **சுமார் 4,000 மாணவர்களுக்கு இம்மையத்தின் மூலம் பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது**. இந்த மையத்தின் ஒரு "துணை மையம்" சேலத்தில் நிறுவப்பட்டுள்ளது.

### 3.3.2 தமிழ்நாடு நுண்திறன் மற்றும் மேம்பட்ட உற்பத்தி முறைக்கான திறன்மிகு மையம் (TANSAM)

டிட்கோ நிறுவனம், Siemens Industrial Software Ltd உடன் இணைந்து இத்திறன்மிகு மையத்தை சுமார் 250 கோடி ரூபாய் மதிப்பில் உருவாக்கியுள்ளது. **இத்திறன்மிகு மையத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 08.11.2022 அன்று திறந்து வைத்தார்கள்**. இந்த மையம் உற்பத்தியில் புதுமை (Product Innovation), முன்கணிப்பு பொறியியல் பகுப்பாய்வு மையம் (Center for Predictive Engineering Analytics), நுண்திறன் தொழிற்சாலை ஆராய்ச்சி மையம் (Smart Factory Research), பொருள் செயல்திறன் மேலாண்மை ஆராய்ச்சி மையம் (Center for Asset Performance Management (IoT) research), உற்பத்தி சுழற்சி

மேலாண்மைக்கான (Lifecycle Management) ஆராய்ச்சி மையம், மெய்நிகர் ஆராய்ச்சி (Virtual Reality/ Augmented Reality/ Mixed Reality) மற்றும் திறன் பயிற்சி உள்ளிட்ட ஏழு சிறப்பு பிரிவுகளை கொண்டுள்ளது. இந்த மையம், புத்தாக்க நிறுவனங்கள், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் (MSME) மற்றும் பெரிய அளவிலான நிறுவனங்களுக்கு உற்பத்தி மேம்பாட்டிற்கான சேவைகளை வழங்கும். **மேலும் தற்போது "நான் முதல்வன்"** திட்டத்தின் ஒரு பகுதியாக **TANSAM மையம் சுமார் 16,000 மாணவர்களுக்கு பயிற்சி வழங்கி வருகிறது**.

### 3.3.3 தமிழ்நாடு மேம்பட்ட உற்பத்தி முறைக்கான திறன்மிகு மையம் (TAMCOE)

டிட்கோ நிறுவனம், GE Aviation உடன் இணைந்து இத்திறன்மிகு மையத்தை சுமார் ரூ.140 கோடி திட்ட மதிப்பில் உருவாக்கியுள்ளது. **இத்திறன்மிகு மையத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 08.11.2022 அன்று திறந்து வைத்தார்கள்**. விமான எந்திர பாகங்கள், மருத்துவ உபகரணங்கள் மற்றும் வாகனத்துறையின் துல்லியமான பாகங்கள் ஆகியவை இந்த மையத்தில் முப்பரிமாண முறையில் தயாரிக்கப்படுகின்றது. மேலும், இம்மையம், சேர்க்கை உற்பத்தியில் தன்நிறைவு

அடைவதற்கான செயல்பாட்டிலும் ஈடுபட்டுள்ளது. இது பல்வேறு தொழில்துறைகளுக்கு சேர்க்கை உற்பத்தியில் வடிவமைப்பு (Design for Additive Manufacturing) மேம்பட்ட முன்மாதிரி சோதனை (Prototype development), மறுசீரமைப்பு மற்றும் மறு பொறியியல் (Reverse & Re-Engineering) சேவைகளை வழங்கி வருகிறது.

## 3.4 தமிழ்நாடு பாதுகாப்புத் தொழில்துறை பெருவழித்தடம் (TNDIC)

சென்னை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், சேலம் மற்றும் ஓசூர் ஆகிய ஐந்து முனையங்களை உள்ளடக்கிய "தமிழ்நாடு பாதுகாப்புத் தொழில்துறை பெருவழித்தடம் (TNDIC)" செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த பெருவழித்தடத்தை செயல்படுத்துவதற்கான பல்வேறு உத்திகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

### 3.4.1 பொது பரிசோதனை மையங்கள் (Common Testing Centres)

டிட்கோ நிறுவனம் பின்வரும் பொது பரிசோதனை மையங்களை தனியார் பங்களிப்புடன் செயல்படுத்த திட்டமிட்டுள்ளது. "பாதுகாப்பு பரிசோதனை உட்கட்டமைப்பு திட்டத்தின்" (Defence

Testing Infrastructure Scheme) கீழ், ஒன்றிய பாதுகாப்பு அமைச்சகத்தின் மானியத்துடன் இப்பரிசோதனை மையங்களை டிட்கோ அமைக்க உள்ளது,

i) ஆளில்லா விமான தொழிலுக்கான சோதனை வசதி (Unmanned Aerial Systems Testing Facility)

ii) மின்னணு போர் முறைக்கான சோதனை வசதி (Electronic Warfare Testing Facility)

iii) மின்னணு ஒளியியல் சோதனை வசதி (Electro Optics Testing Facility)

EMI/EMC மற்றும் தொலைத்தொடர்புக்கான மற்றுமொரு சோதனை வசதியை சுமார் ரூ.123 கோடி மதிப்பில், மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்தின் (MeitY) "EMC 2.0" திட்டத்தின்கீழ், ஒன்றிய அரசின் மானியத்துடனும், தனியார் பங்களிப்புடனும் டிட்கோ நிறுவ உள்ளது.

மேற்கண்ட நான்கு பொது பரிசோதனை மையங்களும் ஸ்ரீபெரும்புதூரில் உள்ள வல்லம் வடகாலில் நிறுவப்பட உள்ளன.

### 3.4.2 பொது வசதி மையங்கள் (Common Facility Centres)

வான்வெளி மற்றும் பாதுகாப்புத் துறையின் உற்பத்தியில் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் (MSME) பங்களிப்பு மிக அதிகமாகும். அதனால் இந்நிறுவனங்களில் தேவைகளை கண்டறிந்து அதனை பூர்த்தி செய்யும் நோக்கத்துடன், டிட்கோ நிறுவனம் பொது வசதி மையங்களை நிறுவி வருகின்றது. மேலும், தொழில் நிறுவனங்களை, வான்வெளி மற்றும் பாதுகாப்புத்துறையின் (A&D) அங்கமாக்க இம்மையங்கள் உதவி புரியும். அதன்படி "திருச்சி பொறியியல் மற்றும் தொழில்நுட்ப கூட்டமைப்பு" (Trichy Engineering and Technology Cluster) பொது வசதி மையத்தில் டிட்கோ ரூ.10 கோடி முதலீடு செய்துள்ளது. மேலும், கோயம்புத்தூரில் வார்ப்பு உலோகத் (இரும்பு) தொழிற்சாலைக்கு (Casting & Foundry) பவுண்ட்ரி டெவலப்மண்ட் பவுண்டேஷன் நிறுவனத்துடன் இணைந்து சுமார் ரூபாய் 30 கோடி மதிப்பில் பொது வசதி மையம் அமைக்கப்படவுள்ளது.

வான்வெளி மற்றும் பாதுகாப்புத் தொழில்துறையில் உதிரிபாகங்களின் பிந்தைய செயல்பாடு (Post Processing) முக்கிய பங்கு வகிக்கிறது. இதனை கருத்தில் கொண்டு, டிட்கோ, GTN தொழில் நிறுவனத்துடன் இணைந்து,

கோயம்புத்தூரில் அதற்கான வசதியை ஏற்படுத்தியுள்ளது. இப்பொது வசதி மையம் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் பயன்பெறும் வகையில் அமைந்துள்ளது.

மேலும், கோயம்புத்தூரில் தொழில்துறை பங்குதாரருடன் இணைந்து பொது பொறியியல் வசதி (Common Engineering Facility Centre) மையத்தை நிறுவவும் டிட்கோ திட்டமிட்டுள்ளது. இந்த மையம், விமான வடிவமைப்பு மற்றும் மேம்பாடு (Aero Design & Development), பராமரிப்பு, பழுதுநீக்கம் மற்றும் சீரமைப்பு (Maintenance Repair overall), தொழில்துறை எந்திரவியல் (Industrial Robotics), மின்சாரவியல் (Electrical), கலப்புப்பொருட்கள் (Composites), விமான மின்னணுவியல் (Avionics), இயந்திர மின்னணுவியல் மற்றும் பரிசோதனை (Mechatronics & Testing) ஆகியவற்றில் வளர்ந்து வரும் புத்தாக்க நிறுவனங்கள், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு (MSME) தொழில் நுட்ப ஆதரவை வழங்கும்.

### 3.4.3 வான்வெளி மற்றும் பாதுகாப்புத் தொழில்களுக்கான தொழில் பூங்காக்களை நிறுவுதல்

தமிழ்நாட்டில் வான்வெளி மற்றும் பாதுகாப்புத் துறையில் முதலீட்டை ஈர்ப்பதற்கான உத்தியின் ஒரு

பகுதியாக வான்வெளி மற்றும் பாதுகாப்புத் துறையின் பல்வேறு துணை துறைகளுக்கான தொழில் பூங்காக்களை அமைக்கும் முயற்சியில் டிட்கோ ஈடுபட்டுள்ளது. ஸ்ரீபெரும்புதூரில் உள்ள வல்லம் வடகாலில் ஒரு வான்வெளி மற்றும் பாதுகாப்பு பூங்கா செயல்பட்டு வருகிறது, மேலும் கோயம்புத்தூர் மாவட்டத்தில் வாரப்பட்டி, மற்றும் சூலூரில் இரண்டு தொழில் பூங்காக்களை டிட்கோ நிறுவ உள்ளது.

### 3.4.4 விமானத்தை இயக்க பயிற்சி தரும் நிறுவனங்களை (Flying Training Organisations) அமைத்தல்

விமானப் போக்குவரத்து, பொருளாதார வளர்ச்சிக்கு இன்றியமையாத ஒன்றாகும். இந்தியாவில் விமானப் போக்குவரத்துத்துறையின் வளர்ச்சி அதிகரித்து வருவதால், அதிகளவில் பயிற்சி பெற்ற விமானிகள் தேவைப்படுகிறார்கள். இத்தகைய பயிற்சி பெற்ற விமானிகளின் எண்ணிக்கையை அதிகரிக்கும் பொருட்டு, டிட்கோ நிறுவனம் தமிழ்நாட்டில் விமானங்களை இயக்க பயிற்சி தரும் நிறுவனங்களை (Flying Training Organisation) உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது. இதன் மூலம் தமிழ்நாட்டில் உள்ள இளைஞர்களுக்கு புதிய வேலை வாய்ப்புகளை

உருவாக்கவும், அந்நிய செலாவணியை சேமிக்கவும் இயலும்.

### 3.4.5 மதுரை மற்றும் கோவையில் ட்ரோன் விமானி பயிற்சி நிறுவனங்களை அமைத்தல்

ட்ரோன் துறையில் அதிகரித்து வரும் விமானிகளின் தேவையை கருத்தில் கொண்டு, ஒன்றிய அரசின் இந்திரா காந்தி யுரான் அகாடமி (IGRUA) மற்றும் தமிழ்நாட்டின் பிளானட்–எக்ஸ் நிறுவனம் ஆகியவற்றுடன் இணைந்து டிட்கோ நிறுவனம், இரண்டு ட்ரோன் விமானி பயிற்சி நிறுவனங்களை மதுரை மற்றும் கோயம்பத்தூரில் நிறுவ வழிவகை செய்துள்ளது. **இந்த இரண்டு ட்ரோன் விமானி பயிற்சி நிறுவனங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 8.11.2022 அன்று திறந்து வைத்தார்கள். இப்பயிற்சி நிறுவனங்கள் ஆண்டுதோறும் 2400க்கும் மேற்பட்ட ட்ரோன் விமானிகளுக்கு பயிற்சி அளிக்கும் திறன் கொண்டவை.**

## 3.5 தமிழ்நாட்டில் உருவாகும் வளர் துறைகளுக்கான ஊக்க நிதியம் (Tamil Nadu Emerging Sector Seed Fund)

"தமிழ்நாட்டின் தயாரிப்பு" என்பதை ஊக்குவிப்பதற்காக, மூலதன ஊக்க நிதி அளிக்க தமிழ்நாடு அரசு ஒரு திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. தமிழ்நாட்டின் திறன் வாய்ந்த மனிதவளத்தை பயன்படுத்தி, புத்தாக்கம் (Innovation), ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு (R&D) மற்றும் புத்தொழில் (StartUp) கலாச்சாரத்தை மென்மேலும் ஊக்குவிக்க, தமிழ்நாடு உள்கட்டமைப்பு நிதி மேலாணமை நிறுவனம் (TNIFMC), டிட்கோ மற்றும் டைடல் பூங்கா நிறுவனங்கள் மூலமாக ரூ.500 கோடியை இதற்கென தமிழ்நாடு அரசு ஒதுக்கியுள்ளது. இந்நிதி செபியில் (SEBI) பதிவு செய்யப்பட்ட வகை I – வென்ச்சர் கேபிடல் ஃபண்ட் ஆகும். இந்நிதி தமிழ்நாடு உட்கட்டமைப்பு நிதி மேலாண்மை கழகத்தால் (TNIFMC) நிர்வகிக்கப்படுகிறது.

வான்வெளி மற்றும் பாதுகாப்பு (A&D), மேம்பட்ட உற்பத்தி (Advanced Manufacturing), புதுப்பிக்கத்தக்க எரிசக்தி (Renewable Enegery), ESDM, தொழில்நுட்ப ஜவுளி (Technical Textile), ஆழ் தொழில் நுட்பம் (DeepTech), இயந்திரவியல் (Robotics), மின்னணு வர்த்தகம் (E–Commerce), வேளாண் மற்றும் உணவு

பதப்படுத்தல் தொழில்நுட்பம், மருந்து தயாரிப்பு தொழில்நுட்பம் (Pharma and Bulk Durgs), உயிரி தொழில்நுட்பம் (BioTech), மருத்துவ சாதனங்கள் (Medical Devices), நிதி தொழில்நுட்பம் (FinTech), விண்வெளி தொழில்நுட்பம் (SpaceTech) ஆகியவை இந்நிதியின் சிறப்பு கவனம் பெறும் துறைகளுள் முக்கியமானவை ஆகும்.

இந்த மூலதன ஊக்க நிதியை பெறுவதற்காக தகுதிவாய்ந்த புத்தொழில் நிறுவனங்களிடம் இருந்து இணையதளம் மூலம் விண்ணப்பங்கள் பெறப்பட்டு, முதலீட்டு வல்லுநர் குழுவால் புத்தொழில் நிறுவனங்கள் தேர்வு செய்யப்படுகின்றன. இந்நிதியின் முதற் சுற்றில் ஐந்து புத்தொழில் நிறுவனங்களுக்கு மொத்தத்தில் ரூ.13.4 கோடி வழங்குவதற்கான ஒப்பளிப்பு ஆணைகளை, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 27.01.2023 அன்று வழங்கினார்கள்.

### 3.6 தொழில்களுக்கான சூழலமைப்பு நிதியம் (IEF)

தொழில் சூழல் அமைப்புடன் சிறு உட்கட்டமைப்பு திட்டங்களை ஏற்படுத்துவதற்கு உகந்த வகையில், தமிழ்நாடு அரசு ரூ.500 கோடியில் "தொழில்களுக்கான சூழல் அமைப்பு நிதியம்"

ஒன்றினை உருவாக்கியுள்ளது. இந்நிதியத்தை நிர்வகிக்கும் முகமையாக செயல்பட டிட்கோ நிறுவனம் நியமிக்கப்பட்டுள்ளது. மேலும், இந்நிதியம் "உயர் அதிகாரக் குழுவினால்" கண்காணிக்கப்பட்டு நிர்வகிக்கப்படுகின்றது. சிப்காட், டிட்கோ, தமிழ்நாடு வழிகாட்டி நிறுவனம் ஆகிய நிறுவனங்கள் சார்பில், இந்நிதியத்திலிருந்து நிதி ஒதுக்கீடு கோரி வரும் கருத்துருக்கள் டிட்கோவால் பெறப்படும். இக்கருத்துக்களை "உயர் அதிகாரக் குழு" பரிசீலினை செய்து, நிதி வழங்க ஒப்புதல் அளிக்கும். இதுவரை உயர் அதிகாரக் குழு 16 கருத்துருக்களுக்கு ரூ.76.71 கோடி வழங்க ஒப்புதல் அளித்துள்ளது. அதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

## 3.7 தமிழ்நாடு அறிவுசார் நகரம்

கல்வியை மையமாக கொண்டிருக்கும் உலகத் தரத்திலான ஒரு அறிவு சூழலலமைப்பாக "தமிழ்நாடு அறிவு சார் நகரை" உருவாக்க தமிழ்நாடு அரசு திட்டமிட்டுள்ளது. சிறந்த பல்கலைகழகங்கள், கல்வி நிலையங்கள், திறன்மிகு மையங்கள் மற்றும் அறிவுசார் தொழிலகங்கள் அனைத்தும் அருகருகே இந்த நவீன நகரத்தில் அமைந்திருக்கும். இதன்மூலம், உயர்கல்வியும், மனிதவள மேம்பாடும், தொழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சியும் ஒருங்கிணைந்து செயல்படும்.

பசுமையான வாழ்விட சூழலில் அடுத்த தலைமுறைக்கான புத்தாக்கத்தை உத்வேகத்துடன் ஊக்குவிக்கும் வகையில் அனைத்து வசதிகளையும் கொண்டதாக இந்நகரம் திகழும். அறிவால் முன்னெடுக்கப்படும் பொருளாதாரமாக தமிழ்நாட்டை உயர்த்துவதற்கு இது வழிவகை செய்யும்.

தமிழ்நாட்டிலிருந்து உலகின் பிற பகுதிகளுக்கும் மற்றும் உலகின் பிற பகுதிகளிலிருந்து தமிழ்நாட்டிற்கும் அறிவு பகிர்வுக்கு ஒரு வினையூக்கியாக தமிழ்நாடு அறிவுசார் நகரம் செயலாற்றும். உயிரின அறிவியல் (Life Sciences), வேளாண் தொழில்நுட்பம் (Agri Tech), கட்டடக்கலை மற்றும் வடிவமைப்பு (Architecture & Design), குறைக் கடத்திகள் (Semiconductors), மின்னணு அமைப்புகளின் வடிவமைப்பு மற்றும் உற்பத்தி (Electronics System Design & Manufacturing), வான்வெளி மற்றும் பாதுகாப்பு (Aerospace & Defence), நகர்திறன் (Mobility), நிதி நுட்பம் (FinTech), தொலைத்தொடர்புகள் (Telecommunications), விண்வெளி தொழில்நுட்பம் (SpaceTech) போன்ற பிரிவுகளில் ஆராய்ச்சியையும், புத்தாக்கத்தையும் வளர்த்தெடுக்கும் பணியை தமிழ்நாடு அறிவுசார் நகரம் மேற்கொள்ளும். தமிழ்நாடு அறிவுசார் நகரத்தை

உருவாக்குவதற்கான நிலம், திருவள்ளூர் மாவட்டத்தில் அடையாளம் காணப்பட்டுள்ளது. இந்நிலத்தை கையகப்படுத்துவதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## 3.8 பல்கலைக்கழக ஆராய்ச்சி பூங்காக்கள்

தொழில்துறைக்கும், கல்வித்துறைக்கும் இடையில் ஒத்துழைப்பை உருவாக்குவது, ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டை ஏதுவாக்குவது, ஆராய்ச்சியின் கண்டுபிடிப்புகளை வர்த்தக செயல்பாடாக மாற்றுவது, தொழில்முனைவு மேம்பாடு, புத்தாக்கம் மற்றும் அறிவுசார் சொத்துரிமை அதிகரிப்பு (Intellectual Property), மற்றும் புதுமைப் புனைவு மண்டலங்களை உருவாக்குவது (Innovation Clusters) இதன் நோக்கமாகும். உயிரி தொழில்நுட்பம் (BioTech), மீநுண் தொழில்நுட்பம் (NanoTech), மற்றும் ஆழ் தொழில்நுட்பம் (DeepTech) ஆகியவற்றில் திறன்மிகு மையங்களை (Centers of Excellence) உருவாக்கி புத்தாக்க நிறுவனங்கள் (startups) மற்றும் சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் பயன்பாட்டிற்கு உதவுவதே பல்கலைக்கழக ஆராய்ச்சி பூங்காக்களின் நோக்கமாகும்.

சென்னை IIT ஆராய்ச்சி பூங்காவின் மாதிரியை பின்பற்றி, மதுரை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், திருநெல்வேலி மற்றும் காரைக்குடியில் உள்ள அரசு பல்கலைக்கழகங்களில் ஆராய்ச்சி பூங்காக்களை நிறுவ முடிவு செய்யப்பட்டுள்ளது. இப்பூங்காக்களை நிறுவுவதற்கான தொடர்புடைய பல பங்காளர்களின் ஒத்துழைப்போடு, ஆராய்ச்சி பூங்கா கட்டடம் மற்றும் தொடர்பான பணிகளை டிட்கோ நிறுவனம் மேற்கொள்ளும்.

## 3.9 விமான நிலையங்கள்

நமது மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சியின் முக்கிய காரணிகளில் ஒன்றாக வான்வழி போக்குவரத்து உள்ளது. விமான பயணிகள் மற்றும் சரக்கு போக்குவரத்தின் தேவை தமிழ்நாட்டில் பன்மடங்கு அதிகரித்துள்ளது.

### 3.9.1 சென்னை அருகே புதிய விமான நிலையம்

சென்னை மாநகரம் மற்றும் அதன் சுற்று வட்டாரப் பகுதியின் விமான போக்குவரத்து தேவைகளை கையாண்டு வரும் சென்னை மீனம்பாக்கம் விமான நிலையம், அதன் அதிகபட்ச பயணிகள் கையாளும் திறனை 2028–ம் ஆண்டில் எட்டிவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சென்னை விமான நிலையம் கையாண்டு வந்த விமான போக்குவரத்தின் ஒரு குறிப்பிட்ட பங்கு, நமது அண்டை மாநிலங்களில் அமைந்துள்ள புதிய விமான நிலையங்களுக்கு சென்று உள்ளது. இதனால் இந்திய விமான போக்குவரத்தில், சென்னை விமான நிலையம் வகித்து வந்த 3–ஆம் இடத்திலிருந்து தற்போது 5–வது இடத்திற்கு சென்றுள்ளது. விமான போக்குவரத்தினால் தமிழ்நாடு பெற்ற வளர்ச்சியினை தொடர்ந்து தக்கவைத்து கொள்ளவும், எதிர்காலத்தில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு விமான போக்குவரத்தில் ஏற்படும் வளர்ச்சியினால் உருவாகும் பொருளாதார பலன்களை முழுமையாக பெறவும், மாநிலத்தின் முதலீட்டு சூழ்நிலைக்கு உறுதுணையாக இருக்கவும், சென்னையில் ஒரு புதிய விமான நிலையத்தினை அமைப்பது தற்போது இன்றியமையாதது ஆகும்.

வர்த்தகம், தொழில், சுற்றுலா போன்ற துறைகளில் தமிழ்நாடு மேலும் வளர்ச்சி அடையவும், புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கவும், அதிகளவில் பயணிகள் மற்றும் சரக்குகளை கையாளும் திறன் கொண்ட சர்வதேச தரத்திலான உட்கட்டமைப்பு மற்றும் இதர வசதிகளுடன் இப்புதிய விமான நிலையம் உருவாக்கப்படும். இப்புதிய விமான நிலையம் அமைப்பதற்கான பணிகளை மேற்கொள்ள முகமை

நிறுவனமாக டிட்கோ நிறுவனத்தை தமிழ்நாடு அரசு நியமித்துள்ளது.

இந்திய விமான நிலைய ஆணையத்தின் சாத்தியக்கூறு அறிக்கையின் அடிப்படையில், புதிய விமான நிலையம் அமைப்பதற்கான பொருத்தமான இடமாக காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள பரந்தூர் தேர்வு செய்யப்பட்டுள்ளது. அடுத்த 35 வருடங்களுக்கான எதிர்கால விமான போக்குவரத்துத் தேவையை பூர்த்தி செய்யும் வகையில், ஆண்டுக்கு 100 மில்லியன் பயணிகளை கையாளும் வகையில் இந்த புதிய விமான நிலையம் அமைக்கப்படும்.

புதிய விமான நிலையம் அமைப்பதற்கான இடத்திற்கு ஒப்புதல் கோரும் விண்ணப்பம், ஒன்றிய அரசின் புதிய விமான நிலையம் கொள்கை 2008 – ல் குறிப்பிடப்பட்டுள்ள வழிமுறைகளின்படி, விமான போக்குவரத்து அமைச்சகத்தின் கீழ் உள்ள குழுவிற்கு டிட்கோ நிறுவனம் சமர்ப்பித்துள்ளது. இவ்விண்ணப்பம், ஒன்றிய அரசின் அமைச்சகத்தின் பரிசீலனையில் உள்ளது.

அமையவிருக்கும் விமான நிலைய செயல்பாட்டு பகுதியில் உள்ள நீர்நிலைகளை பாதுகாப்பதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்வதற்கும், நீர்நிலைகளின்

கொள்ளளவுகளை தொடர்ந்து பராமரிக்கவும், தீர்வுகளை உரிய ஆய்வின்படி பரிந்துரைக்கவும், வல்லுநர்கள் மற்றும் உயர் அதிகாரிகள் அடங்கிய ஓர் "உயர்மட்ட குழுவினை" தமிழ்நாடு அரசு அமைத்துள்ளது.

புதிய விமான நிலையம் அமைப்பதற்கு தேவையான விரிவான தொழில்நுட்ப பொருளாதார அறிக்கை (DTER) தயாரிப்பதற்காக ஒரு ஆலோசகர் நிறுவனம் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். அதற்கான ஒப்பந்த புள்ளியை டிட்கோ நிறுவனம் கோரியுள்ளது. ஆலோசகர் நிறுவனம் விரைவில் நியமிக்கப்படும்.

### 3.10 தமிழ்நாட்டில் விமான நிலைய விரிவாக்கத் திட்டங்கள்

ஆறு விமான நிலையங்கள் (இவற்றில் மூன்று சர்வதேச விமான நிலையங்கள்) அமையப் பெற்ற பெருமை கொண்டது தமிழ்நாடு. இவ்விமான நிலையங்கள் மற்றும் வேலூரில் தொடங்கப்படவுள்ள ஒரு விமான நிலையம் ஆகியவை மக்களின் தேவைகளை பூர்த்தி செய்வது மட்டுமின்றி, மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்துவதில் குறிப்பிடத்தக்க பங்கு வகுக்கின்றன. முழுமையான வளர்ச்சியை நோக்கி பயணிக்கும் தமிழ்நாட்டிற்கு ஈடு கொடுக்கும் வகையில் விமான

நிலையங்களின் விரிவாக்கம் மற்றும் நவீனமயமாக்கல் ஆகியவற்றை இந்திய விமான நிலைய ஆணையம் மேற்கொண்டுள்ளது. இதற்கு கூடுதல் நிலம் மிக முக்கிய தேவையாகும். விரிவாக்கத்திற்கான நிலங்கள் தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு (ம) வர்த்தகத் துறையால் கையகப்படுத்தப்பட்டு, இந்திய விமான நிலைய ஆணையத்திற்கு வழங்கப்படுகிறது.

### 3.10.1 சென்னை விமான நிலையம்

சென்னை விமான நிலையத்தின் மொத்த பரப்பளவு 1318.85 ஏக்கர் ஆகும். சென்னை விமான நிலைய விரிவாக்கத்திற்காக, 67.95 ஏக்கர் பட்டா நிலங்களையும், 10.32 ஏக்கர் புறம்போக்கு நிலங்களையும் வழங்குமாறு, இந்திய விமான நிலைய ஆணையம், மாநில அரசை கோரியுள்ளது. இதில் 50.36 ஏக்கர் பட்டா நிலங்கள் இந்திய விமான நிலைய ஆணையம் வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அரசு நிலங்களை குத்தகை அடிப்படையில் வழங்குவதற்கான பணி நடைபெற்று வருகிறது. 21.24 ஏக்கர் பாதுகாப்புத்துறை நிலங்களுக்கான பணி அனுமதி, பாதுகாப்பு அமைச்சகத்திடம் இருந்து பெறப்பட்டுள்ளது.

### 3.10.2 மதுரை விமான நிலையம்

மதுரை விமான நிலையம் தமிழ்நாட்டின் தென் மாவட்டங்களின், பயணிகள் மற்றும் சரக்கு விமான போக்குவரத்து தேவைகளை பூர்த்தி செய்யும் ஒரு முக்கிய விமான நிலையமாகும். மதுரை விமான நிலையத்தின் மொத்த பரப்பளவு 502.19 ஏக்கர் ஆகும். மதுரை விமான நிலையத்தின் வளர்ச்சி வீதத்தை கருத்தில் கொண்டு, இவ்விமான நிலையத்தை விரிவாக்கம் செய்ய இந்திய விமான நிலைய ஆணையம் முடிவு செய்து, இதற்கென, 462.35 ஏக்கர் பட்டா நிலங்கள் மற்றும் 171.09 ஏக்கர் புறம்போக்கு நிலங்களை மாநில அரசிடம் வழங்க கோரியுள்ளது. சுமார் 460.38 ஏக்கர் பட்டா நிலங்கள் கையகப்படுத்தப்பட்டு இந்திய விமான நிலைய ஆணையத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. விமான நிலைய விரிவாக்கத்திற்கு தேவையான 171.01 ஏக்கர் புறம்போக்கு நிலங்களில், 84.85 ஏக்கர் புறம்போக்கு நிலங்கள் ஏற்கனவே ஒப்படைக்கப்பட்டுள்ளன.

மதுரை பகுதி மக்களின் தொடர் கோரிக்கைகள் மற்றும் விருப்பத்தை கருத்தில் கொண்டு, மதுரை விமான நிலையத்தை சர்வதேச விமான நிலையமாக அறிவிக்க வேண்டும் என தமிழ்நாடு அரசு, இந்திய

விமான போக்குவரத்து அமைச்சகத்தை தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.

### 3.10.3 கோயம்புத்தூர் விமான நிலையம்

கோயம்புத்தூர் விமான நிலையத்தின் மொத்த பரப்பளவு 420.32 ஏக்கர் ஆகும். இவ்விமான நிலைய விரிவாக்கத்திற்காக 468.80 ஏக்கர் பட்டா நிலங்களும், 28.86 ஏக்கர் புறம்போக்கு நிலங்களும், 151.77 ஏக்கர் பாதுகாப்புத்துறை நிலங்களும், 3.15 ஏக்கர் ரயில்வே மற்றும் பிற துறை நிலங்களும் வழங்குமாறு இந்திய விமான நிலைய ஆணையம் கோரியுள்ளது. ஏற்கனவே கையகப்படுத்தப்பட்ட 395.07 ஏக்கர் பட்டா நிலங்களும், 20.58 ஏக்கர் புறம்போக்கு நிலங்களும் விரைவில் இந்திய விமான நிலைய ஆணையத்திற்கு குத்தகை முறையில் வழங்கப்படும். விமான நிலைய விரிவாக்கத்திற்காக 148.39 ஏக்கர் பாதுகாப்புத் துறை நிலங்களுக்கான பணி அனுமதி பாதுகாப்பு அமைச்சகம் வழங்கியுள்ளது. மீதமுள்ள நிலங்களை கையகப்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது.

### 3.10.4 திருச்சிராப்பள்ளி விமான நிலையம்

திருச்சிராப்பள்ளி விமான நிலையத்தின் மொத்த பரப்பளவு 1702.53 ஏக்கர் ஆகும். விமான நிலைய விரிவாக்கத்திற்காக 302.92 ஏக்கர் பட்டா நிலங்கள்,

34.16 ஏக்கர் புறம்போக்கு நிலங்கள் மற்றும் 133.96 ஏக்கர் பாதுகாப்புத்துறை நிலங்களை இந்திய விமான நிலைய ஆணையம் கோரியுள்ளது. இதுவரை 62.19 ஏக்கர் பட்டா நிலங்கள் கையகப்படுத்தப்பட்டுள்ளன. 166.97 ஏக்கர் பாதுகாப்புத் துறை நிலங்களுக்கான பணி அனுமதி பாதுகாப்பு அமைச்சகத்திடம் இருந்து பெறப்பட்டுள்ளது.

### 3.10.5 சேலம் விமான நிலையம்

சேலம் விமான நிலையத்தின் மொத்த பரப்பளவு 128.81 ஏக்கர் ஆகும். விமான நிலைய விரிவாக்கத்திற்காக 629.74 ஏக்கர் பட்டா நிலங்களையும் 55.32 ஏக்கர் புறம்போக்கு நிலங்களையும் இந்திய விமான நிலைய ஆணையம் கோரியுள்ளது. பட்டா நிலங்களை கையகப்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது.

### 3.10.6 தூத்துக்குடி விமான நிலையம்

தூத்துக்குடி விமான நிலையத்தின் மொத்த பரப்பளவு 188.64 ஏக்கர் ஆகும். தூத்துக்குடி விமான நிலைய விரிவாக்கத்திற்காக இந்திய விமான நிலைய ஆணையம் 727.15 ஏக்கர் பட்டா நிலங்களையும், 5.76 ஏக்கர் புறம்போக்கு நிலங்களையும் வழங்க கோரியுள்ளது. சுமார் 601.20 ஏக்கர் பட்டா நிலங்கள்

கையகப்படுத்தப்பட்டு இந்திய விமான நிலைய ஆணையத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

### 3.10.7 வேலூர் விமான நிலையம்

வேலூர் விமான நிலையத்தின் மொத்த பரப்பளவு 46.03 ஏக்கர் ஆகும். விமான ஓடு தளபாதை, டாக்சிவே (taxiway), ஏப்ரான் (apron) வசதி மற்றும் விமானப் போக்குவரத்துக் கட்டுப்பாட்டுக் கோபுரம் போன்ற உள்கட்டமைப்புப் பணிகள் நிறைவடைந்துள்ளன. விமான நிலையம் செயல்படுவதற்கான உரிமம் (License to operate), விமான போக்குவரத்துத்துறை இயக்குநரகத்திடமிருந்து (DGCA) பெற வேண்டியுள்ளது. வேலூர் விமான நிலைய விரிவாக்கத்திற்காக இந்திய விமான நிலைய ஆணையம் 11.02 ஏக்கர் பட்டா நிலங்களையும் மற்றும் 53.36 ஏக்கர் புறம்போக்கு நிலங்களையும் வழங்குமாறு கோரியுள்ளது. இதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

### 3.10.8 சென்னை – பினாங்கு விமான போக்குவரத்து

தமிழ் மக்களின் கோரிக்கை மற்றும் எதிர்பார்ப்பிற்கினங்க, சென்னைக்கும் பினாங்குக்கும் (மலேசியா) இடையே நேரடி விமானப் போக்குவரத்து தொடங்குமாறு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மாண்புமிகு இந்திய பிரதமர் அவர்களை

கேட்டுக்கொண்டுள்ளார். இது குறித்து, தமிழ்நாடு அரசு விமான நிறுவனங்களுடனும் தொடர்பு கொண்டுள்ளது.

**3.11 டிட்கோ நிதிச்செயல்பாடு**

டிட்கோ நிறுவனம், 2021–22ஆம் நிதி ஆண்டில் வரிக்கு பிந்தய நிகர இலாபமாக 252.17 கோடி ரூபாய் ஈட்டி, அரசுக்கு பங்கு ஈவு தொகையாக (Dividend) 150 கோடி ரூபாய் (59.48%) 2022–23 நிதியாண்டில் அளித்துள்ளது.

Blank




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 08.11.2022 அன்று தமிழ்நாடு வான்வெளி மற்றும் பாதுகாப்பு தொழில் கொள்கை 2022"யினை வெளியிட்டார்கள்

Blank




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 08.11.2022 அன்று தொழில் வளர்ச்சி 4.0 மாநாட்டில் காட்சிப்படுத்தப்பட்ட பல்வேறு வகையான ஆளில்லா விமானங்களை பார்வையிட்டார்கள்

Blank




மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 18.03.2023 அன்று "தமிழ்நாடு சரக்கு போக்குவரத்துக் கொள்கை மற்றும் ஒருங்கிணைந்த சரக்கு போக்குவரத்துத் திட்டம் 2023" யினை வெளியிட்டார்கள்

Blank




மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 18.02.2023 அன்று வேலூர் மாவட்டத்தில்
டைடல் நியோ தகவல் தொழில்நுட்ப பூங்கா அமைப்பதற்கு அடிக்கல் நாட்டினார்கள்

Blank

## 4. தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம்

தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம், மாநிலத்தின் தொழில் வளர்ச்சிக்காக 1949ஆம் ஆண்டில் இந்திய கம்பெனிகள் சட்டத்தின்கீழ் நிறுவப்பட்ட முன்னோடி மேம்பாட்டு நிதி நிறுவனமாகும். இக்கழகம் குறு, சிறு, நடுத்தர மற்றும் பெரிய அளவிலான உற்பத்தி மற்றும் சேவை சார்ந்த நிறுவனங்களுக்கு நிதியுதவி வழங்கி வருகிறது. முக்கியமாக, முதல் தலைமுறை தொழில் முனைவோர்களை ஊக்குவிப்பதில் இக்கழகம் முன்னோடியாக திகழ்கிறது. இக்கழகத்தின் மொத்த நிதி உதவியில் 90 விழுக்காடுக்கு மேலாக, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கும், 40 விழுக்காடு முதல் தலைமுறை தொழில் முனைவோர்களுக்குமாக வழங்கப்பட்டு வருகிறது.

இந்நிறுவனம் 31.03.2023 வரை 1,30,472 நிறுவனங்களுக்கு ரூபாய் 23,021.21 கோடி அளவிற்கு கடன் அனுமதி வழங்கியுள்ளது. தமிழ்நாடு அரசு தொடர்ந்து வழங்கி வரும் ஆதரவினாலும் வழிக்காட்டுதலாலும், இக்கழகம் 2003–04ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து கடந்த 21 வருடங்களாக நிகர இலாபம் ஈட்டி வருகிறது. இந்த வகையில் 2022–

23ஆம் நிதியாண்டில், முதன்முதலாக அதிகப்படியான நிகர இலாபம் ரூபாய் 105 கோடியை (தற்காலிக) எட்டியுள்ளது.

இக்கழகம், தற்போது கடன் வழங்கல் சூழலுக்கு ஏற்றவாறு மாநிலத்தில் உள்ள குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு அனைத்து விதமான உதவிகளையும் வழங்கும் வகையில் செயல்பட்டுவருவதின் விளைவாக, இதனுடைய 2021–22 ஆண்டின் செயல்பாட்டில் மிகப்பெரிய முன்னேற்றம் ஏற்பட்டு, இதனுடைய நிர்வாக கடன் நிலுவைத் தொகை ரூபாய் 2032 கோடியாக உயர்ந்துள்ளது. இதன் விளைவாக, இந்நிறுவனத்தின் தரம் "BBB+" இல் இருந்து "A" ஆக முன்னேறியுள்ளது. இந்நிறுவனம், இதே வளர்ச்சி உத்வேகத்துடன் செயல்பட்டு 23.24% வளர்ச்சி விகிதத்துடன் 2022–23ஆம் நிதியாண்டில் உயர்மட்ட மொத்த கடன் நிலுவைத் தொகையான ரூபாய் 2526.77 கோடியை எட்டியுள்ளது.

மேலும், இக்கழகம் 2015–16ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து ஈவுத்தொகை வழங்கி வருகிறது. கடந்த 2021–22ஆம் நிதியாண்டின் ஈவுத் தொகையான

ரூபாய் 9.11 கோடியினை தமிழ்நாடு அரசிடம் இக்கழகம் வழங்கியுள்ளது.

### 4.1. கடன் தொகுப்பு தொகை

இந்நிறுவனத்தின் மொத்த கடன் தொகுப்பு தொகை 31.03.2023– ன்படி ரூபாய் 2526.77 கோடியாக உள்ளது. இதன் தொழில் வாரியான சதவிகிதம் பின்வருமாறு. பொறியியல் – 22.05%, பிளாஸ்டிக்– 10.09%, உணவு பதப்படுத்துதல் – 10.93%, ஜவுளி – 5.41%, மின் இயந்திரங்கள் – 19.99%, மற்றவை – 31.53%.

### 4.2. நடைமுறையில் உள்ள திட்டங்கள்

தொழில் முனைவோரின் பல்வேறு நிதி தேவைகளை பூர்த்தி செய்ய, தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் கீழ்க்கண்ட திட்டங்களை ஏற்கனவே செயல்படுத்தி வருகிறது:–

### 4.2.1 பொது காலக்கடன் (General Term Loan)

இக்கழகம், உற்பத்தி மற்றும் சேவை துறைகளில் புதிய தொழிற்சாலைகளை நிறுவுவதற்கும், தற்போது இயங்கிக் கொண்டிருக்கும் தொழிற்சாலைகளை விரிவாக்குவதற்கும், நவீனமாக்குவதற்கும்,

உற்பத்தியைப் பன்முனைப்படுத்துவதற்கும், இத்திட்டத்தின்கீழ் நிதியுதவி வழங்குகிறது.

பொது / தனி நிறுவனங்களுக்கு காலக்கடன் ரூபாய் 41 கோடி வரையிலும், தனி உரிம நிறுவனங்கள் / கூட்டு நிறுவனங்கள்/ வரையறுக்கப்பட்ட பொறுப்பு கூட்டு நிறுவனங்களுக்கு காலக்கடன் ரூபாய் 27 கோடி வரையிலும் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் 2022–23ஆம் ஆண்டில், 204 தொழில் முனைவோருக்கு ரூபாய் 287.40 கோடி கடன் அனுமதி வழங்கப்பட்டுள்ளது .

### 4.2.2 இயந்திர நிதியுதவித் திட்டம் (Equipment Finance Scheme)

ஏற்கனவே திறம்பட செயல்பட்டு வரும் நிறுவனங்களுக்கு, இயந்திரம் வாங்குவதற்கு இத்திட்டத்தின் கீழ் தொழில் முனைவோரின் சொந்த முதலீடு 15 சதவிகிதத்தில் கடனுதவி அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் 2022–23 நிதியாண்டில், 97 நிறுவனங்களுக்கு ரூபாய் 119.18 கோடி கடன் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

### 4.2.3 இயந்திர நிதியுதவி திட்டம் – துரித சேவை (Equipment Finance Scheme– Fast Track)

ஏற்கனவே நன்கு செயல்பட்டு கொண்டிருக்கும் நிறுவனங்கள் தங்களது தொழிலை விரிவாக்கம் / பன்முகப்படுத்துதல் / நவீனமயமாக்கம் செய்யத் தேவையான இயந்திரங்களை வாங்க தொழில் முனைவோரின் மூலதனமின்றி 100% நிதியுதவி வழங்கப்படுகிறது. மேலும், இத்திட்டத்தில் வைப்புநிதி பிணையமாக ஏற்றுக்கொள்ளப்படும். இத்திட்டத்தின் கீழ் 2022–23ஆம் நிதியாண்டில், 90 முனைவோருக்கு ரூபாய் 66.84 கோடி கடன் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

### 4.2.4 எளிய நடைமுறை மூலதனத் திட்டம் (Flexi Working Capital Term Loan)

உற்பத்தி மற்றும் பதப்படுத்தும் நிறுவனங்களின் நடைமுறை / கூடுதல் நடைமுறை மூலதனத் தேவைகளை, பூர்த்தி செய்யும் விதமாக இந்த எளிய நடைமுறைக் காலக் கடன் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் அதிகபட்சமாக ஒரு நிறுவனத்திற்கு ரூபாய் 4 கோடி வரை கடனுதவி வழங்கப்படுகிறது. மேலும் கடன் பெற்ற நிறுவனங்கள் மேற்படி கடனை ஒரு

வருடத்திற்குப் பிறகு கடனைத் திருப்பிச் செலுத்தவோ அல்லது புதுப்பிப்பதற்கான வசதி உள்ளது. இத்திட்டத்தின் கீழ், 2022-23ஆம் நிதியாண்டில், 35 தொழில் நிறுவனங்களுக்கு ரூபாய் 22.01 கோடி கடன் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

### 4.2.5 எளிய நடைமுறை மூலதனத் திட்டத்தின் கீழ் தற்காலிக நடைமுறை கடன் வரம்பு திட்டம் (Adhoc Working Capital limit under Flexi Working Capital Term Loan Scheme)

கோவிட் தொற்றுக்கு பாதிப்புக்குள்ளான குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்களுக்கு ஏற்பட்ட பாதிப்பை கருத்தில் கொண்டு அவைகளின் உடனடி நிதி தேவையை பூர்த்தி செய்யும் வகையில் "எளிய நடைமுறை மூலதனத் திட்டத்தின் கீழ் தற்காலிக நடைமுறை கடன் வரம்பு திட்டம்" என்ற சிறப்பு திட்டத்தை தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் நடைமுறைபடுத்தியுள்ளது. இத்திட்டத்தின் மூலம், இக்கழகத்தில் ஏற்கனவே கடன் பெற்ற மற்றும் கடன் பெறாத உற்பத்தி மற்றும் சேவை சார்ந்த தொழில் நிறுவனங்கள் கடன் பெற்று பயனடையலாம். இத்திட்டத்தின் கீழ், 2022-23ஆம் நிதியாண்டில், 84 தொழில் முனைவோருக்கு ரூபாய் 62.60 கோடி கடன் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

### 4.2.6 சிறப்பு வாடிக்கையாளர் திட்டம் (Privileged Customer Scheme)

தமிழ்நாடு தொழில் முதலீட்டு கழகத்தில் நிதியுதவி பெற்று நடைமுறையில் சிறப்பாக செயல்படும் நிறுவனங்களுக்கு, அவர்களது அவசர மற்றும் தொழில் ரீதியான தேவைகளை பூர்த்தி செய்யும் வண்ணம் தொழில் முனைவோரின் சொந்த மூலதனம் இன்றி இத்திட்டத்தின் கீழ் நிதியுதவி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் 2022-23ஆம் நிதியாண்டில், 261 தொழில் முனைவோருக்கு ரூபாய் 119.45 கோடி கடன் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

### 4.2.7 வேலையில்லா இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் (Unemployed Youth Employment Generation Programme Scheme)

மாநிலத்தில் உள்ள படித்த வேலையற்ற இளைஞர்கள் சுய தொழில் தொடங்க ஊக்குவிக்கும் வகையில் அவர்களிடையே தொழில்முனையும் ஆர்வத்தை ஏற்படுத்தும் பொருட்டு மாநில அரசு இந்தத் திட்டத்தை செயல்படுத்தி உள்ளது. இதன்படி இளைஞர்களுக்கு வருமானம் ஈட்ட வழி செய்யும் வகையில் அவர்கள் ஆரம்பிக்கும் உற்பத்தி சார்ந்த குறுந்தொழில்கள் ஆரம்பிப்பதற்கு இக்கழகம் கடன் வழங்குகிறது.

### 4.2.8 புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டம் (New Entrepreneur cum Enterprise Development Scheme – NEEDS)

படித்த இளைஞர்கள், முதல் தலைமுறை தொழில் முனைவோராக உருவெடுக்க உதவுவதை குறிக்கோளாகக் கொண்டு தமிழ்நாடு அரசின் புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டு (NEEDS) திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் இக்கழகம் பெரும் பங்கு வகிக்கிறது. இத்திட்டத்தின் கீழ், தொழில் முனைவோருக்கு, தொழில் திட்ட மதிப்பீட்டில் 25 சதவீதம் அதிகபட்சமாக ரூபாய் 75 இலட்சம் வரை மூலதன மானியமாக மாநில அரசால் வழங்கப்படுகிறது. மேலும், இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் கடன்களுக்கு 3 சதவீதம் வட்டி மானியமும் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் தொழில் முனைவோரின் சொந்த மூலதனமாக, சிறப்பு பிரிவினருக்கு, அதாவது மகளிர், பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர், மாற்றுத் திறனாளி தொழில் முனைவோர்களுக்கு 5 சதவீதமாகவும், மற்ற பிரிவினருக்கு 10 சதவீதமாகவும் இருப்பது, இத்திட்டத்தின் சிறப்பு அம்சமாகும். இத்திட்டத்தின் கீழ் 31..03.2023 வரை 1039 முதல் தலைமுறை தொழில்

முனைவோருக்கு 74.28 கோடி ரூபாய் மூலதன மானியத்துடன் ரூபாய் 599.02 கோடி கடன் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. 2022–23ஆம் நிதியாண்டில், 87 தொழில் முனைவோருக்கு 16.40 கோடி ரூபாய் மூலதன மானியத்துடன் ரூபாய் 61.82 கோடி கடன் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

### 4.2.9 மருத்துவர்கள் திட்டம் (Medical Practitioners Scheme)

தகுதியுள்ள மருத்துவ பயிற்சியாளர்களுக்கு மருத்துவம் மற்றும் அது சார்ந்த உபகரணங்கள் வாங்குவதற்கு, வைப்புநிதியை பிணையமாக வைத்து விரைவில் நிதி வழங்கிட வேண்டி, இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் நிதியுதவியின் குறைந்தபட்ச மற்றும் அதிகபட்ச வரம்பு முறையே ரூபாய் 10 இலட்சம் மற்றும் ரூபாய் 2 கோடி ஆகும்.

### 4.2.10 தொழில் உள்கட்டமைப்பு முன்னெடுப்பு திட்டம் (Industrial Infrastructure Initiative Scheme)

குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் சிட்கோ தொழிற்பேட்டையில் அமைந்துள்ள நிலம் மற்றும் கட்டிடங்களை வாங்குவதற்கு தேவையான நிதி உதவி அளித்திடும்

வகையில், சிட்கோ நிறுவனத்துடன் ஓர் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. இதன் பொருட்டு தொழில் உள்கட்டமைப்பு முன்னெடுப்பு திட்டம் என்ற சிறப்பு திட்டத்தை இந்நிறுவனம் செயல்படுத்தி உள்ளது. இத்திட்டத்தின் மூலம் குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் தங்களது தொழில் அபிவிருத்திக்காக, சிட்கோ / சிப்காட் நிறுவனங்களிடமிருந்து தொழில்கூடங்களுக்கான நிலம் வாங்க கடன் உதவி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் 2022-23ஆம் நிதியாண்டில், 87 தொழில் நிறுவனங்களுக்கு ரூபாய் 121.95 கோடி கடன் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

### 4.2.11 தொடக்க நிலை நிறுவன திட்டம் (Start Ups scheme)

புதிய தொழில் நுட்பத்தை ஊக்குவிக்கும் தமிழ்நாடு அரசின் குறிக்கோளுக்கு இணங்க, இந்நிறுவனம் இரண்டு புதிய திட்டங்களை இவ்வாண்டு அறிமுகப்படுத்தியுள்ளது. அதன்படி, ஆரம்ப நிலையில் உள்ள நிறுவனங்களுக்கு நிதியளிக்க ப்ரோட்டோ லோன் என்ற திட்டமும், ஆரம்ப நிலையை கடந்து வணிகரீதியான செயல்பாட்டுக்கு தேவையான, அசையா சொத்துக்கள் மற்றும் நடைமுறை மூலதனத்திற்கு தேவையான நிதியை

வழங்குவதற்காக, ப்ரோபெல் லோன் என்ற திட்டமும் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது.

### 4.2.12 காற்றாலைத் / சூரிய சக்தி திட்டம் (Wind / Solar Power Project)

தொழில் நிறுவனங்கள் தங்களுக்கு தேவையான மின்சாரத்தை தாங்களே உற்பத்தி செய்யும் பொருட்டு காற்றாலை மற்றும் சூரிய சக்தி மூலம் மின்சாரம் உற்பத்தி செய்து தங்களது சுய தேவைகளுக்கு பயன்படுத்திக் கொள்வதோடு அல்லாமல் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திடம் விற்பனை செய்யவும் இத்திட்டத்தில் நிதியுதவி வழங்கப்படுகின்றது. இத்திட்டத்தின் கீழ் நிலமதிப்பிற்கும், காற்றாலை / சூரிய சக்தி சார் மின் உற்பத்தி கருவிகள் வாங்குவதற்கும், காற்றாலைகள் நிறுவுவதற்கும் கடன் வழங்கப்படுகிறது

### 4.2.13 பட்டி நிதியுதவித் திட்டம் (Bill Financing Scheme)

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், தமிழ்நாடு மின் தொடரமைப்பு கழக நிறுவனம், தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம், சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் வாரியம் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி ஆகியவற்றின் வழங்குநர்கள் / ஒப்பந்ததாரர்களுக்கு

பட்டி நிதியுதவி திட்டத்தின் மூலம் பிணையில்லா கடன் உதவி வழங்கப்பட்டு வருகிறது. 2022–23 நிதியாண்டில், 108 ஒப்பந்ததாரர்களுக்கு ரூபாய் 576.04 கோடி நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது.

## 4.3 மானியம்

தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் மூலம் கடன் பெற்று நிறுவப்பட்ட நிறுவனங்களுக்கு, இக்கழகம் அரசு வழங்கும் பல்வேறு மானியங்களுக்கான முகவராக செயல்பட்டு வருகிறது:

### 4.3.1 பின்தங்கிய பகுதிகள் மற்றும் சிறப்பு வகை உற்பத்தி நிறுவனங்களுக்கான சிறப்பு மூலதன மானியம்

மாநிலத்தின் பின்தங்கிய ஒன்றியங்கள் மற்றும் சிப்காட் / சிட்கோ தொழிற்பேட்டைகளில் அமைக்கப்படும் நிறுவனங்களுக்கும், முன்னுரிமை உற்பத்தி நிறுவனங்களுக்கும், இயந்திர மதிப்பீட்டில் 25 சதவீதம், அதிகபட்சமாக ரூபாய் 150 இலட்சம் வரை மானியமாக வழங்கப்படுகிறது. 2022–23ஆம் நிதியாண்டில், இக்கழகம் மாநில மூலதன மானியமாக (State Capital Subsidy) 30.48 கோடி ரூபாய் 188 பயனாளிகளுக்கு வழங்கியுள்ளது.

### 4.3.2 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு வட்டி மானிய திட்டம்

தமிழ்நாடு தொழில் முதலீட்டு கழகத்திடமிருந்து கடன் பெறும் குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் குறைந்த வட்டி விகிதத்தில் கடன் பெறும் பொருட்டு 3% வட்டி மானிய திட்டத்தை, தமிழ்நாடு அரசு 2012ஆம் ஆண்டு முதல் அமுல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின்கீழ், இந்நிறுவனம் இதுவரை ரூபாய் 2763.51 கோடி கடன் அனுமதி அளித்துள்ளது. இதற்கான வட்டி மானியமாக மாநில அரசு 31.03.2023 வரை ரூபாய் 142.42 கோடி வழங்கியுள்ளது.

இதனைத் தொடர்ந்து 2019ஆம் ஆண்டில் குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களுக்கு வட்டி மானியத்தை 3%லிருந்து 6% ஆக உயர்த்தி 01.04.2019 முதல் அமுல்படுத்த மாநில அரசு ஆணை பிறப்பித்தது. இதன்படி 6சதவிகித வட்டி மானிய சலுகையின் கீழ் இதுவரை ரூபாய் 1569.33 கோடி கடன் அனுமதி வழங்கப்பட்டு இதற்கான வட்டி மானியமாக 31.03.2023 வரை ரூபாய் 55.95 கோடி தமிழக அரசு வழங்கியுள்ளது.

இந்த வட்டி மானியத்திட்டம், அரசால் ஒவ்வொரு மூன்றாண்டிற்கும் நீட்டித்து வழங்கப்பட்டு வந்தது.

இந்நிலையில், தற்போது இத்திட்டம் 01.04.2022 முதல் 31.03.2023 வரை ஓராண்டிற்கு சில நிபந்தனைகளுடன் நீட்டிக்கப்பட்டுள்ளது.

## 4.4. செயல்பாடு

இக்கழகத்தின் கடந்த ஐந்து ஆண்டுகளுக்கான செயல்பாடுகள் குறித்த விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:–

**(ரூபாய் கோடியில்)**

| விபரம் | 2018–19 | 2019–20 | 2020–21 | 2021–22 | 2022–23 (தற்காலிகம்) |
|---|---|---|---|---|---|
| கடன் அனுமதி தொகை | 697.43 | 858.86 | 1305.33 | 1802.23 | 1774.70 |
| கடன் வழங்கிய தொகை | 512.16 | 352.61 | 849.78 | 1520.36 | 1705.57 |
| கடன் நிலுவைத் தொகை | 1097.41 | 1047.37 | 1298.23 | 2032.03 | 2526.77 |
| மொத்த வாராகடன் (%) | 6.17% | 8.71% | 1.91% | 1.93% | 1.95% |
| இயக்க இலாபம் | 76.25 | 71.38 | 109.08 | 122.70 | 130.00 |
| நிகர இலாபம் | 36.53 | 30.19 | 50.44 | 82.94 | 105.00 |

## 4.5 2023–24ஆம் ஆண்டுகளுக்கான இலக்கு

(ரூபாய் கோடியில்)

| வருடம் | கடன் அனுமதி தொகை | வழங்கக்கூடிய தொகை | கடன் தொகுப்பு |
|---|---|---|---|
| 2023–24 | 2244 | 1740 | 3192 |

## 4.6 டிக் – தமிழ்நாட்டின் வளர்ச்சி ஊக்கி.

டிக் 1.0 என்ற அளவில், கடந்த 73 ஆண்டுகளாக தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம், தமிழகத்தின் தொழில் வளர்ச்சிக்கு முக்கிய பங்கு வகித்து இதுவரை 1,30,000–க்கும் மேற்பட்ட தொழில்முனைவோர்களின் கனவுகளை நனவாக்கி உள்ளது.

தற்போது இந்நிறுவனம் டிக் 2.0 எனும் சீர் மாற்றத்துடன் மாநிலத்தின் வளர்ச்சி ஊக்கியாக தன்னை நிலை நிறுத்தி, தொழில்நுட்பத்தை மேம்படுத்தவும் மாநிலத்தின் தொழில் வளர்ச்சியில் தொடர்புடைய பல்வேறு நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்களையும் செய்துள்ளது. இதன்மூலம் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் தற்போது வளர்ந்து வரும் தொழில்களை அடையாளம் காணவும், தற்போதைய நவீன

தொழில்நுட்பத்தை பின்பற்றவும, புதிய கண்டுபிடிப்புகளை ஊக்குவிக்கவும், உரிய நேரத்தில் நடைமுறை மூலதனம் பெறுவதை உறுதி செய்யவும் வழிவகை செய்யப்படுகிறது.

இந்நிறுவனத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குனர் அவர்கள், மாநில அளவிலான நிதி மற்றும் முதலீட்டு நிறுவனங்களின் தேசிய கூட்டமைப்பாகிய, இந்திய மாநில தொழில் வளர்ச்சி மற்றும் முதலீட்டு கழகங்களின் கவுன்சிலின் (COSIDICI) தலைவராக 2023–24 நிதியாண்டிற்கு இரண்டாவது தடவையாக ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். இந்த வாய்ப்பின் மூலமாக குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்களின் திறமையை வெளிப்படுத்தவும், தற்போதைய தொழில்நுட்பத்தை பின்பற்றுவதற்கும் ஏதுவாக அமையும். மேலும் தேசிய அளவில் தமிழகத்தை ஒரு சிந்தனை மற்றும் தொழில்நுட்ப தலைமை மாநிலமாக வெளிப்படுத்துவதுடன் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் தொலைநோக்கு பார்வையான 1 ட்ரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதாரத்தை 2030ஆம் ஆண்டுக்குள் அடைவதற்கு உறுதுணையாக இருக்கும்.

இந்நிறுவனம், ஒவ்வொரு ஆண்டும், கிளை மற்றும் மண்டல அளவில் பல்வேறு தொழிற்சங்கங்களின் ஒத்துழைப்புடன், தொழிற்கடன் விழாக்கள் நடத்தி வருகிறது. இதன் மூலம் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு இக்கழகத்தால் வழங்கப்பட்டு வரும் கடன் திட்டங்கள், மாநில மற்றும் ஒன்றிய அரசுகளால் வழங்கப்படும் சலுகைகள் பற்றிய விபரங்கள் எடுத்துரைக்கப்பட்டு நிறைய பயனாளிகளை இந்நிறுவனம் ஈர்த்து வருகிறது.

**Blank**

## 5. தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம்

தமிழ்நாடு அரசு, தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தை, கரும்புச் சக்கையை முக்கிய மூலப்பொருளாக கொண்டு செய்தித்தாள், அச்சு மற்றும் எழுது காகிதம் தயாரிக்க, 1979ஆம் ஆண்டு நிறுவியது. இந்த ஆலையின் உற்பத்தி, ஆண்டொன்றுக்கு 90,000 டன் காகித உற்பத்தி திறனுடன், 1985ஆம் ஆண்டு கரூர் மாவட்டம் புகளூரில் துவக்கப்பட்டது (அலகு–I). தற்போது ஆலையின் காகித உற்பத்தி திறன், நான்கு கட்டங்களில் ஆண்டொன்றுக்கு 4 இலட்சம் டன்னாக அதிகரிக்கப்பட்டுள்ளது. மேலும் ஆலையின் செயல்முறை மேம்பாட்டின் மூலமாக உற்பத்தி திறன் ஆண்டொன்றுக்கு 4.4 இலட்சம் டன்னாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இதற்கேற்ப ஆலையின் காகித கூழ் உற்பத்தியும், நாளொன்றுக்கு 250 டன்னிலிருந்து, பல்வேறு கட்டங்களில் 1,180 டன் உற்பத்தி திறனுடையதாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இந்நிறுவனம், ஆண்டொன்றுக்கு 2 இலட்சம் டன் திறன் கொண்ட, இருபுறமும் மேற்பூச்சு செய்யப்பட்ட அடுக்கு காகித அட்டை, தயாரிக்கும் ஆலையை (அலகு–II) 2016ஆம் ஆண்டு, திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறை வட்டம்,

மொண்டிப்பட்டி கிராமத்தில் நிறுவியது. இந்நிறுவனத்தின் காகிதம் மற்றும் அடுக்கு காகித அட்டையின் மொத்த உற்பத்தி ஆண்டொன்றுக்கு 6,40,000 டன் ஆகும். இதன் மூலம், இந்திய அளவில் மொத்த உற்பத்தியில் தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம், மூன்றாம் இடம் வகிக்கிறது.

பயனாளர்களின் தேவைகளுக்கேற்ப உயர்ரக காகிதங்கள் மற்றும் அடுக்கு காகித அட்டைகளை இந்நிறுவனம் தயாரித்து வருகிறது. இந்நிறுவனம், தனது உற்பத்திப் பொருள்களை, இந்தியா முழுவதும் விற்பனை செய்து வருவதோடு, தனது காகித உற்பத்தியில் சுமார் 20 சதவீதத்தை, உலகளவில் சுமார் 35 நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து வருகிறது. இந்நிறுவனம் அச்சு மற்றும் எழுது காகிதம் ஏற்றுமதியில், இந்திய அளவில் முதன்மையாகத் திகழ்கிறது.

காகித தயாரிப்பின் போது உருவாகும் திடக் கழிவுகளான சுண்ணாம்பு மற்றும் எரிசாம்பலைப் பயன்படுத்தி, இந்நிறுவனம் நாளொன்றுக்கு 900 டன் உற்பத்தித் திறன் கொண்ட, சிமெண்ட் தொழிற்சாலையை நிறுவியுள்ளது.

தனது மரக்கூழ் உற்பத்திக்கு தேவைப்படும், கூழ் மரங்களின் சுய தேவையை பூர்த்தி செய்வதற்கு, பண்ணைக் காடுகள் மற்றும் மூலதனக் காடுகள் வளர்ப்பு திட்டங்களை, இந்நிறுவனம் துவக்கியுள்ளது. இந்த திட்டங்கள் விவசாயிகளின் பங்கேற்புடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டங்களின் மூலம் 2022ஆம் ஆண்டு, நவம்பர் மாதம் 30 வது நாளது வரையில், தமிழகம் முழுவதும், 2,25,632 ஏக்கர் நிலப்பரப்பில் கூழ் மரங்கள் நடவு செய்யப்பட்டுள்ளன. மேலும் இத்திட்டத்தில் 43,943 விவசாயிகள் பங்கு பெற்றுள்ளார்கள்.

இந்நிறுவனம், மின் உற்பத்தியில் தன்னிறைவினைப் பெற்றுள்ளது. ஆலையின் சுய தேவைக்காக, 103.62 மெகாவாட் திறன் கொண்ட மின் உற்பத்திப் பிரிவினை காகித ஆலையின் வளாகத்திலும் மற்றும் 50 மெகாவாட் மின் உற்பத்திப் பிரிவினை அடுக்கு காகித அட்டை வளாகத்திலும் நிறுவியுள்ளது. மேலும், 35.5 மெகாவாட் திறன் கொண்ட இரண்டு காற்றாலை பிரிவுகளை திருநெல்வேலி மாவட்டத்தில் நிறுவியுள்ளது. ஆலையின் தேவைக்குப் பின் மீதமுள்ள உபரி மின்சாரம் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

இந்நிறுவனத்தில், தமிழக அரசு 35.32 விழுக்காடு பங்கும், தமிழக அரசு சார்ந்த நிறுவனங்கள் 4.28 விழுக்காடு பங்கும் வைத்துள்ளன. மீதமுள்ள பங்குகள் வெளிநாட்டு நிதி முதலீட்டாளர்கள், இந்திய நிதி நிறுவனங்கள், பரஸ்பரநிதிகள், கூட்டாண்மை அமைப்புகள், காப்பீட்டு நிறுவனங்கள் மற்றும் பொது மக்கள் வசம் உள்ளது.

**5.1 உற்பத்தி மற்றும் பயன்பாட்டளவு** (டிசம்பர் 31, 2022இல் முடிவடைந்த ஒன்பது மாதங்களுக்கானது)

| | | |
|---|---|---|
| காகித உற்பத்தி | : | 3,11,833 டன் |
| பயன்பாட்டளவு | : | 104 சதவீதம் |
| காகித அட்டை உற்பத்தி | : | 1,27,592 டன் |
| பயன்பாட்டளவு | : | 85 சதவீதம் |
| சிமெண்ட் உற்பத்தி | : | 1,72,708 டன் |
| பயன்பாட்டளவு | : | 77.53 சதவீதம் |

2022–23ஆம் நிதியாண்டில் டிசம்பர் 31, 2022 இல் முடிவடைந்த ஒன்பது மாதங்களுக்கான காலத்தில் 3,03,821 டன் காகிதம் மற்றும் 1,26,205 டன் காகித அட்டையும் விற்பனை செய்துள்ளது.

## 5.2 ஆண்டுக்கான மொத்த வருவாய் மற்றும் இலாபம்

2022–23ஆம் நிதி ஆண்டில் டிசம்பர் 31, 2022 இல் முடிவடைந்த ஒன்பது மாதங்களுக்கான மொத்த வருவாய் ரூ.3785 கோடியாகும். டிசம்பர் 31, 2022 இல் முடிவடைந்த ஒன்பது மாதங்களுக்கான வரிக்கு முந்தைய இலாபம் ரூ.440 கோடி மற்றும் வரிக்குப் பிந்தைய லாபம் ரூ.285 கோடியாகும். இந்நிறுவனத்தின் 2021–2022 நிதியாண்டில் வரிக்குப் பிந்தைய இலாபம் ரூ.14.32 கோடியாகும்.

## 5.3 ஈவுத்தொகை

இந்நிறுவனம் 2020–21ஆம் நிதி ஆண்டிற்கான ஈவுத் தொகையாக, 40 விழுக்காடு, பங்குதாரர்களுக்கு வழங்கியுள்ளது. இதன்படி, இந்நிறுவனம், 2021–22ஆம் ஆண்டு, தமிழக அரசுக்கு ஈவுத் தொகையாக ரூ.9.78 கோடியினை வழங்கியுள்ளது.

## 5.4 ஏற்றுமதி

2022–23ஆம் நிதியாண்டில் டிசம்பர் 31, 2022ல் முடிவடைந்த ஒன்பது மாதங்களில், இந்நிறுவனம் 55,264 டன் காகிதத்தையும் மற்றும் 6,303 டன் காகித அட்டைகளை ஏற்றுமதி செய்துள்ளது.

## 5.5 வேலை வாய்ப்பு

தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் சுமார் 2440 நபர்களுக்கு நேரடி வேலை வாய்ப்பினையும், ஏறத்தாழ 3000 நபர்களுக்கு மறைமுக வேலை வாய்ப்பினையும் அளித்து வருகிறது.

## 5.6 செயல்படுத்தப்பட்ட திட்டங்கள் –

### 5.6.1 நிறுவனத்தின் அலகு#2 – ஆலை விரிவாக்கத் திட்டம்

தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம், அலகு#2 திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறை வட்டம், மொண்டிப்பட்டி கிராமத்தில் உள்ள அடுக்கு காகித அட்டை ஆலையின் உற்பத்தித் திறனை அதிகரிக்க, ஆலை விரிவாக்க திட்டத்தை ரூபாய் 2520 கோடி முதலீட்டில் இரண்டு கட்டங்களாக செயல்படுத்த திட்டமிட்டது. முதல் கட்டமாக ரூபாய் 1,385 கோடி முதலீட்டில், நாள் ஒன்றுக்கு 400 மெட்ரிக் டன் திறன் கொண்ட மரக்கூழ் தயாரிக்கும் பிரிவு, இரசாயன மீட்பு கொதிகலன் பிரிவு மற்றும் 20 மெகா வாட் திறன் கொண்ட மின் ஆக்கி பிரிவு ஆகியவைகளாகும். இயந்திரங்கள் நிறுவும் பணிகள் நிறைவுப் பெற்று, மரக்கூழ் தயாரிக்கும் உற்பத்திக்கான ஓட்டங்கள் துவக்கப்பட்டு, நடைப்பெற்று வருகின்றன.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 29.12.2022 அன்று தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் அலகு 2 ஆலை விரிவாக்க திட்டத்தின் முதற்கட்ட திட்டத்தினை துவக்கி வைத்தார்கள்.

புதிய காகித அட்டை தயாரிக்கும் இயந்திரம் / புதிய காகிதம் தயாரிக்கும் இயந்திரம் மற்றும் மின்ஆக்கியை நிறுவும் திட்டம் ஆகியவைகள், நிதி ஆதாரங்களைப் பெற்ற பின் செயல்படுத்தப்படும்.

இத்திட்டத்தின் மூலம், சுமார் 2000 நபர்களுக்கு நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்பு கிடைக்கும்.

## 5.7 சமூக நல நடவடிக்கைகள்

- நிறுவனத்தின் முந்தைய 3 ஆண்டுகளின் வரிக்கு முன் வரக்கூடிய சராசரி இலாபத்தில் சுமார் 2 சதவீத இலாபத் தொகையினை சமுதாய நலப்பணிகளுக்காக நடப்பு ஆண்டில் செலவழித்து வருகிறது. கல்வி, சுகாதாரம், கட்டுமானம், பொருளாதார மேம்பாடு, சுற்றுச்சூழல், குடிநீர் வசதி, கலாச்சாரம் மற்றும் மரபுகள் மேம்பாடு போன்ற சமுதாயப் பணிகளை, தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம், தவறாமல் செயல்படுத்தி வருகிறது.

- இந்நிறுவனம் 2021–22ல் பல்வேறு சமுதாய நடவடிக்கைகளுக்காக ரூ.3.48 கோடி செலவழித்து உள்ளது. 2022–23ஆம் ஆண்டில் சமுதாய நலப்பணிகளுக்காக சுமார் ரூ.2.50 கோடி செலவழிக்க இலக்கு வைத்துள்ளது.

## 5.8 சுற்றுச்சூழல் பொறுப்பு

இந்நிறுவனம் 2021–22ல் பல்வேறு சுற்றுச்சூழல் நடவடிக்கைகளுக்காக கல்வி, சுகாதாரம், பொருளாதார மேம்பாடு, கலாச்சாரம், மரங்கள் நடவு போன்ற பணிகளுக்காக ரூ.37 இலட்சம் செலவழித்து உள்ளது. இந்நிறுவனம் 2022–23ஆம் ஆண்டில் ரூபாய் 42 இலட்சம் செலவிட்டுள்ளது.

## 5.9 விருதுகள்

- இயக்குநர்கள் இன்ஸ்டிட்யூட், புது டெல்லி (Institute of Directors, New Delhi), தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்திற்கு, சமூகநல நடவடிக்கைகளுக்கான, தங்க மயில் தேசிய விருதை ஜூன் 10, 2021ல், வழங்கியுள்ளது.

- தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்திற்கு, சமுதாய நலப்பணிகளில்,

கொரோனா பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கான பிரிவில், '8வது CSR இந்திய விருது 2021' என்ற தேசிய விருதை, கிரீன் டெக் பவுண்டேசன் நிறுவனம்,, புது டெல்லி, நவம்பர் 2021ல், வழங்கி உள்ளது.

- இந்திய பொறியாளர்கள் நிறுவனம், கொல்கத்தா, தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்திற்கு, "சிறந்த நிறுவனத்திற்கான சிறப்பு விருது 2021" என்ற விருதை டிசம்பர் 2021ல் வழங்கியுள்ளது.

- தமிழ்நாடு மாசுகட்டுப்பாட்டு வாரியம், தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின், அலகு–2க்கு, 2021ஆம் ஆண்டிற்கான பசுமை முதன்மையாளர் விருதினை, ஜூன் 2022 இல் வழங்கியுள்ளது. இந்த விருது மொண்டிப்பட்டி கிராமத்தில் சுமார் 273 ஹெக்டர் நிலப்பரப்பில் உருவாக்கியுள்ள பல்லுயிர் பாதுகாப்பு மண்டலம் மற்றும் அழிந்து வரும் இனங்களை பாதுகாத்தல் குறிப்பாக அரிய வகை இனமான சாம்பல் நிற தேவாங்குகளை (Slender Loris) பாதுகாத்து வருவதற்காக வழங்கப்பட்டுள்ளது.

- 22வது ஆண்டிற்கான தேசிய விருதை "பசுமை தொழில்நுட்ப சுற்றுச்சூழல் விருது 2022, புது டெல்லி, தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்திற்கு, சுற்றுச்சூழல் பாதுகாத்தல் என்ற தலைப்பின் கீழ், இந்த தேசிய முதன்மையாளர் விருதை, கவுகாத்தியில் ஆகஸ்ட் 2022ல், வழங்கியுள்ளது.

- 16ஆவது சிறந்த நீர் மேலாண்மை மற்றும் திறமையாக பயன்படுத்தி செயல்படுத்தியமைக்கான தேசிய விருது 2022, என்ற விருதை, இந்திய தொழில் கூட்டமைப்பு மற்றும் டிரிவேனி நீர் மேலாண்மை நிறுவனம், புது டெல்லியில் 2022ஆம் ஆண்டிற்கான விருதை" தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்திற்கு செப்டம்பர் 2022ல் வழங்கியுள்ளது.

- இந்திய தொழில் கூட்டமைப்பு சிறந்த சுற்றுப்புற திட்டங்களை செயல்படுத்தியமைக்காக "சிறந்த புதுமையான உத்திகளை செயல்படுத்தி சுற்றுச்சூழல் பாதுகாத்தல் நடைமுறைகளுக்கான

2022ஆம் ஆண்டிற்கான விருது" தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்திற்கு (அலகு 2) செப்டம்பர் 2022ல் வழங்கப்பட்டது.

- டிசம்பர் 07, 2022 அன்று சென்னையில் நடந்த உலக உற்பத்திக் காங்கிரஸ் மற்றும் விருதுகள், 2022ஆம் ஆண்டிற்கான சிறந்த உற்பத்தி நிறுவன விருது, தமிழ்நாடு, என்ற விருதை தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்திற்கு வழங்கியது.

Blank



மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 29.12.2022 அன்று தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் அலகு-2 இல் மரக்கூழ் தயாரிக்கும் ஆலைத் திட்டத்தை தொடங்கி வைத்தார்கள்

Blank

## 6. தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம்

தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம் (டான்செம்) 1976ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 11ஆம் நாள் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி கழகத்திற்கு (டிட்கோ) முற்றிலும் சொந்தமான ஒரு துணை நிறுவனமாக துவக்கப்பட்டது. டிட்கோ நிறுவனம் அதனிடம் வைத்திருந்த மூலதனப் பங்குகளை அரசுக்கு மாற்றிவிட்டதை தொடர்ந்து, 31.12.1994 முதல் தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம் அரசு நிறுவனமாக செயல்பட்டு வருகிறது. தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம், விருதுநகர் மாவட்டத்தில் உள்ள ஆலங்குளத்தில் ஆண்டு ஒன்றிற்கு 2 இலட்சம் மெ.டன் உற்பத்தித்திறன் கொண்ட சிமெண்ட் ஆலை ஒன்றையும், அரியலூர் மாவட்டத்தில் ஆண்டு ஒன்றிற்கு 5 இலட்சம் மெ.டன் உற்பத்தித்திறன் கொண்ட சிமெண்ட் ஆலை ஒன்றையும் இயக்கி வந்தது மேலும், டான்செம் ஆண்டு ஒன்றுக்கு 10 இலட்சம் மெ.டன் உற்பத்தித்திறன் கொண்ட புதிய நவீன சிமெண்ட் ஆலை ஒன்றை அரியலூரில் நிறுவி அவ்வாலையின் உற்பத்தி 2019 ஆண்டு தொடங்கப்பட்டது. அதன்மூலம் டான்செம் நிறுவனத்தின் மொத்த சிமெண்ட் உற்பத்தித் திறன் உயர்ந்துள்ளது.

டான்செம் நிறுவனத்தின் சிமெண்ட் ஆலைகள் உற்பத்தி துறையில் மிகவும் பின்தங்கிய மாவட்டங்களான அரியலூர் மற்றும் விருதுநகரில் அமைந்துள்ளதால், அப்பகுதியில் உள்ள மக்களுக்கு பெருமளவில் வேலை வாய்ப்புகளை வழங்கி வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. தற்பொழுது டான்செம் 1170 நபர்களுக்கு நேரடி வேலை வாய்ப்புகளையும் 3000 நபர்களுக்கு மறைமுக வேலை வாய்ப்புகளையும் வழங்கி வருகிறது. மேலும், டான்செம் அம்மா சிமெண்ட் விற்பனை திட்டத்தினை மாநில முகமையாக இருந்து செயல்படுத்தி வருகிறது.

டான்செம் வெளிச்சந்தைகளில் மற்ற தனியார் நிறுவன சிமெண்ட் விலையை விட குறைந்த விலையில் சிமெண்ட் விற்பனை செய்து வருகிறது. இது சிமெண்ட் விலையை கட்டுக்குள் வைக்க காரணியாக உள்ளது. தற்பொழுது டான்செம் "வலிமை" என்ற உயர்தர சிமெண்ட் மற்றும் "அரசு" என்ற இரண்டு ப்ராண்ட் சிமெண்டினை விற்பனை செய்து வருகிறது.

## 6.1 வெளிச்சந்தையில் சிமெண்ட் விற்பனை

டான்செம் 2018-19, 2019-20, 2020-21, நிதியாண்டுகளில் வெளிச்சந்தையில் 1.42 இலட்சம்

மெ.டன், 1.22 இலட்சம் மெ.டன் மற்றும் 4.71 இலட்சம் மெ.டன் சிமெண்ட் விற்பனை செய்துள்ளது, மேலும் 2021 – 2022ஆம் ஆண்டில் 12.23 இலட்சம் மெ.டன் மற்றும் 2022–2023 ஆம் நிதியாண்டில் 13.18 இலட்சம் மெ.டன் என்ற அளவிற்கு கணிசமாக வெளிச்சந்தையில் சிமெண்ட் விற்பனையை அதிகரித்துள்ளது. டான்செம் வெளிச்சந்தையில் தனியார் சிமெண்ட் நிறுவனங்களைவிட குறைவான விலையில் சிமெண்ட் விற்பனை செய்து வருவதால், வெளிச்சந்தையில் சிமெண்ட் விலையேற்றத்தை கட்டுக்குள் வைப்பதில் டான்செம் முக்கிய காரணியாக இருக்கிறது. சுமார் 8% சந்தைப் பங்கைக் கொண்ட தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனத்தின் இருப்பு, சந்தையில் சிமென்ட் விலையினைக் கட்டுப்படுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கிறது.ஜூன் 2021ல் PPC மூட்டைரூ.470/– முதல் ரூ.490/– வரை விற்பனை செய்து வந்த தனியார் சிமெண்ட் உற்பத்தியாளர்கள் வெளிச்சந்தையில் டான்செம் சிமெண்ட் விற்பனை அதிகரிப்பின் காரணமாக தற்பொழுது விலையைக் குறைத்துள்ளனர். இதனால் பொதுமக்கள் பெருமளவில் பயனடைந்துள்ளனர்.

டான்செம் விற்பனையை அதிகரிக்கவும் மற்றும் சந்தையில் தனது பங்களிப்பை மேம்படுத்தவும்

கீழ்காணும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன:

- 2022-2023ஆம் ஆண்டில், கூடுதலாக 415 விநியோகஸ்தர்கள் / பொறியாளர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களை நியமித்து செயல்படுத்துதல்.
- வலிமை சிமெண்டின் விற்பனையை மாநிலம் முழுவதும் கணிசமாக அதிகரித்தல்.
- சிமெண்ட் விற்பனை முகவர்களை ஊக்கப்படுத்துவதற்கு சந்தை நிலவரத்திற்கேற்ற விலை சலுகைகளை மாற்றியமைக்கும் முறையை நடைமுறைப்படுத்துதல்.

## 6.2 வலிமை சிமெண்ட் (PPC)

டான்செம் நிறுவனத்தின் உற்பத்தி செய்யப்பட்ட முதல்தர சிமெண்ட் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 16.11.2021 அன்று "வலிமை சிமெண்ட்" என்ற பெயரில் பொது மக்களுக்கு குறைந்த விலையில் கிடைக்க அறிமுகப்படுத்தப்பட்டது. வலிமை சிமெண்ட் மேம்படுத்தப்பட்ட கையாளும் திறன், நீடித்த

பயன்பாட்டு காலம் உழைப்பு மற்றும் மேம்படுத்தப்பட்ட கட்டுறுதியும் கொண்டுள்ளது. மேலும் குறைவான இறுகும் தன்மை மற்றும் குளோரைடு சல்பேட் மற்றும் இதர வேதிப்பொருள்களிலிருந்து கூடுதல் பாதுகாப்பு அளிக்கிறது.

## 6.3 வலிமை சிமெண்ட் விற்பனை

வெளிச்சந்தையில் வலிமை சிமெண்டின் தனித்துவம் மற்றும் பொதுமக்களின் சிமெண்ட் தேவையை பூர்த்தி செய்யும் நோக்கம் பற்றி தெரிவிக்கும் வகையில் மாநிலம் முழுவதும் பல்வேறு விளம்பர நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது அவையாவன:

- சுவர் விளம்பரம்
- வலிமை சிமெண்ட் விளம்பரக் குடைகள் தெரு வியாபாரிகளுக்கு விநியோகம் செய்தல்
- விளம்பரத்திற்காக வர்த்தக கண்காட்சிகளில் பங்கு பெறுதல்
- விற்பனை கடைகளில் விளம்பரபலகை
- துணை விற்பனையாளர்களுக்கு சிறு விளம்பர பலகை

- விற்பனையாளர்களுக்கு வலிமை விளம்பர சுவரொட்டிகள்
- தார்ப்பாய் விளம்பர ஒட்டிகள்
- வலிமை விளம்பர கையேடுகள்
- வானொலி/பண்பலை மற்றும் திரையரங்கங்கள் மூலம் விளம்பரம் செய்தல்
- கொத்தனார் மற்றும் கட்டிட பொறியாளர் கூட்டம்
- விற்பனையாளர் கூட்டம்
- கட்டட நிறுவனங்களின் கண்காட்சி
- LED திரை (சதுரங்க ஒலிம்பியாட் /புத்தக கண்காட்சி)
- சிமெண்ட் விற்பனையகம் தொடங்க தொடர்புகொள்ள கட்டணமில்லா தொலைபேசி எண்கள்
    - 1800 599 7635 (பதிவு அலுவலகம்)
    - 1800 123 4847 (அரியலூர் சிமெண்ட் ஆலை)
    - 1800 425 7898 (ஆலங்குளம் சிமெண்ட் ஆலை)

வலிமை சிமெண்ட் விற்பனை 16.11.2021லிருந்து தொடங்கியுள்ளது. டான்செம் நிறுவனம் 2022-2023ஆம் நிதியாண்டில் 10,01,049 மெட்ரிக் டன் விற்பனை செய்துள்ளது.

**6.4 அரசு துறைகளுக்கு போர்ட்லேண்ட் பொசலோனா சிமெண்ட் (PPC) விற்பனை**

டான்செம் நிறுவனம் பல்வேறு அரசுத்துறைகளின் சிமெண்ட் தேவையை பூர்த்தி செய்வதோடு, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறைகளுக்கு தரமான சிமெண்டை நியாயமான விலையில் கீழ்கண்டவாறு வழங்கி வருகிறது.

| ஆண்டு | PPC சிமெண்ட் வழங்கப்பட்ட அளவு (மெ. டன்னில்) |
|---|---|
| 2018-19 | 4,06,918 |
| 2019-20 | 3,39,436 |
| 2020-21 | 3,36,575 |
| 2021-22 | 2,61,572 |
| 2022-23 | 4,79,128 |

**6.5 சுரங்க நிலை**

டான்செம் ஆலைகளுக்கு தடையின்றி சுண்ணாம்புக்கல் வழங்குவதை உறுதி செய்வதற்கான

நடவடிக்கையாக, பின்வரும் நீண்ட கால திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன.

- டான்செம் நிறுவனத்திற்கு சொந்தமான சுண்ணாம்புக்கல் சுரங்க குத்தகை 1513.33 ஹெக்டேர் நிலப்பரப்பிற்கு பெறப்பட்டுள்ளது, இதில் அரியலூர் சிமெண்ட் ஆலைக்கு சொந்தமாக 611.57 ஹெக்டேர் மற்றும் ஆலங்குளம் சிமெண்ட் ஆலைக்கு சொந்தமாக 901.76 ஹெக்டேர் நிலமும் உள்ளது.

- அரியலூர் ஆலையில் 110.68.5 ஹெக்டேர் பரப்பளவு கொண்ட ஆனந்தவாடி சுரங்கத்தின் சுண்ணாம்புக்கல் உற்பத்தியை வருடத்திற்கு 2.6 இலட்சம் டன்னில் இருந்து 15 இலட்சம் டன்னாக உயர்த்துவதற்கு சுற்றுச்சூழல் அனுமதி பெறப்பட்டுள்ளது.

- 194.16.5 ஹெக்டேர் பரப்பளவு கொண்ட கல்லங்குறிச்சி சுரங்கத்தில் இருந்து வருடத்திற்கு 13.40 இலட்சம் டன் உற்பத்தி செய்வதற்கு சுற்றுச்சூழல் அனுமதி பெறப்பட்டுள்ளது.

- அரியலூர் ஆலையில் 306.72.5 ஹெக்டேர் பரப்பளவு கொண்ட சுரங்க குத்தகைக்கும் மற்றும் ஆலங்குளம் ஆலையில் 901.76 ஹெக்டேர் பரப்பளவு உள்ள சுரங்க குத்தகைக்கும் சுற்றுச்சூழல் அனுமதி பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

- மேற்கூறிய சுரங்க குத்தகையில் 90.43.5 ஹெக்டேர் நிலப்பரப்பில் சுற்றுச்சூழல் அனுமதி வழங்குவதற்கு மாநில சுற்றுச்சுழல் மதிப்பீட்டு குழு, சென்னை பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. (அரியலூர் மற்றும் ஆலங்குளம்)

- அரியலூர் ஆலைக்கு சொந்தமான சுண்ணாம்புக்கல் சுரங்க நிலங்களில் துளையிட்டு மறு ஆய்வு செய்து 63.37 மில்லியன் டன் சுண்ணாம்புக்கல் இருப்பு உள்ளதாக உறுதி செய்யப்பட்டுள்ளது. இந்த சுண்ணாம்புக்கல் இருப்பு கொண்டு அடுத்து வரும் 39 ஆண்டுகளுக்கு அரியலூர் ஆலையை தடையின்றி இயக்குவதற்கு உறுதுணையாக இருக்கும்.

## 6.6 அம்மா சிமெண்ட் வழங்கும் திட்டம்

ஊரக, நகர்புற பகுதிகளில் சொந்த வீடு கட்டும் ஏழை மற்றும் நடுத்தர மக்களின் சிரமங்களை குறைக்கும் பொருட்டு "அம்மா சிமெண்ட் வழங்கும் திட்டம்" 05.01.2015 முதல் அறிமுகப்படுத்தப்பட்டது. இத் திட்டத்தின் கீழ் ஏழு தனியார் சிமெண்ட் உற்பத்தியாளர்களிடம் இருந்து சிமெண்ட் கொள்முதல் செய்யப்பட்டு, 11.12.2020 முதல் மூட்டை ஒன்றுக்கு ரூ.216/- என்ற விலையில் 501 கிட்டங்கிகள் மூலம் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. ஒரு பயனாளிக்கு 100 சதுர அடிக்கு 50 மூட்டைகள் வீதம் அதிகபட்சமாக 1500 சதுர அடிக்கு 750 மூட்டைகள் வரை வழங்கப்படுகிறது. புதிய வீடு கட்ட விண்ணப்பிக்கும் பயனாளியின் தனி நபர் ஆண்டு வருமானம் ரூ.3 இலட்சத்திற்குள் இருக்க வேண்டும். இருந்தபொழுதிலும் பிரதம மந்திரி குடியிருப்பு (ஊரகம் மற்றும் நகர்புறம்) திட்டத்திற்கு இது பொருந்தாது. மேலும் பழுது பார்த்தல் மற்றும் பராமரிப்பு பணிக்கு பயனாளர் ஒருவருக்கு 10 மூட்டைகள் முதல் 25 மூட்டைகள் வரை வழங்கப்பட்டு வருகிறது.

திட்டம் ஆரம்பம் முதல் அம்மா சிமெண்ட் 56,36,000.75 மெ.டன் (11,27,20,015 மூட்டைகள்) வரை விற்பனை செய்யப்பட்டு அத்துடன் 19,06,409

பயனாளிகள் அம்மா சிமெண்ட் விற்பனை திட்டத்தின் கீழ் பயனடைந்துள்ளனர்.

## 6.7 2023– 2024 ஆண்டிற்கான திட்டம்

### 6.7.1 பசுமை/கலப்பு சிமெண்ட் அறிமுகம் (Green/Composite Cement)

டான்செம் நிறுவனம் (2023–2024)ஆம் ஆண்டில் சுற்றுச்சூழல் பாதுகாப்பை கருத்தில் கொண்டு உலகளாவிய தேவையை பூர்த்தி செய்யவும் பசுமை / கலப்பு சிமெண்ட் (குறைந்த கார்பன் வெளியிடும் கலவை சிமெண்ட்) உற்பத்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. குறைந்த கார்பன் வெளியிடும் சிமெண்ட் உற்பத்தி காலத்தின் மிக முக்கிய தேவையாகும் மற்றும் தற்போதைய சூழ்நிலையில் குறைந்த கார்பன் வெளியிடும் சிமெண்ட் உற்பத்தி மிகவும் ஊக்குவிக்கப்படுகிறது. பசுமை/கலப்பு சிமெண்டைத் தயாரிப்பது சுற்றுச்சூழலில் $CO_2$ தாக்கத்தை குறைக்கும், தொழிற்சாலை கழிவுகளை பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படும் இவ்வகை சிமெண்ட் கிளிங்கர் தேவையை குறைக்கிறது, இதன் மூலம் வளங்களை சேமிக்க உதவுகிறது. மேலும் பசுமை/கலப்பு சிமெண்ட் கான்கிரீட்டிற்கு அதிக வலிமை அளிப்பதுடன் மற்றும் நீண்ட கால சிமெண்ட் உற்பத்தியை உறுதி செய்கிறது. பசுமை/கலப்பு

சிமெண்ட் என்பது கிளிங்கர் (35% முதல் 65%), சாம்பல் (15% முதல் 35%), இரும்பு உலை துகள்கள் (20% முதல் 50%) மற்றும் ஜிப்சம் (3% முதல் 5% வரை) ஆகியவற்றின் கலவையாகும்.

## 6.8 சாதனைகள்

டான்செம் ஆண்டு ஒன்றுக்கு 10 இலட்சம் மெ.டன் உற்பத்தித் திறன் கொண்ட புதிய நவீன சிமெண்ட் ஆலை ஒன்றை நிறுவியதன் மூலம், டான்செம் நிறுவனத்தின் உற்பத்தித் திறன் உயர்ந்துள்ளது. டான்செமின் சிமெண்ட் தற்பொழுது பெருமளவில் வெளிச்சந்தையில் விற்கப்பட்டு வரும் நிலையில் இந்த உற்பத்தி அதிகரிப்பின் மூலம் மக்களுக்கு நியாயமான விலையில் அதிக அளவில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. 2022-23ஆம் நிதியாண்டில் 18.06 இலட்சம் மெ.டன் உயர்தர சிமெண்ட் உற்பத்தி செய்யப்பட்டு, 17.97 இலட்சம் மெ.டன் சிமெண்ட் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

## 6.9 2022-23ஆம் ஆண்டின் செயல்திறன்

டான்செம் நிறுவனம், 2022 - 23ஆம் நிதியாண்டில் 18.06 இலட்சம் மெ.டன் சிமெண்ட் உற்பத்தி செய்து, 17.97 இலட்சம் மெ.டன் விற்பனை

செய்து, ரூ.154.65 கோடி (தற்காலிகம்) இலாபம் ஈட்டியுள்ளது .

2021–22 மற்றும் 2022–23ஆம் ஆண்டின் உற்பத்தி மற்றும் நிதிச் செயல்திறன்

(ரூ. இலட்சம்)

| ஆலையின் பெயர் | 2021– 22 | | | 2022 – 23 (தற்காலிகம்) | | |
|---|---|---|---|---|---|---|
| | உற்பத்தி (மெ.டன்) | விற்பனை (மெ.டன்) | நிகர இலாபம்/ நட்டம் | உற்பத்தி (மெ.டன்) | விற்பனை (மெ.டன்) | நிகர இலாபம்/ நட்டம் |
| அரியலூர் சிமெண்ட் ஆலை – பழைய ஆலை | 4,69,230 | 4,71,970 | 2,886.04 | 4,88,636 | 4,85,844 | 4,081.92 |
| அரியலூர் சிமெண்ட் ஆலை – புதிய ஆலை | 7,29,997 | 7,32,895 | 7,338.39 | 9,62,685 | 9,59,618 | 8,306.68 |
| ஆலங்குளம் சிமெண்ட் ஆலை | 2,76,100 | 2,79,826 | 1,656.97 | 3,55,160 | 3,51,934 | 3,105.39 |
| ஆலங்குளம் கல்நார் தகடு ஆலை | – | – | –11.87 | – | – | –22.25 |
| விருத்தாசலம் கற்குழாய் ஆலை | – | – | –36.63 | – | – | –38.98 |
| அம்மா சிமெண்ட் வழங்கும் திட்டம் | 2,55,415 | 2,55,586 | –63.54 | 2,80,485 | 2,80,159 | 33.13 |
| | | மொத்தம் | 11,769.36 | | | 15,465.89 |

## 6.10 ISO தர சான்றிதழ்

டான்செம் நிறுவனம், தரத்திற்காக வழங்கப்படும் ISO: 9001 – 2015 தர சான்றிதழை பதிவு அலுவலகத்திற்கு 13.09.2022 அன்றும், அரியலூர் சிமெண்ட் ஆலைக்கு 10.01.2023 அன்றும் மற்றும் ஆலங்குளம் சிமெண்ட் ஆலைக்கு 02.02.2023 அன்றும் பெற்றுள்ளது. இதன் மூலம் சிமெண்டின் தரம் உறுதி செய்யப்படுவதுடன், திறந்த வெளிச்சந்தையில் டான்செம் நிறுவனத்தின் மதிப்பு உயர்ந்துள்ளது.

## 7. தமிழ்நாடு உப்பு நிறுவனம்

தமிழ்நாடு உப்பு நிறுவனம், தமிழ்நாட்டில் இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள மக்களுக்கு வேலை வாய்ப்பினை வழங்கி, அவர்களின் சமூக, பொருளாதார நிலையினை மேம்படுத்திடும் நோக்கில் 1974ஆம் ஆண்டு துவங்கப்பட்டது. இந்நிறுவனத்தின் முக்கிய செயல்பாடுகள், உப்பு மற்றும் உப்பின் உடன் விளை பொருட்களை உற்பத்தி செய்து நியாயமான விலையில் விற்பனை செய்வது. தமிழ்நாடு உப்பு நிறுவனம் ஒன்று மட்டுமே இந்திய அளவில் மாநில அரசுக்கு சொந்தமான உப்பு மற்றும் உப்பு சார்ந்த உற்பத்தியில் ஈடுபட்டுள்ள அரசு நிறுவனமாகும். தமிழ்நாடு அரசு, இராமநாதபுரம் மாவட்டம், கடலாடி வட்டத்தில் உள்ள வாலிநோக்கம் மற்றும் சுற்றியுள்ள கிராமங்களைச் சார்ந்த 5,236 ஏக்கர் நிலம் மற்றும் கூடுதலாக செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர் வட்டத்தில் 3,010 ஏக்கர் நிலத்தினை 2019–ஆம் ஆண்டில் நீண்ட கால குத்தகைக்கு தமிழ்நாடு உப்பு நிறுவனத்திற்கு வழங்கியது.

இந்நிறுவனம், 1978ஆம் ஆண்டு முதல், இராமநாதபுரம் மாவட்டத்தில் வணிக அடிப்படையில் உப்பு உற்பத்தியினைத் துவங்கியது. இதில் தொழிலக

தரமுடைய உப்பு, அயோடின் உப்பு, இரும்பு மற்றும் அயோடின் கலந்த உப்பு ஆகியவை அடங்கும்.

## 7.1 நிறுவனத்தின் செயல்பாடுகள்

### 7.1.1 தொழிலக தரமுடைய உப்பு உற்பத்தி

**அ) மாரியூர் – வாலிநோக்கம் உப்பு வளாகம், இராமநாதபுரம் மாவட்டம்**

2022–23ஆம் ஆண்டு 1,30,870 டன் உப்பு உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. வாலிநோக்கம் உப்பு வளாகத்தில் 2023–24ஆம் ஆண்டில் 1.60 இலட்சம் டன் உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

**ஆ) திருப்போரூர் உப்பு உற்பத்தி, செங்கல்பட்டு மாவட்டம்**

தமிழ்நாடு அரசு திருப்போரூர் பகுதியில் 3010 ஏக்கர் நிலத்தினை தமிழ்நாடு உப்பு நிறுவனத்திற்கு குத்தகை அடிப்படையில் வழங்கியுள்ளது. தமிழ்நாடு உப்பு நிறுவனம் முதல் கட்டமாக 500 ஏக்கர் பரப்பளவில் உப்பு தொழிற்சாலை நிறுவி உள்ளது. உப்பு உற்பத்தி 2022 ஆண்டு ஜூன் மாதம் முதல் துவங்கப்பட்டுள்ளது. எனினும், பருவம் தவறிய மழை மற்றும் தொடர் மழையினால் உப்பு உற்பத்தி தொடர முடியவில்லை. 2023–24ஆம் ஆண்டிற்கான உப்பு உற்பத்திக்கான ஆயத்த பணிகள் தொடங்கப்பட்டுள்ளது.

### 7.1.2 செறிவூட்டப்பட்ட உப்பு உற்பத்தி

மாரியூர் – வாலிநோக்கம் உப்பு வளாகத்தில் செறிவூட்டப்ட்ட உணவு உப்பு வகைகளான அயோடின் கலந்த கல் உப்பு, சுத்திகரிக்கப்பட்ட அயோடின் கலந்த தூள் உப்பு மற்றும் இருவித செறிவூட்டப்பட்ட உப்பு ஆகியவை உற்பத்தி செய்யப்படுகின்றது. தமிழ்நாடு உப்பு நிறுவனம் சரியான அளவில் செறிவூட்டப்பட்ட அயோடின் உப்பு IS 7224:2006 தரப்படி தயாரித்து நியாயமான விலையில் பொது விநியோகத் திட்டத்தில் வழங்கி வருகிறது. மொத்த உற்பத்தியில் சுமார் 30 விழுக்காடு உப்பு, பொது விநியோக திட்டத்தின் மூலம் விநியோகிக்கப்படுகின்றது. 2022–23ஆம் ஆண்டில் 23,716 டன் உப்பு, பொது விநியோக திட்டம் மூலம் விநியோகிக்கப்பட்டுள்ளது. இந்நிறுவனம் இரும்பு மற்றும் அயோடின் பற்றாக்குறையுடைய சிறார்களுக்கு இரும்பு மற்றும் அயோடின் கலந்த இருவித செறிவூட்டப்பட்ட உப்பு உற்பத்தி செய்து, பள்ளி மதிய உணவு திட்டத்திற்கும், அங்கன்வாடி மையங்களுக்கும் வழங்குகிறது. 2022–23ஆம் ஆண்டில் 1,794 டன் இருவித செறிவூட்டப்பட்ட உப்பு பள்ளி மதிய உணவு திட்டத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

### 7.1.3 இயந்திரம் மூலம் உப்பு உற்பத்தி

உப்பு உற்பத்தியை பெருக்க, மனித உழைப்பின் மூலம் உப்பு உற்பத்தி செய்வதுடன், இயந்திரங்களைக் கொண்டு உப்பு அறுவடை செய்யும் முறை 2020-21ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது. முதற்கட்டமாக 30 ஏக்கரில் இப்பணிகள் மேற்கொள்ளப்பட்டன. 2021-22ஆம் ஆண்டு சட்டமன்ற அறிவிப்பின்படி, மேலும் 80 ஏக்கரில் இயந்திரங்களைக் கொண்டு உப்பு அறுவடை செய்யும் பணி வாலிநோக்கம் திட்டத்தில் மேற்கொள்ளப்பட்டது. 2022-23ஆம் ஆண்டு இந்நிறுவனம் இயந்திரம் மூலம் உப்பு உற்பத்தி செய்யும் முறையில் வாலிநோக்கத்தில் 15,836 டன் உப்பு உற்பத்தி செய்துள்ளது. இதேமுறை திருப்போரூர் உப்பு தொழிற்சாலையிலும் பின்பற்றப்படும்.

### 7.1.4 உப்பு சுத்திகரிப்பு நிலைய செயல்பாடு

2017 ஆண்டில் டாடா அறக்கட்டளையின் சமூக கூட்டாண்மை பொறுப்புணர்வு திட்டநிதி உதவியுடன் புதிய உப்பு சுத்திகரிப்பு நிலையத்தினை தமிழ்நாடு உப்பு நிறுவனம் அமைத்துள்ளது. 2022-23ஆம் ஆண்டு இச்சுத்திகரிப்பு நிலையத்தின் மூலம் 6,288 டன் செறிவூட்டப்பட்ட உப்பு உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

இத் தொழிற்சாலையில் தரநிர்ணயத்தின்படி, தரமான உப்பு உற்பத்தி செய்யப்படுகின்றது.

## 7.2 தமிழ்நாடு உப்பு நிறுவன தரச்சான்றிதழ்கள்

தமிழ்நாடு உப்பு நிறுவனம், அயோடின் உப்பு மற்றும் இருவித செறிவூட்டப்பட்ட உப்பினை IS 7224: 2006 மற்றும் IS 16232: 2014 ஆகிய தரத்தின்படி உற்பத்தி செய்ய தரச்சான்றிதழ் பெற்றுள்ளது. ISO 9001 : 2015 தரச்சான்று பெற்ற நிறுவனமாக தமிழ்நாடு உப்பு நிறுவனம் விளங்குகின்றது.அதே போல அயோடின் உப்பு மற்றும் இருவித செறிவூட்டப்பட் உப்பு ஆகியவற்றை உற்பத்தி செய்ய இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தரநிர்ணய ஆணையத்தின் சான்றிதழினையும் பெற்றுள்ளது.

## 7.3 2022–23ஆம் ஆண்டின் விற்பனை நடவடிக்கை

| வ. எண் | விவரம் | விற்பனை (டன்னில்) |
|---|---|---|
| 1 | தொழிலக தரமுடைய உப்பு | 1,00,810 |
| 2 | அயோடின் கலந்த கல் உப்பு | 19,796 |
| 3 | சுத்திகரிக்கப்பட்ட அயோடின் கலந்த தூள் உப்பு | 4,257 |
| 4 | சுத்திகரிக்கப்பட்ட அயோடின் கலக்காத தூள் உப்பு | 241 |
| 5 | இருவித செறிவூட்டப்பட்ட உப்பு | 1,794 |

தமிழ்நாடு உப்பு நிறுவனம் 2022–23ஆம் ஆண்டில் தோரயமாக ரூ.40.70 கோடி விற்றுமுதல் எய்திட உள்ளது.

## 7.4 2022–23ஆம் ஆண்டிற்கான நிதிநிலை செயல்பாடுகள் (தற்காலிகம்)

| வ. எண் | விவரம் | ரூபாய் இலட்சத்தில் |
|---|---|---|
| 1 | **வரவு** | |
| 2 | இயக்கபணிமூலம் கிடைத்த வருவாய் | 4051.00 |
| 3 | இதர வருவாய் | 27.82 |
| | உப்புமற்றும் பண்டகசலை இருப்பு மதிப்பு | 113.98 |
| | **மொத்தம்** | **4192.80** |
| | **செலவு** | |
| | இயக்கபணிக்கான செலவுகள் | 3335.96 |
| | **செயல்பாட்டு இலாபம்** | **856.84** |
| | தேய்மானம் | 221.65 |
| | **நிகர இலாபம்** | **635.19** |

## 7.5 வெளிச்சந்தையில் நெய்தல் உப்பு விற்பனை துவக்கம்

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களின் சட்டமன்ற அறிவிப்பின்படி தமிழ்நாடு உப்பு நிறுவனம் அயோடின் கலந்த கல் உப்பு மற்றும் சுத்திகரிக்கப்பட்ட அயோடின் கலந்த தூள் உப்பு

ஆகியவற்றை "நெய்தல் உப்பு" என்ற புதிய வணிகப் பெயரில் வெளிச்சந்தையில் அறிமுகப்படுத்தியுள்ளது. இந்நிறுவனம் சென்னை மற்றும் பிற மாவட்டங்களில் மொத்த விற்பனையாளர்களை நியமித்து விற்பனையினை துவக்கியுள்ளது. நெய்தல் உப்பு விற்பனையை மேம்படுத்த தமிழ் நாடு உப்பு நிறுவனம் மாவட்டங்களில் நியமித்துள்ள விற்பனை மேம்பாட்டாளர்களின் மூலமாகவும் தொடர் முயற்சி எடுத்து வருகிறது. கூட்டுறவுத்துறையால் நடத்தப்படும் அமுதம் போன்ற அங்காடிகளிலும் நெய்தல் உப்பு விற்பனை செய்யப்படுகின்றது.

## 7.6 வேலைவாய்ப்பு

தமிழ்நாடு உப்பு நிறுவனம் 1,250 நபர்களுக்கு நேரடியாகவும், 500 நபர்களுக்கு மறைமுகமாகவும் வேலைவாய்ப்பினை வழங்கி வருகின்றது. இராமநாதபுரம் மாவட்டம், வாலிநோக்கம் கிராமத்தை சுற்றியுள்ள கிராமங்களைச் சேர்ந்த மக்கள் தமிழ்நாடு உப்பு நிறுவனம் மூலம் பயனடைந்து வருகின்றனர்.

## 7.7 தொழிலாளர்களுக்கான நலத்திட்டம் மற்றும் அடிப்படை வசதிகள்

தமிழ்நாடு உப்பு நிறுவனம், தொழிலாளர்களுக்கான நலத்திட்டம் மற்றும் அடிப்படை வசதிகளைப் வழங்கி வருகின்றது.

- அரசு நிர்ணயித்த குறைந்த பட்ச ஊதியம், போனஸ் மற்றும் பஞ்சப்படி
- சட்டப்பூர்வமாக கிடைக்க வேண்டிய நன்மைகளான ஊதியத்துடன் கூடிய விடுப்பு, பணிக்கொடை, ஊழியர் வருங்கால வைப்பு நிதி போன்றவை.
- தொழிலாளர்கள் பணிக்காலத்தில் மரணமடைந்தால் வாரிசுதாரருக்கு இழப்பீட்டு தொகையாக ரூ.1 இலட்சம்.
- தொழிலாளர் பாதுகாப்பிற்காக கருப்பு நிற மூக்குக்கண்ணாடிகள், காலணிகள் மற்றும் மேல்துண்டு.
- குறிப்பிட்ட கால இடைவெளியில் மருத்துவ முகாம்கள் மற்றும் மருந்தக வசதி.
- சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் மற்றும் கழிப்பிட வசதிகள்.

## 7.8 தமிழ்நாடு உப்பு நிறுவனம் – மாநில அளவிலான ஒருங்கிணைப்பு அமைப்பு

உப்பு உற்பத்தி தொடர்பான பிரச்சனைகள் குறித்து கவனித்திடவும், உப்பு தொழிலில் ஒருங்கிணைப்பை ஏற்படுத்தும் முகமையாக தமிழ்நாடு உப்பு நிறுவனத்தினை, தமிழ்நாடு அரசு நியமித்துள்ளது. தமிழ்நாட்டில் ஆண்டிற்க்கு 24 இலட்சம் டன் உப்பு உற்பத்தி செய்யப்படுகிறது. தமிழ்நாட்டில் 9 கடலோர மாவட்டங்களில் உப்பு உற்பத்தி நடைபெறுகின்றது. மாநிலத்தில் மொத்தம் 4,100 க்கும் மேற்பட்ட சிறு, நடுத்தர மற்றும் பெரிய அளவிலான உப்பு உற்பத்தியாளர்கள் இதில் ஈடுபட்டுள்ளனர். மாநிலத்தில் 48,000 ஏக்கருக்கும் மேற்பட்ட அரசு மற்றும் தனியார் நிலங்கள் உப்பு உற்பத்தி செய்ய பயன்படுத்தப்படுகிறது.

## 7.9 உப்பளத் தொழிலாளர்கள் குடும்பங்களுக்கு மழைக்கால நிவாரணம் வழங்கும் திட்டம்

உப்பளத் தொழில் ஒரு பருவ கால தொழிலாகும். உப்பளத் தொழிலாளர்களுக்கு ஓராண்டில் 9 மாதங்கள் மட்டுமே வேலைவாய்ப்பு கிடைக்கும். மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் உப்பளத் தொழிலாளர் குடும்பங்களுக்கு மழைக்கால நிவாரணமாக ஆண்டிற்கு ரூ.5,000/– வழங்கப்படும் என்று அறிவித்தார்கள்.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் இத்திட்டத்தினை 12.08.2022 அன்று துவக்கி வைத்தார்கள். தமிழ்நாடு உடலுழைப்பு தொழிலாளர்கள் சமூக பாதுகாப்பு மற்றும் நலவாரியத்தில் பதிவு செய்த 6,472 உப்பளத் தொழிலாளர் குடும்பங்களுக்கு ரூ.3.23 கோடி நிவாரணத் தொகையினை 2021–22ஆம் ஆண்டிலும் மற்றும் 6370 உப்பளத் தொழிலாளர் குடும்பங்களுக்கு ரூ.3.18 கோடியும் 2022–2023ஆம் ஆண்டிற்கும் வழங்கப்பட்டுள்ளது.

## 7.10 2023–24ஆம் ஆண்டிற்கான செயல்திட்டம்:

### (i) உற்பத்தி

அ) வாலிநோக்கம் திட்டம் – 1,55,000 டன்

ஆ) திருப்போரூர் திட்டம் – 5,000 டன்

### (ii) விற்பனை

| வ. எண் | விவரம் | விற்பனை (டன்) |
|---|---|---|
| 1 | தொழிலக தரமுடைய உப்பு | 1,17,000 |
| 2 | அயோடின் கலந்த கல் உப்பு | 28,000 |
| 3 | சுத்திகரிக்கப்பட்ட அயோடின் கலந்த தூள் உப்பு | 12,000 |
| 4 | இருவித செறிவூட்டப்பட்ட உப்பு | 3,000 |
| | **மொத்தம்** | **1,60,000** |

இதன் மூலம் 2023–24ஆம் ஆண்டில் ரூ.50 கோடி விற்றுமுதல் எய்திடத் திட்டமிடப்பட்டுள்ளது.




மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் “நெய்தல் உப்பு” வெளிச்சந்தை விற்பனையினை 12.08.2022 அன்று துவக்கி வைத்தார்கள்

Blank

## முடிவுரை

தமிழ்நாடு, தனது ஜனநாயக மற்றும் சமூக நீதி சார்ந்த பொதுநல ஆட்சி முறையின் மூலம், அனைவரையும் உள்ளடக்கிய பொருளாதார மற்றும் அரசியலமைப்புகளை உருவாக்கி, அதை நிலை நிறுத்தியும் வருகிறது. வருங்கால மாற்றங்களுக்கு ஏற்றவாறு தொழில்களை உருவாக்கி நிலைநிறுத்துவதற்காக, மனித மூலதன வளத்தை விரிவுபடுத்துதல், புத்தாக்கங்களையும், புதுமையான உத்திகளையும் உறுதி செய்தல், புதிய சந்தை வாய்ப்புகளின் வளர்ச்சியை ஆதரித்தல் போன்ற பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

இவ்வாறான இலக்குகளை அடைவதற்கான தொலைநோக்குப் பார்வையும், இலக்குகளை அடைதலும், பொருளாதார மையம் என்ற தமிழ்நாட்டின் நிலையை மேலும் வலுப்படுத்தியதோடு மட்டுமின்றி, உலகளாவிய வர்த்தகத்துடன், நமது மாநிலத்தை மிக ஆழமாக இணைத்துள்ளது. அதுபோலவே, மாநிலத்தில் செயல்படுத்தப்படும் தொழில் கொள்கைகளின் மூலம், பசுமைத் தொழில் நுட்பம் மற்றும் நடைமுறைகளைப் பின்பற்றுவோர்க்கு ஊக்கத்தொகுப்புச் சலுகைகள் அளித்து, அந்நடைமுறைகள் பின்பற்றுவதை உறுதி

செய்வதன் மூலம், தமிழ்நாடு சுற்றுச்சூழல் மேம்பாட்டில் முன்னணி மாநிலமாகத் திகழ்கிறது.

தொழில் துறையில் பின்பற்றப்படும் பல்வேறு தொடர் நடவடிக்கைகளின் மூலம், மாநிலம் தனது இரட்டை இலக்குகளான 2030ஆம் ஆண்டுக்குள் 1 டிரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதாரம் மற்றும் இந்திய அளவில் மட்டுமின்றி தென்கிழக்கு ஆசியாவில் முதலீட்டுக்கான மிகச்சிறந்த இடமாக உருவாகின்ற நிலையினை நிச்சயம் எய்தும்.

பணிபுரியும் தொழிலாளர்கள் மற்றும் ஊழியர்களின் தேவைகளைப் புரிந்து தொடர்ந்து செயல்பட தொடர் முயற்சிகள் மேற்கொள்ளப்படும். இதை மேலும் வலுப்படுத்தும் வகையில், சமூக ஆளுமைத் துறையில் உள்ள முன்னணி முகமைகள் மற்றும் அமைப்புகளுடன் இணைந்து செயலாற்றி, புதுமையான உத்திகளும் தீர்வுகளும் அடையாளம் காணப்பட்டு, அவற்றின் மூலமாக தொழில் பணியாளர்கள் / ஊழியர்கள் வாழ்க்கைத் தரம், உள்ளடக்கிய வளர்ச்சி ஆகியவற்றை மேம்படுத்த உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

இறுதியாக, புதுமையான சிந்தனைகளையும் தீர்வுகளையும் ஏற்று அவற்றினை செயல்படுத்துவது, மாநிலத்தின் எதிர்கால தொழில் வளர்ச்சி மற்றும்

நிலைத்தன்மைக்கு இன்றியமையாததாகக் கருதப்படுகிறது. இதன் பொருட்டு, ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையங்கள், புத்தொழில்கள் மற்றும் தொழிற்சாலைகளுக்கு இடையே இணைப்புகளை உருவாக்கும் வகையில் பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. புத்தாக்கம், ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கு உலகளாவிய மற்றும் உள்நாட்டு அறிவுசார் விற்பன்னர்களுடன் இணைந்து செயல்திறனுடைய சமூகத்தை உருவாக்குதல் மற்றும் இவற்றை நிலை நிறுத்தும் நிறுவன செயல்முறைகள் மேம்பட்ட உற்பத்திக்கான மாநிலத்தின் முக்கிய கவனம் செலுத்தும் பகுதியாக விளங்கும்.

**தங்கம் தென்னரசு**
தொழில் துறை அமைச்சர்

அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை–600 001.